ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

ஆவணி

ஆகஸ்ட் - 1979



விலை

ரூ-1

ஸ்ரீராமகிருஷ்ண மடம்,

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

பரபரப்பும் ஆரவாரங்களும் நிறைந்த தற்காலச் சூழ்நிலையில், மக்களுக்கு மனச் சாந்தியைத் தரும் அருமருந்தாக இப்பத்திரிகை விளங்குகிறது.

தற்கால மக்களின் ஆன்மிக மறுமலர்ச்சிக்கு ஏற்ற வகையில் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் குரலாக ஸ்ரீராம கிருஷ்ண விஜயம் ஒலிக்கிறது.

உங்கள் உள்ளம் உயர, நீங்கள் மேன்மையுற, அவசியம் படிக்கவேண்டிய பத்திரிகை இது.

சந்தா விவரம்

வருட சந்தா (சிறப்பு மலர் உட்பட)	ரூ. 10
ஆயுள் சந்தா	ரூ. 125
தனிப் பிரதி	ரூ. 1

ஆயுள் சந்தாவை மொத்தமாகவோ, பகுதி பகுதியாகவோ, மாதம் ரூ. 10 ஆகவோ செலுத்தலாம்.

ஆயுள் சந்தாதாரர்களாகத் தங்களைப் பதிவு செய்துகொள்ள விரும்பும் வருட சந்தாதாரர்கள், தாங்கள் செலுத்தியுள்ள வருட சந்தாவைக் கழித்து மீதம் உள்ள தொகையைச் செலுத்தி, ஆயுள் சந்தாதாரராகத் தங்களைப் பதிவு செய்துகொள்ளலாம்.

ஒரு வேண்டுகோள்

1. பேரன்பிற்குரிய வாசக அன்பர்கள் தங்களின் சந்தாவைச் செலுத்துவதுடன், மேலும் தமது நண்பர்கள் சிலரையும் சந்தாதாரர்களாகச் சேர்த்துத் தருவது ஒரு நல்ல தொண்டாகும். இதன் மூலம் நமக்கும் மற்றவர்களுக்கும் நாம் நன்மையைச் செய்துகொள்கிறோம்.

2. சந்தாதாரர்களை அதிகப்படுத்துவதில் எங்களால் இயன்ற முயற்சி செய்து வருகிறோம். அன்பர்கள் தங்களின் பங்காக இந்தத் தெய்விகக் கைங்கரியத்தில் கல்வி ஸ்தாபனங்கள், சத்சங்கங்கள் முதலியவைகளுக்குப் பத்திரிகை போய்க் கொண்டிருக்கும்படி செய்யலாம். இது ஒவ்வொரு மாதமும் தாங்கள் அளிக்கும் மேலான நன்கொடையாகவும், தங்களை ஞாபகப் படுத்தும் சிறந்த வெகுமதியாகவும் அமையும்.

3. பெரியோர்கள் இந்த வேண்டுகோளைத் தங்களுக்கு ஏதோ சம்பந்தமில்லாதது என்று புறக்கணித்துவிடாமல், மேலும் சந்தாதாரர்களைச் சேர்த்துத் தரும் விஷயத்தில் தங்களால் இயன்ற ஒரு சிறிதளவிற்காகிலும் முயற்சி செய்வார்கள் என்று நம்புகிறோம். குறைந்தது மூன்று சந்தாதாரர்களையாவது சேர்த்துத் தருவது மிகப் பெரிய உபகாரமாக இருக்கும். இதன் மூலம் இன்றைய சமுதாயத்தின் சூழ்நிலையில் நல்ல கருத்துகள் வளர அரும்பெரும் தொண்டு செய்தவர்களாகிறீர்கள்.

4. புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பி வைக்கும்போது, புதிய சந்தா என்று குறிப்பிட்டு எழுதும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். பழைய சந்தாதாரர்கள், தமது கடிதப் போக்குவரத்துகள் எல்லாவற்றிலும் சந்தா எண்ணையும் முழு விலாசத்தையும் அவசியம் குறிப்பிட்டு எழுத வேண்டுகிறோம்.

விவரங்களுக்கு :

தொலைபேசி : 71231

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம் காரியாலயம்
ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்
மயிலாப்பூர் : சென்னை-600 004

A MUCH AWAITED BOOK NOW ON SALE!

VIVEKACHUDAMANI
OF SRI SAMKARA BHAGAVATPADA
WITH A JIVANMUKTHA'S COMMENTARY

The English translation of the Sanskrit Commentary of H. H. Jagadguru Sri Chandrasekhara Bharati of Sringeri Sarada Peeth by Prof. P. Sankaranarayanan.

Printed on superior Map Litho Paper, Royal Octavo Size, pp. 528, Full cloth bound with art plates and jacket in colours.

Second edition, revised and enlarged
Price Rs. 95/-

Vivekachudamani is a philosophical treatise expounding the cardinal truths of Advaita Vedanta, according to which, liberation or Moksa can be secured only through Jnana which, in the first instance, begins with the discrimination between the eternal and the transient, nityanityavastu-viveka. The work itself is called the "Viveka - Chudamani" to emphasise the paramount importance of such viveka in the quest for liberation.

Available from :
BHARATIYA VIDYA BHAVAN
Kulapati K. M. Munshi Marg
BOMBAY - 400 007
And its Branches

ஸ்ரீசங்கர க்ருபா

ஸ்ரீ தக்ஷிணாம்னாய சிருங்ககிரி ஸ்ரீ சாரதா பீடாதிபதி
ஜகத்குரு ஸ்ரீ மஹாஸ்வாமிகள் அவர்களின் பரமானுக்ரஹத்துடன் வெளியாகும்

தமிழ் மாதப் பத்திரிகை

ஆசிரியர் : ஸ்ரீ K. V. சுப்பரத்னம், B.A., B.L.
உதவி ஆசிரியர் : வியாகரண சிரோமணி
ஸ்ரீ K. S. ராதாகிருஷ்ண சாஸ்திரிகள்

இப் பத்திரிகை 1959 ஜூலையில் ஆரம்பிக்கப்பட்டது. 1979 ஜூனில் 20வது ஆண்டு முடிந்து இப்பொழுது 21-வது ஆண்டு நடைபெறுகிறது. ஆதிசங்கரர் உபதேசங்கள், உபநிஷத், கீதை, புராணம், பக்திப்பாடல்கள் இவைபற்றிப் பிரபல அறிஞர்களின் சிறந்த கட்டுரைகளும், ஸம்ஸ்கிருத பாடங்களும், தமிழ் உரையுடன் ஸ்தோத்திரங்களும் வெளியாகின்றன.

வருஷச் சந்தா (தபால் செலவு உள்பட) இந்தியா ரூ. 8/-

வெளிநாடுகளுக்கு ரூ. 20/- ஆயுள் சந்தா (இந்தியா) ரூ. 100/-
வெளிநாடுகளுக்கு ரூ. 150/-

Apply to : K. R. வெங்கடேசய்யர், B.A., L.T.,
மானேஜர், "ஸ்ரீ சங்கர க்ருபா" C/o ஸ்ரீ சங்கர குருகுலம்,
97, அம்மாமண்டபம் ரோடு, ஸ்ரீரங்கம், திருச்சிராப்பள்ளி-620 006

Acc-No-38700 1.8/79.

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

தொகுதி –59 | ஆகஸ்ட் 1979 | இதழ்—8

பொருளடக்கம்

More and More Homes
Now subscribe to their family favourite

YUVA BHARATI

Editor : **EKNATH RANADE**

A Vivekananda Kendra Publication

Now entering its seventh year of service
With a re-orientation in its contents and get up
Scintillating Articles-Short Stories-penportraits of Great Leaders-Parables-one Act plays-Sports and Pastime-Book Reviews, Poems etc.

ENSURE A REGULAR SUPPLY

by becoming a subscriber, today with Manager, Yuva Bharati,
3, Singarachari Street, Triplicane, MADRAS-600 005

Tel : 842 843

Single Copy Re. 1/- Annual Subscription: Inland : Rs. 11/- Foreign (By Sea Mail) Rs. 35/-

தேசிய சிந்தனைக்கு சிறந்த மாத இதழ்

விற்பனையாளர்கள் தேவை

சர்வோதயம்

ஆசிரியர் : வெ. இராமச்சந்திரன்

காந்திய–நிறுவனத்தின் ஒரே மாத இதழ்
காந்திய–சர்வோதயக் கட்டுரைகள், கிராமப் பொருளாதார ஆய்வுகள், இலக்கியம், இயற்கை மருத்துவக் கட்டுரைகள், தேசியத் தலைவர்களின் வாழ்க்கை வரலாறுகள், கதர்ப் பணி குறித்த புள்ளி விபரங்கள், சிந்தனை விருந்தளிக்கும் செய்திகள், கவிதைகள் ஆகியவை வெளிவருகின்றன.

சந்தா விபரம்

ஆண்டு சந்தா	ரூ.	12
ஆறு மாதம்	ரூ.	6
தனி இதழ்	ரூ.	1
ஆயுள் சந்தா	ரூ.	150

எழுத்தோவியங்கள் வரவேற்கப்படுகின்றன

விபரங்களுக்கு :

ஆசிரியர் : 'சர்வோதயம்'
கதர் கிராமோத்யோக் பவன்,
162, என். எச். ரோடு
கோயமுத்தூர்–641 001

ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்

இந்து தர்ம பிரசாரத்திற்கான

ஒரு மாதாந்திர பத்திரிகை

ஆஸ்திக பெருமக்கள் கிரஹங்களில் இருக்கவேண்டிய பத்திரிகை.

இதில் பிரசுரமாகும் விஷயம் ஹிந்து தர்மம், கலாசாரம், மற்றும் பிராசீன கிரந்தங்களிலிருந்து வெளிவருவது,

வருட சந்தா	ரூ.	10
ஆயுள் சந்தா	ரூ.	100

ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்
11, பிரான்ஸிஸ் ஜோசப்புத் தெரு,
சென்னை–600 001

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமன் இல்லை

—திருமூலர்

தொகுதி 59 || சித்தார்த்தி ஞ ஆவணி மீ || இதழ் 8

பிரார்த்தனை

प्रेमदं च मे कामदं च मे वेदनं च मे वैभवं च मे ।
जीवनं च मे जीवितं च मे दैवतं च मे देव नापरम् ॥

ப்ரேமதம் ச மே காமதம் ச மே வேதநம் ச மே வைபவம் ச மே |
ஜீவநம் ச மே ஜீவிதம் ச மே தைவதம் ச மே தேவ நாபரம் ||

- ஸ்ரீகிருஷ்ண கர்ணாம்ருதம்

இறைவனே! உன்னையன்றி என்னிடம் அன்பு செலுத்துபவர் வேறு யாருமில்லை. என் விருப்பங்களைப் பூர்த்தி செய்பவனும் நீயே. எனக்கு அறிவைக் கொடுப்பவனும் செல்வத்தைக் கொடுப்பவனும் நீயே. உன்னையன்றிப் பிறிதொரு வாழ்க்கையோ, மற்றொரு தெய்வமோ எனக்குக் கிடையாது.

அகரமென அறிவாகி உலக மெங்கும்
அமர்ந்து அகர உகர மகரங்கள் தம்மால்
பகரும் ஒரு முதலாகி வேறுமாகிப்
பலவேறு திருமேனி தரித்துக் கொண்டு
புகரில்பொருள் நான்கினையும் இடர்தீர்ந் தெய்தப்
போற்றுநருக்கு அறக்கருணை புரிந்தல் லார்க்கு
நிகரில்மறக் கருணைபுரிந்து ஆண்டு கொள்ளும்
நிருமலனைக் கணபதியை நினைந்து வாழ்வாம்.

—விநாயக புராணம்



ஸ்ரீராமகிருஷ்ணரின் அருள் வாக்கு

சனிக்கிழமை, ஜூன் 2, 1883

இன்றைய தினம் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரைத் தமது வீட்டிற்கு ராமசந்திரர் அழைத்திருந்தார். குருதேவரின் வருகையை ஒரு விழாவாகக் கொண்டாட அவர் ஏற்பாடு செய்திருந்தார்.

ஸ்ரீராமகிருஷ்ணதேவர் தமது வீட்டுக்கு வரும்போது, ஸ்ரீமத் பாகவதம் சொல்லப்படுவதை அவர் கேட்க வேண்டும் என்பதற்காக ராமசந்திரர் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

ராமசந்திரர் வீட்டின் சிறிய தாழ்வாரத்தில் ஸ்ரீமத் பாகவதம் சொல்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த இடத்தை நன்கு அலங்கரித்திருந்தார்கள். அங்கிருந்த சிறிய ஒரு மேடையின் மீது பாகவத பண்டிதர் அமர்ந்திருந்தார். அரிச்சந்திர மகாராஜாவின் கதையை அவர் சொல்வதாக இருந்தார். அப்போது பலராமின் வீட்டிற்கும் அதருடைய வீட்டிற்கும் சென்றுவிட்டு ஸ்ரீராமகிருஷ்ணர் அங்கு வந்து சேர்ந்தார். குருதேவரைக் கண்டதும் ராமசந்திரர் விரைந்து சென்று குருதேவரை வணங்கி, அவருடைய பாததூளியைச் சிரசில் தரித்துக் கொண்டார். பிறகு அவர் குருதேவரைத் தம்முடன் அழைத்துச் சென்று மேடையின் முன்னால் ஏற்கனவே குருதேவருக்காகப் போட்டிருந்த ஆசனத்தில் அவரை அமரச் செய்தார். குருதேவரைச் சுற்றிலும் பல பக்தர்கள் அமர்ந்திருந்தார்கள். ம-வும் அருகில் இருந்தார்.

பாகவத பண்டிதர் ராஜா அரிச்சந்திரனின் கதையைச் சொல்ல ஆரம்பித்தார்:

விசுவாமித்திர முனிவர் மன்னனிடம் சொன்னார்: "அரசே! கடல்சூழ்ந்த பூமி முழுவதையும் நீங்கள் எனக்குத் தானமாகக் கொடுத்து விட்டீர்கள். எனவே இந்த உலகில் உங்களுக்கு இனியும் இடம் கிடையாது. ஆனால், சிவபெருமானுக்குச் சொந்தமான காசி க்ஷேத்திரத்தில் வேண்டுமானால் நீங்கள் தங்கியிருக்கலாம். புறப்படுங்கள், உங்களையும் உங்கள் மனைவியாகிய சந்திரமதியையும் மகன் லோகிதாசனையும் நான் காசி க்ஷேத்திரத்திற்குக் கொண்டுபோய்ச் சேர்க்கிறேன். அங்கே சென்று நீங்கள் எனக்குத் தர வேண்டிய தட்சிணையைச் சம்பாதித்துக் கொடுங்கள்." இவ்விதம் சொல்லிவிட்டு அரிச்சந்திரன், சந்திரமதி, லோகிதாசன் ஆகியோரை அழைத்துக்கொண்டு விசுவாமித்திரர் காசி க்ஷேத்திரத்தை நோக்கிப் பிரயாணம் செய்தார். காசியை அடைந்ததும் அவர்கள் அனைவரும் காசி விசுவநாதரைத் தரிசனம் செய்தார்கள்.

காசி விசுவநாதரைத் தரிசித்த வரலாறு சொல்லப்பட்டவுடனே, குருதேவர் ஒரேயடியாகத் தெய்விகப் பரவசத்தில் ஆழ்ந்தார். அந்த நிலையில் அவர் 'சிவ, சிவா' என்று உச்சரித்தார். ஆனால் பரவச நிலையில் இருந்தது காரணமாக அவரால் சிவநாமத்தை அவ்வளவு தெளிவாக உச்சரிக்க இயலவில்லை.

பாகவத பண்டிதர் மேலும் தொடர்ந்து கூறினார்:

"காசிக்குச் சென்ற பிறகும், அரிச்சந்திர மன்னனால் தட்சிணையைக் கொடுக்க முடியவில்லை எனவே சந்திரமதியை ஒரு பிராம்மணனுக்கு வேலையாளாக விற்றுவிட்டான். இளவரசனாகிய லோகிதாசனும் சந்திரமதியுடன் சென்றான்."

சந்திரமதியின் பிராம்மண எஜமானரின் வீட்டில் லோகிதாசன் பூப்பறித்துக் கொண்டிருந்தபோது, அவனைப் பாம்பு கடித்த வரலாற்றைப் பாகவதர் கூறினார்:

"இருள் சூழ்ந்த அந்த நள்ளிரவில் குழந்தை இறந்து போய்விட்டான். ஈமக்கடன் செய்வதற்கு ஒருவரும் இல்லை. பிராம்மண எஜமானராகிய

கிழவரோ படுக்கையைவிட்டே எழுந்திருக்கவில்லை. சந்திரமதி தன்னந்தனியாக மகனுடைய பிணத்தைக் கைகளில் ஏந்திக்கொண்டு மயானத்தை நோக்கிச் சென்ருள். மீண்டும் மீண்டும் மேகம் கர்ஜித்து இடி முழங்கிக் கொண்டிருந்தது. காரிருளைப் பிளந்துகொண்டு திடீர் திடீரென்று மின்னல்கள் தோன்றி மறைந்தன. இந்தப் பயங்கரச் சூழ்நிலையில் பெரிதும் பயந்தவளாகவும், மகனை இழந்த சோகத்தில் மூழ்கியவளாகவும் சந்திரமதி அழுதுகொண்டே மயானத்தை நோக்கி வந்து கொண்டிருந்தாள்.

''விசுவாமித்திரருக்குத் தட்சிணையாகச் செலுத்த வேண்டிய பணம் முழுவதும் சம்பாதிக்கப்படாமலேயே இருந்தது. ஆகவே, அரிச்சந்திர மகாராஜா தம்மையே மயானம் காக்கும் வெட்டியான் ஒருவனுக்கு விற்றுக் கொண்டுவிட்டார். இப்போது மன்னர் வெட்டியானுக மயானத்தில் இருந்து வந்தார். மயானத்தில் இருந்து பிணங்களை எரிப்பதற்கு உரிய தொகையை வசூல் செய்வதும், அப்படி வசூல் செய்யப்பட்ட பிணங்களை எரிப்பதுமே அவருடைய இப்போதைய தொழில். மயானத்தில் பல பிணங்கள் தகதகவென்று எரிந்து கொண்டிருந்தன. பல பிணங்கள் சாம்பலாகவும் ஆகியிருந்தன. அந்தக் காரிருளில் மயானம் பயங்கரமாகக் காட்சி தந்துகொண்டிருந்தது. சந்திரமதி அந்த இடத்தை அடைந்து அழுது புலம்பினுள்.''

சந்திரமதி மயானத்தில் கதறி அழுத வர்ணனையைக் கேட்கும் யாருடைய இதயம்தான் உருகாமல் இருக்கும்? பாகவதப் பண்டிதர் தத்ரூபமாக விளக்கிச் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்த பக்தர்களும் உணர்ச்சிவசப்பட்டு அழுதனர்.

அப்போது குருதேவர் என்ன செய்துகொண்டிருந்தார்? அவர் உறுதி கலையாமலே நிதானத்தோடு பண்டிதர் சொல்லும் விளக்கங்களைக் கேட்டுக் கொண்டிருந்தார். ஒரே ஒரு சமயத்தில் மட்டும் அவருடைய விழியோரத்தில் கண்ணீர் வழிந்தது. அதை அவர் துடைத்துக்கொண்டார்.

இறுதியாக, விச்வாமித்திரர் வருவது, லோகிதாசன் உயிர்த்தெழுவது, அனைவரும் சேர்ந்து காசி விசுவநாதரைத் தரிசிப்பது, அரிச்சந்திரன் மீண்டும் அரசாட்சியைப் பெறுவது ஆகியவற்றை விவரித்துச் சொல்லி, பாகவதர் கதையை முடித்தார்.

மேடையின் முன் அமர்ந்திருந்த குருதேவரும் நீண்ட நேரம் பாகவதக் கதையைக் கேட்டுக் கொண்டிருந்தார். அரிச்சந்திரன் கதை சொல்லி முடிந்த பிறகு அவர் வெளியே இருந்த அறைக்குச் சென்று அமர்ந்துகொண்டார். அவரைச் சுற்றிலும் பக்தர்கள் குழுமியிருந்தார்கள். பாகவத பண்டிதரும் குருதேவரின் அருகில் வந்து உட்கார்ந்தார். குருதேவர் பாகவத பண்டிதரிடம், ''உத்தவரின் உரையாடலைப் பற்றிக் கொஞ்சம் சொல்லுங்கள்'' என்று கேட்டுக் கொண்டார். அதற்கிணங்கப் பாகவதர் சொல்ல ஆரம்பித்தார்.

பாகவத பண்டிதர்: உத்தவர் பிருந்தாவனத்திற்கு வந்தார். அப்போது அவரைத் தரிசிப்பதற்காகப் பிருந்தாவனத்து இடைச் சிறுவர்களும் கோபியரும் கூட்டமாக விரைந்தோடி வந்தார்கள். அனைவரும் அவரிடம், ''ஸ்ரீகிருஷ்ணர் எப்படி இருக்கிருர்? அவர் எங்களை மறந்தே போய் விட்டாரா? அவருக்கு எங்களுடைய பெயராவது நினைவிருக்கிறதா?'' என்று பேராவலுடன் சரமாரியாகக் கேட்டார்கள். அவ்விதம் கேட்டுக் கொண்டே சிலர் அழுதார்கள். வேறு சிலர் உத்தவரை அழைத்துச் சென்று பிருந்தாவனத்தின் பல இடங்களையும் அவருக்குக் காட்டிக்கொண்டே, ''இந்த இடத்தில்தான் ஸ்ரீகிருஷ்ணர் கோவர்த்தன மலையைத் தூக்கிப் பிடித்தார். இந்த இடத்தில் தான் அவர் தேனுகாசுரனை வதம் செய்தார். இந்த இடத்தில்தான் சகடாசுரனைக் கொன்ருர். இந்தப் புல்வெளியிலேதான் மாடுகளை மேய்த்தார். இதோ, இந்த யமுனை நதி தீரத்தில்தான் அவர் விளையாடி மகிழ்ந்தார். இந்த இடத்தில் இடைச் சிறுவர்களோடு விளையாடினுர். இதோ, இங்குள்ள இந்தப் பூந்தோட்டங்களிலெல்லாம் அவர் கோபியருடன் பேசி மகிழ்ந்தார்'' என்றெல்லாம் கூறினுர்கள்.

அவர்கள் சொன்னதைக் கேட்ட உத்தவர், ''நீங்கள் ஏன் ஸ்ரீகிருஷ்ணருக்காக இந்த அளவுக்கு ஏங்கி மனவேதனைப்படுகிறீர்கள்? அவர்தாம் எல்லா உயிர்களிலும் இருப்பவராயிற்றே! அவர் சாட்சாத் பகவானே அல்லவா? அவரைத் தவிர வேறு எதுவும் இருக்க முடியாதே!'' என்று கூறினுர்.

கோபியர்கள் அதற்குப் பதிலாக, ''இதெல்லாம் எங்களுக்குத் தெரியாது. நாங்கள் எழுதப் படிக்கச் சிறிதுகூட அறியாதவர்கள். நீங்கள் சொல்வதை எல்லாம் புரிந்துகொள்ள எங்களால் முடியாது. எங்களுக்கு எங்களோடு இருந்த பிருந்தாவனத்துக் கிருஷ்ணனைத்தான் தெரியும். இந்த இடங்களிலெல்லாம் எங்களோடு பல விதங்களிலும் விளையாடிய கிருஷ்ணனைத்தான் நாங்கள் அறிவோம்'' என்று சொன்னுர்கள்.

அது கேட்ட உத்தவர் மீண்டும் அவர்களிடம், "ஸ்ரீகிருஷ்ணர் சாட்சாத் பகவானே ஆவார். அவரைத் தியானித்து வந்தால் மறுபடியும் இந்தப் பிறப்பும் இறப்புமாகிய சம்சாரத்தில் வந்து பிறக்க வேண்டியிருக்காது. ஜீவன், முக்தனுகவே ஆகி விடுவான்'' என்று கூறி உபதேசித்தார்.

கோபியர்கள், "நீங்கள் சொல்வதைப் போன்ற 'முக்தி' என்ற பெரிய பெரிய விஷயங்களெல்லாம் எங்களுக்குப் புரிவதில்லை. நாங்கள் எங்களுடைய உயிருக்கு உயிராகிய கிருஷ்ணரைப் பார்க்கத்தான் துடிக்கிறேம்'' என்றே பதில் சொல்லிவிட்டார்கள்.

ஸ்ரீராமகிருஷ்ணர் (பாகவதரிடம்): கோபியர் கொண்டிருந்த பக்தி பிரேமைப் பக்தியாகும். அது அவ்யபிசாரிணி பக்தி எனப்படும். நிஷ்டா பக்தி என்றும் அதைச் சொல்வதுண்டு. இதற்கு மாருக உள்ள வியபிசாரிணி பக்தி என்று எதைச் சொல்லலாம் தெரியுமா? அது ஞானம் கலந்த பக்தி யாகும். 'கிருஷ்ணரே எல்லாமுமாக ஆகியிருக்கிறர். அவரே பரப்பிரம்மம், அவரே ராமர், அவரே சிவன், அவரே சக்தி' என்ற மனநிலை ஞானம் கலந்த பக்தியில் இருக்கும். ஆனுல் இது போன்ற ஞான உணர்வு பிரேமைப் பக்தியில் கலந்திருப்பதில்லை.

ஒரு சமயம் துவாரகைக்கு ஆஞ்சனேயர் வந்தார். அவர் சீதாராமனைத் தரிசிக்க விரும்பினர். பகவான் கிருஷ்ணர் ருக்மிணியிடம், "நீ சீதையாக மாறி அமர்ந்துகொள். இல்லாவிட்டால் ஆஞ்சனேயரிட மிருந்து தப்ப முடியாது'' என்று சொன்னர்.

பாண்டவர்கள் ராஜசூய யாகம் செய்தார்கள். அப்போது எல்லா அரசர்களும் யுதிஷ்டிரரைச் சிம்மாசனத்தில் உட்கார வைத்து அவரை வணங்கினர்கள். அங்கு வந்திருந்த விபீஷணர், "நான் நாராயணர் ஒருவரைத்தான் வணங்குவேன். வேறு எவரையும் வணங்கமாட்டேன்'' என்று சொல்லிவிட்டார். அப்போது பகவான் ஸ்ரீகிருஷ்ணர் தமது உடல் தரையில் படிய யுதிஷ்டிரருக்குச் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்தார். அதைப் பார்த்த பிறகுதான் விபிஷணரும் தமது கிரீடத்துடன் யுதிஷ்டிரரைச் சாஷ்டாங்கமாக விழ்ந்து பணிந்தார்.

இது எதைப் போன்றது தெரியுமா? ஒரு வீட்டிலுள்ள மருமகளின் மனநிலையைப் போன்றது. மைத்துனன், மாமியார், மாமனர், கணவர் என்று வீட்டிலுள்ள எல்லோருக்குமே அவள் வேண்டிய பணிவிடைகளைச் செய்கிறள். கால் கழுவு வதற்குத் தண்ணிர் கொண்டு வந்து தருகிறள், துண்டு எடுத்துத் தருகிறள், உட்காருவதற்கு ஆசனம் போடுகிறள்—இது போன்று அவள் பல பணிவிடைகளையும் செய்கிறள் ஆனுல் அவள் தன் கணவரிடமோ விசேஷமாகப் பிரத்தியேக அன்பு கொண்டிருக்கிறள்.

இந்த வகையான பிரேமைப் பக்திக்கு இரண்டு வித இலட்சணங்கள் இருக்கின்றன. ஒன்று 'நான்' என்ற உணர்வு, மற்றென்று 'என்னுடையது' என்ற உணர்வு. "நான் பார்த்துக் கொள்ளா விட்டால் கோபாலனை வேறு யார் பார்த்துக் கொள் வார்கள்? நான் அவனுக்கு வேண்டியதைச் செய்யாவிட்டால் அவனுடைய உடல் நலம் அல்லவா கெட்டுப் போய்விடும்!'' என்று யசோதை நினைப்பது வழக்கம். கிருஷ்ணன் கடவுள்தான் என்ற எண்ணம் அவளிடம் இருக்கவேயில்லை. மேலும் அவளிடம் 'என்னுடையது' என்ற எண்ணமும் தலைதூக்கி இருந்தது. அதாவது கடவுள் என்னுடையவர், எனக்குச் சொந்த மானவர் என்று பக்தன் நினைப்பதுதான் அது. 'என்னுடைய கோபாலன்' என்ற எண்ணம் யசோதையிடம் ஊறியிருந்தது.

உத்தவர் யசோதையிடம், "அம்மா, உன்னுடைய கிருஷ்ணர் இருக்கிறரே அவர் சாட்சாத் பகவானே தான். அவர் ஜகத் சிந்தாமணி (பிரபஞ்சத்திற்கே தலைவர்) ஆவார். அவர் சாதாரண மனிதர் அல்ல'' என்று சொல்லத்தான் செய்தார். ஆனுல் யசோதையோ, "ஹா! நான் உங்களுடைய சிந்தா மணியைப் பற்றிக் கேட்கவில்லை. என்னுடைய கோபாலன் எப்படி இருக்கிறன் என்றுதான் கேட்கிறேன். ஆம், நான் கேட்பது சிந்தாமணியைப் பற்றி அல்ல, என் கோபாலனைப் பற்றித்தான்'' என்று உறுதியாகச் சொல்லிவிட்டாள்.

கோபியரிடம்தான் எப்படிப்பட்ட நிஷ்டை (இஷ்ட தெய்வத்திடம் மட்டுமே கொள்ளும் மாருத எல்லையற்ற அன்பு) இருந்தது! மதுரா நகரத்தின் அரண்மனை வாயிற்காப்போரிடம் பலவிதங் களிலும் கெஞ்சியும் வேண்டியும் அவர்கள் ராஜ சபைக்குள் நுழைந்தார்கள். வாயிற்காப்போன் அவர்களைக் கிருஷ்ணரிடம் அழைத்துச் சென்றன். ஆனுல், ராஜசபையில் மகுடம் தரித்து வீற்றிருந்த ஸ்ரீகிருஷ்ணரைக் கண்டதுமே கோபியர் தலை குனிந்து கொண்டார்கள். அவர்கள் தங்களுக் குள்ளாகவே ஒருவருக்கொருவர், 'மகுடம் தரித் துள்ள இந்த மனிதன் யாரோ? கிருஷ்ணரின் அன்புக்கு உரிய நாம், கடைசியில் மகுடம் தரித்த வேற்றுருகிய இவனுடன் பேசி விபசாரியர் ஆவதா? பீதாம்பரம் அணிந்து, மோகனக் கொண்டையில் மயில்தோகையுடன் சோபிக்கும் நம்முடைய அந்தப் பிராணவல்லபராகிய கிருஷ்ணர் எங்கே?' என்று கேட்டுக்கொண்டார்கள்.

கோபியரின் நிஷ்டைதான் எப்படிப்பட்டது பார்த்தீர்களா! அவர்களின் மனநிலை அலாதியான மகிமையுடன் திகழ்ந்தது. ☆

விஜயதீபம்

கண்ணன் தந்த விளக்கம்

ராதையின் நெஞ்சம்

ஒரு சமயம் பகவான் ஸ்ரீகிருஷ்ணர் தமது பரிவாரங்களுடன் சித்தாசிரம தீர்த்தத்தில் நீராடச் சென்றார். தெய்வாதீனமாக ராதையும் தன் தோழிகளுடன் அங்கே வந்திருந்தாள். இரு தரப்பினரும் மிகவும் மகிழ்ச்சியடைந்தனர். ஒன்றுகூடி உரையாடினர்.

கிருஷ்ண பகவானின் பட்டத்து அரசிகள் கிருஷ்ண பகவானது வாயினாலேயே ராதையின் பெருமைகளைச் சொல்லக் கேட்டிருந்தார்கள். ஆகவே அவர்கள் சமயம் பார்த்து ராதையைத் தனிமையான இடத்தில் சந்தித்தனர். ராதையும் உள்ளன்புடன் அவர்களை வரவேற்று உபசரித்தாள். உரையாடிக் கொண்டிருந்தபோது அவள், ''சகோதரிகளே! சந்திரன் ஒன்றுதான் இருக்கிறது; ஆனால் சகோரப் பறவைகளோ அநேகம் உள்ளன. சூரியனும் ஒன்றுதான் இருக்கிறது; ஆனால் கண்களோ அநேகம் இருக்கின்றன'' என்ற பொருளைத் தரும் கீழ்க்கண்ட சுலோகத்தைக் கூறினாள் :

சந்த்ரோ யதைகோ பஹவ: சகோரா:,
ஸூர்யோ யதைகோ, பஹவோ த்ருசா : ஸ்யு : |
ஸ்ரீகிருஷ்ணசந்த்ரோ பகவாந் ததைவ,
பக்தா பகிந்யோ பஹவோ வயம் ச ||

''பகவான் கிருஷ்ணரும் ஒருவரே; சகோதரிகளான நாம் அனைவரும் அவரது பக்தைகள்'' என்றாள் ராதை.

ராதை சொன்னதைக் கேட்டு ராணிகள் மிகவும் வியப்படைந்தனர். ராதையை மிக வற்புறுத்தி அவர்கள் தங்கள் இருப்பிடத்திற்கு அழைத்துச் சென்றனர். அங்கே சென்ற ராதைக்கு ராஜோபசாரம் நடந்தது. நன்கு வரவேற்றார்கள். சாப்பிடும்படி செய்தனர். முடிவில் ருக்மிணிதேவியே ராதைக்குப் பால் தந்து அருந்தும்படி செய்தாள். அதன்பிறகு சிறிது நேரம் நல்ல விஷயங்களைப் பேசிக்கொண்டிருந்துவிட்டு ராதை தன் இருப்பிடம் திரும்பினாள்.

இரவு வந்தது. அனைவரும் படுக்கச் சென்றனர். தினசரி வழக்கப்படி ஸ்ரீகிருஷ்ணரின் பாதங்களைப் பிடித்து விடுவதற்காக ருக்மிணி அருகில் அமர்ந்தாள். பகவானின் உள்ளங்கால்களைப் பார்த்ததும் திடுக்கிட்டாள். உள்ளங்கால்கள் முழுவதும் கொப்புளங்கள்! வியப்படைந்த ருக்மிணி தன் தோழிகளை அழைத்து விஷயத்தைக் கூறினாள். தோழிகளும் பகவானின் கால்களில் உள்ள கொப்புளங்களைக் கண்டு பேசாமடந்தைகள் ஆகிவிட்டார்கள். பகவானிடம் எப்படிக் கேட்பது? யாருக்கும் துணிச்சல் வரவில்லை.

முடிவில் கண்ணபிரான் கண்விழித்துத் தோழிமார்கள் அனைவரும் அங்கு ஒருசேர வந்து நிற்பதன் காரணத்தை வினவினார். அதற்குப் பதிலாக அவர்களும் பகவானின் கால்களில் காணப்பட்ட கொப்புளங்களைச் சுட்டிக் காண்பித்தனர். முதலில் கண்ணன் தட்டிக் கழிக்கத்தான் பார்த்தார். ஆனால், அவர்கள் அவரை விடவில்லை. மிகவும் வற்புறுத்தவே அவர், ''ராதையின் இதயத்தில் என் திருவடித் தாமரைகள் இரவும் பகலும் எப்போதும் விளங்கிக் கொண்டிருக்கின்றன. நீ மிகவும் சூடான பாலை ராதைக்கு அளித்தாய். நீ கொடுத்தாய் என்பதற்காக ராதையும் அதைக் குடித்துவிட்டாள். பால் உள்ளே சென்றது. பால் இதயத்திற்குள் சென்றதால் என் கால்கள் சூடு தாங்காமல் கொப்புளித்து விட்டன. இது இயற்கைதானே!'' என்றார்.

பிரபுவின் வார்த்தைகளைக் கேட்ட ராணிகள் வாயடைத்துப் போயினர். அன்று முதல் ராதையின் இமாலய அன்புக்கு முன்னால் தங்களது அன்பு தூசுக்குச் சமானம் என்ற முடிவிற்கு வந்தனர்.

ராதையின் பெருமையைக் குறிப்பிடும் இந்த நிகழ்ச்சி ஜாதகசம்ஹிதையில் இடம்பெற்றுள்ளது.

யசோதையின் சிறப்பு

குழந்தை கண்ணனின் குறும்பு தாங்க முடியாத யசோதை யோசித்து ஒரு முடிவுக்கு வந்தாள். ஒரு கயிற்றை உரலில் கட்டினாள். அந்தக் கயிற்றின் மற்றொரு நுனியைக் குழந்தையின் இடுப்பில் கட்ட முயன்றாள். ஆனால் கயிற்றின் நீளம் போதவில்லை. மற்றொரு கயிற்றை எடுத்து வந்து முதல் கயிற்றுடன் முடி போட்டு மறுபடியும் கண்ணனைக் கட்ட முயன்றாள். இந்த முறையும் கயிறு போதவில்லை. இப்படியே எவ்வளவு கயிறு எடுத்து வந்தாலும் கண்ணனைக் கட்டப் போதாமலே இருந்தது. அதோடு திமிறி ஓடும் குழந்தை கண்ணனையும் சமாளிப்பதற்குள் அவளுக்குப் பெரும்பாடாகிவிட்டது.

இந்த அதிசயத்தைக் காண்பதற்கு வானவர்களும் பக்தர்களும் திரண்டு வந்தார்கள்.

அவர்களில் ஒருவர் கண்ணனிடம், "பரப்பிரம்மமாகிய நீயோ இப்போது குழந்தை வடிவம் எடுத்திருக்கிறாய். இருப்பினும் அதே சமயம் நீ தெய்வ லீலையும் புரிகிறாய். உன் அன்னை யசோதை உன்னைக் கட்ட எத்தனையோ கயிறு எடுத்து வந்து போதாமலும், அதே சமயம் உன்னையும் சமாளிக்க முடியாமலும் திணறுகிறாள். உன் குழந்தை வடிவத்திற்கும் நீ இப்போது புரியும் லீலைக்கும் சம்பந்தமே இல்லையே! பொருத்தமே இல்லாத இது என்ன விளையாட்டப்பா?" என்று கேட்டார்.

அதற்குக் கண்ணன், "நீயுமா என்னைச் சந்தேகிக்கிறாய்? நானாவது, யசோதையை அலைக் கழிப்பதாவது! வீணாக என்மீது இப்படிப் பழி சுமத்துகிறாயே!" என்றான்.

கண்ணன் சொன்னதைக் கேட்ட அந்தப் பக்தர், "கண்ணா! உன்னைப் புண்படுத்தவோ குழந்தை வடிவத்தில் இருக்கும் உன்னை அழ வைக்கவோ எனக்கு மனமில்லை. ஆனால் உன் விளையாட்டின் பொருள் என்ன? அதைத்தான் சொல்லேன்!" என்று வினவினார்.



அந்தப் பக்தரின் கேள்விக்குக் குழந்தைக் கண்ணன் தந்த விளக்கம் இது: "கயிறு சிறியதாக இருப்பதற்குக் காரணம் யசோதையின் கைகளின் சிறப்பே ஆகும். எங்கும் நிறைந்த சர்வவியாபியான பரப்பிரம்மமே (நானே) அவள் கையில் குழந்தையாகிவிட்டபோது, கயிறு சிறியதாகி விட்டதில் என்ன விந்தை?" ✩



மனிதன் அடையும் சுக துக்கங்களுக்குக் காரணம் அவனுடைய எண்ணம், செயல், இச்சைகளே. விதியை ஆக்குவதும் நீக்குவதும் மனிதனே.

—கன்பூஷியஸ்

நமது காலில் பட்டுச் சாகும் புழு அல்லது எறும்பும் ஒரு பூதம் மரிக்கும் போது அடையும் வேதனையை அடைந்து அவஸ்தைப்படுகிறது. ஆகவே பிற உயிர்களை மதித்துப் போற்று.

—ஷேக்ஸ்பியர்

நியாயத்தைக் கடைப்பிடித்தொழுகு. எப்போதும் உண்மையே பேசு. உன் கடமையைச் செய்து வரும்போது மரணம் நேரினும் அதைரியம் அடையாதே; பிறரிடம் அடிமைபோல் நடக்காதே. தாழ்ந்த சாதியில் உதித்த மக்களைச் சகோதரர்களாகப் பாவித்து அவர்களை விரைவில் நல்ல நிலைக்குக் கொண்டுவர முயற்சி செய். ஏனெனில் எல்லா மனிதரும் சமமே.

—தயானந்த சரஸ்வதி

கீதை காட்டும் மனிதர்கள்

சுவாமி தபஸ்யானந்தர்



கடவுளைப்பற்றி அற்புதமான, மிகத் தெளிவான விளக்கத்தைத் தந்ததைப் போலவே கீதை மனித இனத்தைப்பற்றியும் அவர்களின் இயல்பைப் பற்றியும் சிறப்பான விளக்கத்தைத் தருகிறது.

தேவர்கள்

கீதையின் கருத்துப்படி இந்த உலகத்தில் இரண்டு வகையான மனிதர்கள் இருக்கிறார்கள். ஒருவகையானவர் தேவர்கள். மற்றொரு வகையானவர்கள் அசுரர்கள். தேவர் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் ஆழ்ந்த ஞானம், பக்தி, தூய்மை, மன அடக்கம், பணிவு, கருணை, குழந்தை போன்று கள்ளங்கபடு இல்லாத தன்மை முதலிய குணங்கள் நிறைந்தவர்களாக, எப்போதும் பகவானிடம் நாட்டம் மிகுந்தவர்களாகவும் இருக்கிறார்கள்.*

அசுரர்கள்

அசுரக் கூட்டத்தைச் சேர்ந்தவர்களோ எப்போதும் புலன் இன்பங்களைத் தேடி அலைபவர்களாகவும், அதிகார வெறி பிடித்து அதைத் தேடி ஓடுபவர்களாகவும், தன் செல்வாக்கை வளர்த்துக் கொள்ளுவதில்—தன்னை எல்லோரும் புகழ வேண்டும் என்பதில்—அடங்காத ஆர்வம் உடையவர்களாகவும், கொடூரமானவர்களாகவும், அநியாயக்காரர்களாகவும், அது காரணமாகக் கடவுளிடமிருந்து விலகி விலகிச் சென்று தங்களை மிக இழிந்த நிலைக்கு ஆட்படுத்திக்கொள்பவர்களாகவும் இருக்கிறார்கள்.

ஆனால் அவர்கள்கூடக் கடவுளின் கருணையை அடைய முடியாதபடி அவ்வளவு தொலைவிற்குப் போய்விடுவதில்லை. ஒரு மனிதன் எவ்வளவுதான் கொடியவனாக இருந்தாலும், தன்னுடைய பாவங்களுக்கெல்லாம் மனம் உருகி மன்னிப்பு வேண்டிப் பகவானைச் சரணடைந்தால் அவருடைய கருணை அவன்மீது தவழ்கிறது. உடனடியாக அவன் தர்மவானாக—ஒழுக்கமானவனாக மாறிவிடுகிறான்.

* கீதையின் பதினாறும் அத்தியாயமான 'தெய்வ அசுர சம்பத் விபாக யோகத்தில்' இவை பற்றித் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

உண்மையான பக்தியும், தூய்மையான இதயமும் மட்டுமே பகவானுக்கு மகிழ்ச்சியை உண்டாக்கும். இத்தகைய குணங்களை உடைய மனிதன் மன நெகிழ்ச்சியோடு அளிக்கும் ஒரு இலை, ஒரு பூ, ஒரு பழம் அல்லது கொஞ்சம் தண்ணீர் இவைகளைக் கூட அவர் மிகுந்த மகிழ்ச்சியோடு, மிகப் பெரிய வழிபாடாக ஏற்றுக்கொள்ளுகிறார்.

தேவர்களாகிய பக்தர்களும் பகவானும்

பகவத்கீதை மனித இனத்தில் ஒரு பிரிவினராகிய தேவர்களுக்குப் பகவான் எப்படித் துணைநிற்கிறார் என்பதைத் தெளிவாகக் கூறுகிறது.

பகவான் உள்ளாழ்ந்த பக்தியோடு படைக்கின்ற எல்லோருடைய படையல்களையும் தவங்களையும் ஏற்றுக் கொள்ளுபவராக விளங்குகிறார். பக்தர்கள்—அவர்தாம் இந்த உலகங்கள் அனைத்துக்கும் அடிப்படை என்று புரிந்துகொண்டு தங்கள் இதயம் முழுவதும் நிரம்பித் ததும்பும் பக்தியோடு அவரை வணங்குகிறார்கள்.

அவரிடத்திலே தங்களுடைய துயரங்களை எல்லாம் ஒப்படைத்துவிட்டு அவருக்கு அருகிலே இனிமையான ஓய்வைப் பெறுகிறார்கள். அவரை நினைக்கிற நினைப்பிலேயே அவர்கள் பேரானந்தமும் பெரும் திருப்தியும் அடைகிறார்கள்.

அத்தகையவர்களுக்குப் பகவான் உலகப் பொருள்கள்மீதுள்ள ஆசைகளை மறைத்து, தம்மை மட்டுமே விரும்புகிற—புரிந்து கொள்ளுகிற ஆற்றலைத் தருகிறார். அந்த ஆற்றலால் அவர்கள் பகவானைப் புரிந்துகொண்டு இறுதியில் அவரை அடைகிறார்கள்.

அத்தகைய பக்தர்களிடம் வைக்கிற அளவற்ற கருணையினால் பகவான் அவர்களுடைய இதயத்திலே சென்று வாழ்கிறார். அறியாமை காரணமாக அங்கே நிறைந்துள்ள இருளை அறிவு என்னும் விளக்கால் நீக்குகிறார். அந்தப் பக்தர்களைத் துன்பம் நிறைந்த, அழிந்து போகிற வாழ்க்கை என்னும் கடலிலிருந்து மிக விரைவாகக் காப்பாற்றுகிறார். இந்த உலக வாழ்வில் அவர்களுக்கு நன்மைகளைத்

தந்து, இதற்கடுத்த உலகங்களிலும் பாதுகாப்பைத் தருகிறுர். இவ்வாறு பகவத்கீதையில் பகவான் தலைமையானவராகவும் தர்மமயமானவராகவும் அன்புமயமானவராகவும் போற்றப்படுகிறுர்.

உருவம் உள்ளவர்

கீதையில் கூறப்படும் பகவான் கைகளும் கால் களும் கண்ணும் காதுகளும் உடைய உருவமுள்ள பகவான். ஆனுல் அந்த உருவமுள்ள கடவுள் அங்கே பொருமையும் குறுகிய மனப்பான்மையும் உடைய பழங்காலக் காட்டுமிராண்டிகளின் கடவுளைப் போன்ற ஒரு சாதாரண மனித வடிவக் கடவுளாகக் கீழான நிலைக்குக் கொண்டுவரப்படுவது கீதையில் அனுமதிக்கப்படுவதே இல்லை.

அவர் மனிதர்களால் பலவேறு வழிகள் (சமயங் கள்) மூலம் தெரிந்துகொள்ளப்படுபவராக இருக் கிறுர். பலவேறு பெயர்களில், பலவேறு சமயத் தவர்களாலும் அழைக்கப்படுபவராக இருக்கிறுர்; பலவேறு சடங்குகளோடும் சம்பிரதாயங்களோடும் வழிபடப்படுபவராகவும் இருக்கிறுர்.

"எந்த எந்த வழிகளில் மனிதர் என்னை வழி படுகிறுர்களோ, அந்த அந்த வழிகளின் மூலம் நான் அவர்களை ஏற்றுக்கொள்கிறேன்" என்றும், "எந்த விதமான பாதைகளை (சமயங்களை) மனிதர்கள் மேற்கொண்டாலும் அவை எல்லாம் என்னை அடைகிற என்னுடைய பாதைகளே (சமயங் களே)" என்றும் கீதையிலேயே பகவான் கூறுகிறுர்.

கண்டிக்கவில்லை

இத்தகைய முழுமுதற் கடவுளை வணங்காமல் சின்னஞ்சிறிய குறுகிய மனம் கொண்ட கடவுளர் களை வணங்குவதும் வழிபடுவதும் எவ்வளவு குறுகிய தன்மை உடையது என்பதும் கீதையில் தெளிவாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. என்றுலும் அந்த வணக்கங்களும் வழிபாடுகளும் தவறுனவை என்றே, முறையற்றவை என்றே கண்டிக்கப் படவே இல்லை. அந்த வழிபாடு செய்பவர்களை அதிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக மேலான முழு முதற்கடவுளை வணங்கும் நிலைக்கு மாற்றவே கீதை முயலுகிறது. அத்தகைய அருமையான கடவுள் நிலையைக் கீதை நமக்குப் போதிக்கிறது. *



கண்ண பெருமானே!

அம்பாத்துறை ஆ. ஏழுமலை



வெண்ணெய்நீ விரும்பியுண்டாய் கண்ண பெருமானே—அதில்
விந்தையில்லை என்றறிவேன் கண்ண பெருமானே!
மண்ணைநீ மகிழ்ந்துண்டாய் கண்ண பெருமானே!—அதன்
மர்மம்தான் புரியவில்லை கண்ண பெருமானே!
நன்மைதீமை இரண்டையுமே கண்ண பெருமானே!—ஒன்றுய்
நாடுகஎன் றுணர்த்துதற்கோ கண்ண பெருமானே!
உன்னையே சரணடைந்தேன் கண்ண பெருமானே!—அந்த
உள்ளத்தை எனக்கருள்வாய் கண்ண பெருமானே!



விநாயகர் என்னும் தத்துவம்

பிரம்மசாரி முத்துக்குமார்

பிரணவச் சொரூபம்

எல்லா மந்திரங்களுக்கும் 'ஓம்' என்னும் ஒலி மூலமாக விளங்குகிறது. அதுவே மந்திரங்கள் அனைத்திற்கும் ஆரம்பமாகவும் இடைப்பட்டதாகவும் முடிவுமாகவும் திகழ்கிறது.

ஓம் என்ற மந்திரத்தை 'நாதப் பிரம்மம்' என்று சொல்வார்கள். புத்த ஜைன மதங்களும்கூட ஓம் மந்திரத்தை மிகவும் புனிதம் வாய்ந்ததாகக் கருது கின்றன. கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய மதங்களின் பிரார்த்தனை முறைகளில் சொல்லப்படும் 'அமென்', 'ஆமின்' என்னும் சொற்கள் பிரணவ மந்திரத்தின் ஒலியை நினைவுபடுத்துகின்றன.

பிரபஞ்சமெங்கும் ஓங்கார ஒலி சதா ஒலித்துக் கொண்டேயிருக்கிறது. பிரபஞ்சத்தின் இயக்கத்திலுள்ள எல்லாவித ஒலிகளும் பிரணவ ஒலியையே ஆதாரமாகக் கொண்டிருக்கின்றன என்று யோகியர் அனுபவபூர்வமாக உணர்ந்து குறிப்பிட்டிருக்கிறார்கள்.

ஓங்கார மந்திரத்தின் அதிஉன்னத தத்துவத்தை விளக்கும் திருவுருவம்தான் விநாயகப் பெருமானின் திருவுருவமாகும்.

விநாயகர் காலத்தைக் கடந்து விளங்குகிறார். ஓங்கார ஒலி இன்ன காலத்தில் தோன்றியது என்று நாம் சொல்ல முடியாது. ஆகவே ஓங்கார வழிபாடும் அனாதியாகவே இருந்து வருகிறது.

பழமை

வேதங்களிலேயே மிகவும் பழமையானது ரிக் வேதம். இந்த வேதத்தின் மூன்றும் மண்டலத்தில் 'கணானாம் த்வா கணபதிம் ஹவாமஹே' என்று ஆரம்பிக்கும் மந்திரத் தொடரில் விநாயகரைப் பற்றிய குறிப்புக் காணப்படுகிறது.

கணபத்யதர்வசீர்ஷோபநிஷத், ஹேரம்போபநிஷத், கணேசபூர்வதாபினி, கணேசோத்தரதாபினி, வல்லபேசோபநிஷத்—ஆகிய ஐந்து சிறிய உபநிஷதங்களும் விநாயகரின் வழிபாட்டு முறைகளைக் கூறுகின்றன. வியாசர் அருளியதாகச் சொல்லப்படும் பதினெட்டுப் புராணங்களிலும் விநாயகரின் லீலைகள் இடம் பெற்றுள்ளன. ஏறக்குறையச் சுமார் நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய தமிழ் இலக்கியமாகிய தொல்காப்பியத்திலும் பிள்ளையார் வழிபாடு பற்றிய குறிப்புக் காணப்படுகிறது.

பல நாடுகளில்—மதப் பிரிவுகளில்

காலத்தால் மட்டுமின்றி இடத்தைப் பொறுத்த அளவிலும் ஒருமைப்பாட்டை விளக்கும் தெய்வமாக விநாயகர் விளங்குகிறார். இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் மட்டுமின்றி, பர்மா, சயாம், ஜாவா, பாலி, போர்னியா, சுமித்திரா, சம்பா, கம்போடியா, இந்தோனேஷியா, சீனா, நேபாளம், திபேத், மங்கோலியா, ஜப்பான், மெக்சிக்கோ, பேரு, எகிப்து, ரோம், கிரேக்கம், இத்தாலி போன்ற பல நாடுகளிலும் விநாயகர் வழிபாடு பல நூற்றாண்டுகளாகப் பரவியிருந்ததற்குச் சான்று இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.

இந்து மதத்திலுள்ள வேறுபாடுகளைக் கடந்து சைவர், வைணவர், சாக்தர் ஆகிய அனைவருமே வணங்கும் தெய்வமாக இருப்பவர் விநாயகர். வைணவர்கள் விநாயகரைத் தும்பிக்கையாழ்வார் என்றும், மாத்துவச் சம்பிரதாயத்தினர் விஷ்வக்ஸேனர் என்றும் வழிபடுகின்றனர். ஜைனர்கள் குஜராத்திலுள்ள குடைக்கோயிலில் கணபதியைச் சிறப்பாக வழிபடுகிறார்கள் கூர்ந்து கவனித்தால், புத்தமதக் கோயில்கள் சிலவற்றிலும் விநாயகரின் திருவுருவம் தனியிடம் பெற்றிருப்பதைக் காணலாம்.

யானைத்தலை

பிரணவ மந்திரத்தின் சொருபமாக விளங்கும் விநாயகரின் யானை முகமும் பேழை வயிறும் பல

தத்துவங்களை உணர்த்துகின்றன. யானை எல்லா உயிர்களிலும் பெரியது, பேராற்றல் படைத்தது. அத்துடன் அமைதியான குணமும் அதற்கு உண்டு. அது போலவே விநாயகரும் தனக்கும் மேலான ஒரு தலைவர் இல்லாத தனிப் பெரும் நாயகராக விளங்குகிறார். சர்வ வல்லமையும் படைத்தவர் அவர் சித்தம் தெளிவது காரணமாகப் பெறப்படும் மேலான சாந்தி நிலையே ஆன்மிகச் சாதனையின் முதிர்ந்த நிலையாகும். எல்லா மன விருத்திகளும் ஒடுங்கித் தன்னில் தானாகவே ஒருவன் லயித்திருக்கும்போது பரமாத்மாவின் தரிசனம் கிடைக்கிறது. இந்த வகையில் சாந்தசொரூபமாகிய விநாயகரின் யானைமுகம் மௌனப் பெருநிலையின் நல்ல விளக்கமாக அமைந்திருந்தது.

'பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்' என்று ஔவைப் பாட்டி வெற்றிவேற்கையில் கூறுகிறாள். பிள்ளையாரின் யானை முகமே அவர் பிரணவ மந்திரத்தின் உட்பொருள் என்பதை அறிவிக்கிறது.

விநாயகரின் உடல்

விநாயகருக்கு உடல் இடுப்புக்குக் கீழே மனிதனைப் போலவும், இடுப்புக்கு மேலே தேவர்களைப் போலவும், அதற்கும் மேலுள்ள தலை விலங்குக்கு இருப்பது போலவும் அமைந்திருப்பதைக் காண்கிறோம்.

அடிப்படையில் மனிதன் தெய்விகத் தன்மை பொருந்தியவன். அவன் ஐம்புலன்களுக்கு அடிமைப்படும்போது மனிதத் தன்மையை இழப்பதோடு, மிருகத்தன்மை கொண்டவனாகவும் ஆகிவிடுகிறான். பிள்ளையார் தமது கைகளில் யானையை அடக்கும் கருவிகளையும் ஏந்தியிருக்கிறார். இந்த நிலை. மனிதன் தனது தெய்விகத் தன்மை வாய்ந்த பகுத்தறிவால் ஐம்புலன்களை அடக்கி ஞானத்தைப் பெற வேண்டும் என்பதற்குரிய சின்னமாகும்.

பிரகிருதியின் பரிணமித்த பகுதியை (வியக்தம்) பிள்ளையாரின் மனித உடலும், பரிணமிக்காமல் மறைந்துள்ள பகுதியை (அவியக்தம்) யானைத் தலையையும் குறிப்பிடுகின்றன.

தும்பிக்கை

விநாயகரின் நீண்ட தும்பிக்கை ஓர் நீர்ப் பாத்திரத்தை ஏந்தியுள்ளது. இறைவனின் எல்லையற்ற கருணை, தூய ஞானம், ஏகத்துவம் ஆகியவற்றைப் பிள்ளையார் ஏந்தியுள்ள நீர் நிறைந்த பாத்திரம் விளக்குகிறது. யானை தனது தும்பிக்கையைக் கொண்டு வழியிலுள்ள தடைகளை விலக்கி முன்னேறிச் செல்லும் தன்மை வாய்ந்தது. பக்தர்களின் ஆன்மிகச் சாதனையாகிய பாதையில் குறுக்கிடும் விக்கினங்களையெல்லாம் அகற்றி ஞான விழிப்பை ஏற்படுத்துபவர் விக்னேசுவரர் என்பதற்கு அடையாளமே அவரது துதிக்கை ஆகும்.

ஊசி போன்ற மிகவும் சிறிய பொருளையும்கூட யானையின் தும்பிக்கைப் பொறுக்கி எடுத்துவிடும். சாதாரண மனித அறிவைக் கொண்டு புரிந்து கொள்ளவே இயலாத மிக நுண்ணிய ஆன்மிகத் தத்துவங்களையெல்லாம் அறிந்துணரும் ஆற்றலை அருள்பவராக இறைவன் விளங்குகிறார் என்னும் உண்மையையும் விநாயகரின் தும்பிக்கை நமக்கு நினைவுபடுத்துகிறது.

பரிவு—தொழில்—தியாகம்

பக்தர்கள் எங்கு, எந்த நிலையில் இருந்து, எப்போது பிரார்த்தித்தாலும் அவர்களின் பிரார்த்தனைகளுக்குச் செவிசாய்த்துப் பரிவுடன் அருள் புரிபவன் இறைவன். இந்த உண்மையை விநாயகரின் விரிந்து பரந்துள்ள நீண்ட பெரிய காதுகள் உணர்த்துகின்றன.

பிள்ளையாரின் ஐந்து கைகளும் இறைவனின் ஐந்து தொழில்களை உணர்த்துகின்றன. கும்பம் ஏந்திய கை படைத்தலையும், மோதகம் ஏந்திய கை காத்தலையும், அங்குசம் ஏந்திய கை அழித்தலையும், பாசம் பிடித்திருக்கும் கை மறைத்தலையும், தந்தம் உள்ள கை அருளல் என்ற தொழிலையும் செய்கின்றன.

விநாயகருக்கு ஏகதந்தன் என்ற ஒரு பெயர் உண்டு. ஒற்றைக் கொம்பை உடையவர் என்பது அதன் பொருள். விநாயகர் மகாபாரதம் எழுதிக் கொண்டிருந்தார். அப்போது இடையில் எழுத்தாணி உடைந்துவிட்டது. ஆகவே விநாயகர் தமது தந்தங்களில் ஒன்றை ஒடித்துப் பாரதத்தை எழுதி முடித்தார் என்பது புராணக் கதை. இந்தக் கதை மிகவும் சிறியது. ஆனால் மிகவும் பெரிய உண்மையை உணர்த்துகிறது. யானையின் உடல் உறுப்புகளிலேயே அதன் தந்தம்தான் மிகவும் உயர்வானதும் முக்கியம் வாய்ந்ததும் ஆகும். விநாயகப் பெருமான் தமது தந்தத்தையே ஒடித்துச் சிறந்த ஒரு பணிக்காக அர்ப்பணித்தார். பிறருக்குப் பயன்படும் உயர்ந்த காரியத்திற்காக மனிதன் எதையும் தியாகம் செய்யத் தயாராக இருக்க

வேண்டும் என்பதைத்தான் விநாயகர் எவ்வளவு அழகாக எடுத்துக்காட்டியிருக்கிருர்!

சூரியன், சந்திரன், அக்கினி ஆகிய மூன்று சுடர்களும் விநாயகருக்கு மூன்று கண்களாக விளங்குகின்றன. பலவிதங்களிலும் பரந்து விரிந்திருக்கும் அண்டங்கள் அனைத்தும் தம்முள் அடக்கம் என்பதை விநாயகரின் பெரிய வயிறு விளக்குவதாக அமைந்திருக்கிறது.

யோகங்கள்—மூஷிக வாகனம்

பக்தி, ஞானம், கர்மம், யோகம் ஆகியவற்றின் ஒருமைப்பாட்டை விநாயகரின் திருவுருவம் உணர்த்துகிறது. கணநாதரின் கைகளில் உள்ள ஆயுதங்கள் கர்மயோகத்தையும், ஒடிந்த கொம்பை ஏந்திய கை ஞானயோகத்தையும், மோதகத்தைக் கொண்டுள்ள கை பக்தியோகத்தையும், வாசுகியை அரைஞாணாகக் கொண்டிருப்பது ராஜயோகத்தையும் குறிப்பிடுகின்றன. நான்கு யோகங்களாலும் அடையப்படும் பரம்பொருள் ஒன்றேயாகும் அந்த யோகங்களுக்கிடையில் உயர்வு தாழ்வு கிடையாது என்பதன் அடையாளமாகவே இந்தப் பெருமானின் திருவுருவம் அமைந்திருக்கிறது எனலாம்.

யானை முகமும் பேழை வயிறும் கொண்ட விநாயகருக்கு மூஷிகம் வாகனமாக அமைந்திருக்கிறது. புல் முதல் பிரம்மா வரையிலுமுள்ள மிகச் சிறிய உயிரிலும் மிகப் பெரிய உயிரிலும் ஒரே ஆத்மாவே வியாபித்திருக்கிறது. 'அணுவுக்கும் அணுவாகவும் பெரியதுக்கும் பெரியதாகவும் உள்ள ஆத்மா இந்த ஜீவனுடைய உள்ளத்தில் உறைகிறது' என்று கடோபநிஷதம் கூறுகிறது. பரமாத்மாவே தாங்குபவராகவும்; தாங்கப்படுபவராகவும் (ஆதாரமாகவும் ஆதேயமாகவும்) விளங்குகிருர் என்ற உண்மையை மூஷிக வாகனத்தின் மீது எழுந்தருளியுள்ள விநாயகரின் திருவுருவம் விளக்குகிறது. உபநிஷதங்களில் 'தஹர' என்ற சொல்லுக்குச் சிறிய ஆகாசம் என்பது பொருள். 'எங்கும் பரிபூரணமாக நிறைந்திருக்கும் ஆன்மா இந்தச் சிறிய ஆகாயத்தில் (தஹரம்) உறைகிறது' என்பது உபநிஷத வாக்கு. விநாயகரின் மூஷிக வாகனத்தை உபநிஷதம் குறிப்பிடும் 'தஹர'த்துடன் ஒப்பிடலாம்.

மூஷிகம் இருளை விரும்புவதாகவும் எந்தப் பொருளையும் அறுத்து நாசம் செய்வதாகவும் இருக்கிறது. ஆகவே மூஷிகம் ஆணவம் அல்லது அறியாமையின் உருவகமாகும். ஆகவே மூஷிகத்தை விநாயகர் தமது கால்களின்கீழ்க் கொண்டிருப்பது ஜீவர்களின் அறியாமையையும் அகங்காரத்தையும் அடக்கி ஆட்கொண்டருள்பவர் என்பதைப் புலப்படுத்தும்.

சில கருத்துக்கள்

உலகில் பரம், அபரம் என்று இரண்டுவித ஞானங்கள் இருக்கின்றன. அவற்றை முறையே விநாயகரின் வலது திருவடியும் இடது திருவடியும் குறிப்பிடுகின்றன.

மனித உடலில் அமைந்துள்ள ஆறு ஆதாரங்களில் ஒன்ருகிய மூலாதாரத்திற்கு விநாயகரே அதிபதியாக விளங்குகிருர். விநாயகரின் திருவடிகள் மூலாதாரத்தைத் தொட்டுக் கொண்டிருப்பதாகவும் ஒரு கருத்து நிலவுகிறது. இதை ஔவையார் தமது விநாயகர் அகவலில் 'மூலாதாரத்தின் மூண்டெழு கனலைக் காலால் எழுப்புங் கருத்தறி வித்தே' என்று குறிப்பிட்டிருக்கிருர். மனிதனிடம் உறையும் குண்டலினிச் சக்தியை விழுத்தெழச் செய்து ஜீவனை சிவத்துடன் ஒன்று சேர்ப்பவர் விநாயகர்.

கணநாதரின் நாபி படைப்புக் கடவுளாகிய பிரம்மாவின் சொரூபமாகவும், முகம் விஷ்ணு சொரூபமாகவும், முக்கண் சிவ சொரூபமாகவும், இடப்பாகம் சக்தி சொரூபமாகவும், வலப்பாகம் சூரிய சொரூபமாகவும் விளங்குகின்றன—என்று வடமொழி நூல்கள் கூறுகின்றன. இவ்விதம் விநாயகரின் திருவுருவம் மற்றத் தேவதேவியர்களையும் நினைவுபடுத்துகிறது.

மற்றத் தெய்வங்களிடம் இல்லாத ஒரு தனிச் சிறப்பை விநாயகரின் ஓர் உருவத்தில் பார்க்கிறோம். உச்சிஷ்ட கணபதி என்று அழைக்கப்படும் உருவம் தான் அது. எச்சில்பட்ட கணபதி என்பது அதற்குப் பொருள். சமயசாதகர்கள் பலர் வெளி ஆசாரங்களுக்கும் புறத் தூய்மைக்கும் அளவுக்கு மீறிய முக்கியத்துவம் கொடுக்கிருர்கள். அதுவே அவர்களின் ஆன்மிக முன்னேற்றத்திற்குத் தடையாக அமைவதும் உண்டு. ஒரு நாளைக்குக் குளிக்க இயலாவிட்டாலோ அல்லது ஏதாவது தங்களைத் தீண்டிவிட்டாலோ தாங்கள் அன்று கடவுள் வழிபாட்டிற்குத் தகுதி இல்லாதவர் என்று நினைத்துக் கொள்கிருர்கள். தங்களைத் தாங்களே புறக்கணிக்கும் அளவுக்கும்கூடச் சென்றுவிடுகிருர்கள். மனம் மொழி மெய்யாகிய முக்கரணங்களிலும் நாம் தூய்மையுடன் இருப்பது அவசியம். அசுத்தமான பொருள்களைக் குறித்து அருவருப்புக் கொள்ளக் கூடாது. சுத்தம், அசுத்தம் ஆகிய இரண்டையும்

[தொடர்ச்சி 251 ஆம் பக்கம் பார்க்க]



இரண்டு சீடர்கள்

விவேகானந்ததாசன்

மிக நீண்ட காலத்திற்கு முன்பு தெய்விகத்தன்மை வாய்ந்த மகரிஷி ஒருவர் இருந்தார். ஒரு சமயம் அவரிடம் இரண்டு இளைஞர்கள் வந்து, "சுவாமி, நாங்கள் தவம் பழகி ஆத்மஞானம் பெற விரும்புகிறோம். தாங்கள் கிருபை கூர்ந்து எங்களைச் சீடர்களாக ஏற்று அருள்பாலிக்க வேண்டும்" என்று வேண்டினார்கள்.

மகரிஷி இளைஞர்கள் இருவரையும் தம்முடன் ஆசிரமத்தில் தங்க அனுமதித்தார்.

மகரிஷி தாமாகவே உபதேசம் ஏதாவது தருவார் என்று இளைஞர்கள் காத்திருந்தார்கள். ஆனால், நாட்கள் கடந்தனவே தவிர, மகரிஷி உபதேசம் தருவதற்கு உரிய அறிகுறி ஒன்றும் தென்படவில்லை. ஆகவே, மனம் வருந்திய சீடர்கள் ஒரு நாள் மகரிஷியை அணுகி, "சுவாமி! நாங்கள் இங்கு வந்து பல நாட்கள் கடந்துவிட்டன. தாங்களாக உபதேசம் தருவீர்கள் என்று நினைத்து இதுவரையும் காத்திருந்தோம். தாங்கள் தாமதிக்காமல் எங்களுக்கு உபதேசம் செய்து வைக்க வேண்டும்" என்று வேண்டினார்கள்.

மகரிஷி கருணை ததும்ப அவர்களிடம், "நல்லது. நான் உங்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு சிவலிங்கம் தருகிறேன். அதை யாருமே பார்க்காத ரகசியமான ஓர் இடத்தில் கொண்டுபோய் வைத்துவிட்டு வாருங்கள். பிறகு உங்களுக்குத் தேவையான உபதேசம் செய்து வைக்கிறேன்" என்று சிவலிங்கங்களைக் கொடுத்தார்.

மகரிஷியை வணங்கிவிட்டு, அவர் சொன்னபடியே சிவலிங்கங்களுடன் சீடர்கள் இருவேறு திசைகளை நோக்கிப் புறப்பட்டார்கள்.

காடு மேடு மலை என்று சுற்றிய ஒரு சீடன் மனித சஞ்சாரமற்ற ஒரு குகையைத் தேர்ந்தெடுத்து, குரு தந்த சிவலிங்கத்தை ரகசியமாகப் புதைத்து வைத்தான். பிறகு, சிறிது காலத்திற்குள்ளாகவே அவன் மகரிஷியின் ஆசிரமத்திற்குத் திரும்பி வந்து விவரம் தெரிவித்தான். குருவின் கட்டளையை விரைவில் நிறைவேற்றி முடித்த திருப்தி அவனுக்கு ஏற்பட்டது.

மற்றொரு சீடனோ, குரு சொன்ன விதத்தில் சிவலிங்கத்தை வைத்துவிட்டு வர எங்கெங்கோ சென்றுகொண்டிருந்தான். அவன் எங்கு இருக்கிறான், எங்கே போனான், என்ன ஆனான் என்ற செய்தி எதுவும் ஆசிரமத்திற்கு எட்டவே இல்லை.

இவ்விதம் ஒரு வருடம் கழிந்த பிறகு அந்தச் சீடன் மகரிஷியை வந்து வணங்கினான். அவர் கொடுத்த சிவலிங்கத்தை அவரிடமே திருப்பிக் கொடுத்துவிட்டு,

''சுவாமி! தாமதித்து வந்ததற்கு மன்னியுங்கள். இந்தச் சிவலிங்கத்தை ஒருவரும் காணாத இடத்தில் வைக்க என்னால் இயன்ற மட்டிலும் முயன்று பார்த்தேன். ஆனால் தோல்விதான் ஏற்பட்டது. நான் மிகவும் ரகசியமான இடம் என்று நினைத்துப் பல இடங்களிலும் சிவலிங்கத்தை வைக்க முயன்றபோதெல்லாம் என் உள்ளத்திலிருந்து 'நான் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறேன்; நான் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறேன்' என்ற குரல் கேட்பது போல இருந்தது. இப்போதும்கூட நான் அந்தக் குரலைக் கேட்டுக்கொண்டுதான் இருக்கிறேன். அது யாருடைய குரல்? அவனையும் பார்க்க வொட்டாமல் செய்தால்தான் தங்கள் கட்டளையை நான் உண்மையில் நிறைவேற்ற முடியும். நான் எங்கே சென்றாலும் என்னுடன் வரும் அவன் யார்? அவனை நான் எப்படிப் பார்க்கவொட்டாமல் தடுப்பது? அது காரணமாகவே இந்தச் சிவலிங்கத்தை ஓர் இடத்திலும் என்னால் வைக்க முடியாமல் போயிற்று. தங்கள் கட்டளையை நிறைவேற்றாத குற்றத்திற்குத் தாங்கள் அளிக்கும் தண்டனையை ஏற்றுக்கொள்கிறேன்'' என்றான்.

சீடன் அப்படிச் சொன்னவுடனே மகரிஷி அவனை அன்போடு கட்டித் தழுவிக்கொண்டு, ''மகனே! நீ உண்மையை உணர்ந்துவிட்டாய். தண்டனைத் தரும் படி கேட்கும்போதே பரிசு பெறும் தகுதி உனக்கு வந்துவிட்டது. உன்னுள் சாட்சியாகக் குடிகொண்டிருக்கும் பரம்பொருளை நீ அறிந்துகொண்டு விட்டாய். அவனே ஆத்மா எனப்படுபவன். அவன் அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்திருக்கிறான். இந்தப் பெரிய உண்மையை நீ உணர்ந்துகொண்டதே உனக்கு உபதேசமாகும்'' என்றார்.

பக்கத்திலேயே விரைவில் சிவலிங்கத்தை வைத்துவிட்டுத் திரும்பிய முதலாவது சீடன் இருந்தான். சிவலிங்கத்துடன் திரும்பிய இரண்டாவது சீடனுக்கும் குருவுக்கும் நடைபெற்ற உரையாடல் அவனுக்கு உண்மையை உணர்த்திப் படிப்பினையைத் தந்தது.

கதையின் கருத்து: இறைவன் அங்கிங்கெனாதபடி எங்கும் நீக்கமற நிறைந்திருக்கிறான். அவன் இல்லாத இடம் என்று எந்த ஓர் இடமும் கிடையாது.

[249 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கடந்ததாக உயர்ந்த ஓர் நிலை இருக்கிறது. அதை அடைவதுதான் நமது லட்சியம் என்பதை உச்சிஷ்ட கணபதியின் தோற்றம் நமக்கு நினைவு படுத்திக்கொண்டிருக்கிறது.

பாதையில், தெருவில், ஆற்றோரத்தில், குளக் கரையில், அரசமரத்தடியில் என்றெல்லாம் எங்கே பார்த்தாலும் விநாயகரை வழிபடுகிறோம். எல்லாத் தெய்வ வழிபாடுகளுக்குள்ளும் விநாயகர் வழிபாடு தான் கடைப்பிடிப்பதற்கு மிகமிகச் சுலபமானது. சாணத்தையோ மஞ்சளையோ உருண்டையாகப் பிடித்து வைத்து அதில் அறுகம்புல்லைச் செருகி வைத்தாலே போதும். அங்கே கணநாதர் எழுந்தருளிவிடுவார். கடவுள் எல்லோருக்குமே சொந்தமானவர். யார் வேண்டுமானாலும் அவரை வணங்கிக் கடைத்தேற முடியும்; இதில் உயர்வுக்கோ தாழ்வுக்கோ இடமே இல்லை; பக்தி சிரத்தை ஒன்று மட்டும்தான் முக்கியமானது-இதையே விநாயகரின் எளிய வழிபாட்டு முறை உணர்த்துகிறது.


எல்லோருக்கும் உரிய தெய்வமாகவும், பக்தர்களுக்கு எளியவராகவும், பிரிவு வேறுபாடுகளை இணைப்பவராகவும், கால தேச வர்த்தமானங்களைக் கடந்தவராகவும் விக்னேசுவர விநாயகர் திகழ்கிறார்.

திருவுங் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவ மாய்நம துள்ளம் பழுக்கவும்
பெருகும் ஆழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

—விருத்தாசல புராணம்

சாளக்கிராம வழிபாடு

வி. கோபாலன்



"எல்லாம் இயற்கையின் சிருஷ்டியே; தெய்வமென்று ஒன்றும் கிடையாது" என்று பகுத்தறிவு வாதிகள் கூறுகிறார்கள்.

'இயற்கையே தெய்வம்' என்பது, இயற்கையின் மர்மத்தை, இயற்கையின் எழிலை, தெய்விகத்தைப் பக்தி உணர்வுடன் ரசிக்கும் ரசிகனின் விமரிசனம்.

இயற்கையாகவே உண்டாகும் சாளக்கிராமத்தில் தெய்வ மூர்த்தங்கள் பலவற்றின் விந்தைமிகு வடிவங்கள் காண்பதை இயற்கை என்பதா, தெய்விகம் என்பதா ?

கண்ணன் மீது துளசிக்குக் கட்டுக்கடங்காத அன்பு. கண்ணனும் துளசியும் அன்பில் கட்டுண்டு பரவசநிலையில் இருந்தபோது அதைக் கண்டு விடுகிறாள் ராதை. பொறாமை மேலிடுகிறது. 'துளசி மனிதப் பிறவியை அடையட்டும்' என்று சபித்து விடுகிறாள்.

ராதையின் சாபத்தினால் பூவுலகில் தர்மத்துவஜன் என்ற மன்னனின் மகளாகப் பிறக்கிறாள் துளசி. அசுர அரசன் சங்கசூடனை அவள் மணக்கிறாள். சங்கசூடனும் துளசியும் பேரின்ப வாழ்வு வாழ்கின்றனர். இந்த நிலையில் நல்லோரான தேவர்களைப் போருக்கு அழைத்தான் சங்கசூடன். போரில் தேவர்கள் தோல்வியே கண்டனர். சிவபெருமானுடைய உதவியை அவர்கள் நாடினார்கள்.

துளசி உயர்ந்த கற்புக்கரசியாக இருந்ததனாலும், உயிர் காக்கும் மந்திரமாலை சங்கசூடனிடம் இருந்ததனாலும் அவனை யாராலும் வெல்ல முடியவில்லை. பரமன் தந்திரத்தாலேயே வெல்ல வேண்டியதாகி விட்டது.

சங்கசூடனை எதிர்த்துப் போர்க்களம் புகுகிறார் சிவபெருமான். போர் நிகழ்கிறது. போர்க்களத்தில் மகாவிஷ்ணு அந்தணர் வடிவில் சென்று, சங்கசூடனிடமிருந்து மந்திரமாலையை யாசகமாய்ப் பெறுகிறார்; அதை அணிந்து துளசியிடம் செல்ல, அவள், வந்திருப்பது தன் கணவன் என்று எண்ணுகிறாள். மந்திரமாலை, மனைவியின் கற்பின் பெருமை இரண்டும் இவ்விதமாகக் குறைய, யுத்தரங்கத்தில் சிவபெருமானின் சூலாயுதத்திற்குப் பலியாகிறான் சங்கசூடன்.

கணவன் அழிந்த செய்தி கேட்டதும் மாயவனின் மாயை துளசிக்குப் புரிந்தது. "கல் மனதுடன் இரக்கமில்லாமல், என் கற்பின் பெருமையைக் குறைத்து, என் கணவனைக் கொன்ற நீ, கல்லாகவே ஆகவேண்டும்" என்று சினந்து சபித்தாள்.

துளசியின் வாக்குப்படியே கல்லுருவம் கொள்ளப் பிரதிக்கினை கொண்ட ஸ்ரீமகாவிஷ்ணு, கண்டகி நதிதீரத்தில் சாளக்கிராம ஸ்படிகக் கற்களாக உருவம் கொள்கிறார்.

திருமால், சாளக்கிராம வடிவம் பற்றிய வரலாறுகள் பல உண்டு.

வரபலத்தினால் செருக்குக் கொண்ட சுயன் என்ற அரக்கன் திருமாலிடம் போருக்குச் சென்று அவரது சக்கரத்தைப் பறித்துப் பூமியில் எறிந்ததாகவும், பிறகு திருமால் அவனை மாய்த்ததாகவும், பூமியில் விழுந்த விஷ்ணுவின் சக்கராயுதமே கண்டகி நதி தீரத்தில் சாளக்கிராமமாக இருந்து வருவதாகவும் ஒரு கதை.

கண்டகி, தாசிகுலத்தில் தோன்றியவளானாலும், ஒழுக்க நெறியைப் பின்பற்றி நிற்பவள்; திருமால் மீது அசையாத பக்தி கொண்டவள். தன் கற்புக்கு மாசு ஏற்படா வண்ணம் தன்னைக் காத்தருளும்படி நீலமேக வண்ணனை அவள் வேண்டினாள். பரந்தாமன் அவள் தவத்தில் பரவசப்பட்டு, "என்ன வரம் வேண்டும்?" என்று கேட்க, அவள், "நீங்கள் எனக்குக் குழந்தையாகப் பிறக்க வேண்டும்" என்று வேண்டவே, மகாவிஷ்ணு, "நீ கண்டகி நதியாக இமயத்தில் பிரவகித்து ஓடுவாய். அதில் நானும் தேவாதி தேவர்களும் சாளக்கிராம உருவில் தோன்றி என்றென்றும் ஜீவனோடு பிரகாசிப்போம்" என்று வரமளித்தார்.

நேபாளத்தைத் தன் உற்பத்தி ஸ்தானமாகக் கொண்டிருக்கும் கண்டகி நதியில் சாளக்

கிராமங்கள் கிடைக்கும் இடங்கள் யாவும் கர்ப்பிணி யின் வயிறு போல் வடிவமெடுத்துக் காட்சியளிக் கின்றன.

புனிதமான சாளக்கிராமக் கற்களில் அமைந் துள்ள விஷ்ணுவின் முக்கிய அம்சங்கள், வடி வங்கள் பற்றிய செய்திகள் 'தேவிபாகவத'த்தில் காண்கின்றன.

ஒரு நெல்லிக்காய் அளவு இருக்கும் சாளக் கிராமக் கற்கள், நாவற்பழ நிறத்தில் இருக்கும்.

நீலநிற வடிவமும், நான்கு சக்கர இலச்சினைகளும், மேல்பாகத்தில் வனமாலையும், பல விசித்திரமான ரதச் சித்திரிப்புக்களும் உள்ள சாளக்கிராமம், 'லட்சுமிநாராயணன்' எனப்படுகிறது. இதில் வனமாலையின் சித்திரிப்புக் காணப்படாவிட்டால், அந்தச் சாளக்கிராமம் திருமாலின் 'ஜனார்த்தனர் அம்சத்தைக் குறிக்கிறது என்பர்.

ரதம் போன்ற தோற்றம்; அதிலே இரண்டு துவாரங்கள்; நான்கு சக்கரங்கள்; இப்படிப்பட்ட அமைப்பைக் கொண்டிருக்கும் சாளக்கிராமம் ரகுநாதர் எனப்படுகிறது.

மிகச் சிறிய இரண்டு சக்கரங்கள் மட்டுமே கொண்ட சாளக்கிராமம் திருமாலின் வாமன அம்சத்தைக் குறிக்கிறது. மிகச் சிறிய இரண்டு சக்கர வடிவங்களுடன் வனமாலையும் இருப்பது ஸ்ரீதர சாளக்கிராமமாகும்.

பெரிய உருவில் வட்ட வடிவம்; இரண்டு சக்கரப் பொறிப்பு; இது தாமோதரருக்கான சாளக்கிராமம்.

சாளக்கிராமங்களுக்குள் ராஜராஜேசுவரம் என்பது மிகச் சிறப்புடையதாகும்.

ரணராமர் என்பது மற்றொரு வகை. இதில் இரு சக்கர வடிவையும் அம்பறாத்தூணியையும் காண லாம். இதன் அடிப்பாகம் அம்பு போல் இருக்கும்.

ஆதிசேஷ சாளக்கிராமம் என்பது மிகவும் அபூர்வ மான ஒருவகை. இதில் அடுத்தடுத்துப் பதினான்கு சக்கரச் சின்னங்களைக் காணலாம்.

மதுசூதனர் எனப்படும் சாளக்கிராமத்தில் இரு சக்கரங்களையும் கோஷ்பதத்துடன் (பசுவின் குளம்படி) காணலாம்.

ஒரே ஒரு சக்கரம் மட்டுமே உள்ள சாளக்கிராமத் திற்கு, சுதர்சனர் என்று பெயர். திருமாலின் சக்கர சக்தியின் வடிவமே இந்தச் சாளக்கிராமம்.

ஞானச் செல்வத்தை நல்கும் ஹயக்கிரீவரின் அம்சத்துடன் சாளக்கிராமம் உண்டு.

நரசிம்மர் அம்சத்துடன் லட்சுமிதேவியுடன் கூடிய லட்சுமிநரசிம்மர் வடிவிலும் சாளக் கிராமங்கள் உள்ளன.

மகாவிஷ்ணுவின் வாசுதேவர் அம்சத்திலும் சாளக்கிராமங்கள் உள்ளன. இவை விசேஷமான ஜொலிப்பு உடையவை.

இவை தவிர, 'மகர சாளக்கிராமம்' என்றும் ஒன்று உண்டு. மகர சாளக்கிராமத்தின்மீது அபிஷேகமாகப் பால் அல்லது நீரை ஊற்றினால், அது மீன் போலச் சுழலுமாம்.

சாளக்கிராமம் சத்ராகாரமாக இருந்தால் அது அரச பதவியையும், வட்டமாக இருந்தால் செல்வத்தையும், சகட வடிவில் இருந்தால் துயரத்தையும், சூலநுனியைப் போலவோ, பின்னப் பட்டிருந்தாலோ நாசத்தையும் அளிப்பதாகக் கூறுகிறார்கள்.

சக்தி மிக்க சந்நிதிகள் பலவற்றிலும் அந்த அந்தத் தேவதைக்கு உரிய சாளக்கிராமங்கள் பிரதிஷ்டை செய்யப்பெற்றிருப்பதைக் காணலாம். பரசுராம க்ஷேத்திரம் எனப்படும் கேரளத்துக் கோயில்களில் சாளக்கிராமப் பிரதிஷ்டை பெயர் பெற்றது. வியாசரிடமிருந்து ஸ்ரீமத்வாசாரியார் பெற்றதாகக் கூறப்படும் மூன்று சாளக்கிராமப் பிரதிமைகளை உடுப்பி ஸ்ரீகிருஷ்ணன் கோயிலில் இன்றும் காணலாம்.

இயற்கையாகக் கிடைக்கும் சாளக்கிராமக் கற்கள், தெய்வாம்சம் பொருந்திக் காணப் படுவதனால், இயற்கையில் தெய்வத்தைத் தேடுபவர் களுக்கும், தெய்வத்தில் இயற்கையைக் காண்பவர் களுக்கும் அவை பயனுடையவையாக இருக்கின் றன.

சாளக்கிராம வழிபாடு இன்று நேற்று ஏற்பட்ட தல்ல. இதன் காலத்தை இதுவரை யாரும் நிர்ண யித்துச் சொல்லாததனாலேயே நமது வழிபாடுகளில் எல்லாவற்றையும்விட இது சிறந்ததாகக் கருதப் படுகிறது. ☆

ஆன்மிக உரையாடல்

அக்டோபர் 12, 1919

சீடர் : சென்ற முறை தங்களுக்குக் கண்ட இன்ஃபுளுயென்ஸா'காய்ச்சலேயா குறிப்பிடுகிறீர்கள்?

சுவாமி துரியானந்தர் : இல்லே. நான் சொல்வது புரியில் (புரி ஜகந்நாதத்தில்) நடந்தது. அப்போது உடலில் எலும்பும் தோலும் தவிர எதுவுமில்லாமல் ஆயிற்று. இப்படி அப்படிப் புரண்டு படுக்கக்கூட என்றால் முடியாமல் போயிற்று ; அவயவங்களை அசைக்க இயலாது. பேசுகிற சக்தி மட்டும்தான் விட்டு வைத்திருந்தது. உடலில் இருக்கும் உயிர் வெளியிலுள்ள இன்னொர் உயிரோடு தீவிரமாகப் போராடுவதை ஒரு நாள் கண்டு கொண்டேன். உக்கிரமான போராட்டம். நீண்டகாலம் விடாமல் நடந்தது. அவை ஒன்றையொன்று இறுக்கிப் பிடித்துக்கொண்டிருந்தன. ஒரு சமயம் அவற்றி லொன்றும், அடுத்த சமயம் மற்ற ஒன்றுமாக மாறி மாறி வெற்றி கண்டுவிடும் நிலைக்கு வருவதாகத் தோன்றும். வெளிச் சக்தி உடலுள்ளிருந்து உயிரை இழுப்பதற்குப் பாடுபட்டுக்கொண்டிருந்தது. உயிரோ போக மறுத்தது. கடைசியில் வெளிச்சக்தி தோல்வியுற்று அப்பால் போய்விட்டது. அதனால் ஜீவன் தங்கிற்று. இது தோற்றிருந்தால், தானும் மற்றதோடு வெளியேயிருக்கும்; உடல் ஜீவனற்றதா யிருக்கும். அதாவது நான் இறந்துவிட்டிருப்பேன். சற்றுத் தொலைவிலிருந்து ஒரு காட்சியைப் பார்ப்பது போலவே நான் இந்தப் போராட்டத்தைக் கவ னித்துக் கொண்டிருந்தேன். வெளிச்சக்தி தோல்வி யுடன் சென்றபிறகு நான் சுற்றியிருந்தவர்களிடம், 'இந்தத் தடவை பிழைத்தாச்சு; நான் சாக மாட் டேன்' என்றேன். அதன்பிறகுதான் இந்தச் சதை யெல்லாம் மறுபடி வளர்ந்தது. இந்தச் சம்பவத் துக்கு முன்போ பின்போதான் (எப்போது என்று திருத்தமாக நினைவில்லை) சுவாமிஜி (விவேகானந் தர்) என் முன் தோன்றிச் சட்டென்று, "இது என்ன? எழுந்திரு" என்றார்.

அக்டோபர் 13, 1919

சுவாமி துரியானந்தர் தமது அறைக்கு வந்த சன்னியாசிகளும் பிரம்மசாரிகளும் அடங்கிய ஒரு கோஷ்டியுடன் பேசிக்கொண்டிருந்தார்.

சுவாமி துரியானந்தர் : (கூடியிருந்த துறவி களில் ஒருவரிடம் திரும்பி) "ஆண்டவன் இருக் கிறான் என்பதை நீங்கள் நம்புகிறீர்களா? (அந்தத் துறவி மௌனமாக இருக்கிறார்.) ஒரு சமயம் நான் இப்படிப்பட்ட நாத்திக உணர்ச்சியை அடைந்திருக் கிறேன்."

துறவி : ஆம், மகராஜ்! எனக்கும் சில சமயங் களில் ஆண்டவன் இல்லை என்ற உணர்ச்சி ஏற்படு கிறது.

சுவாமி துரியானந்தர் : "பார்த்தீர்களா? நான் மனம் விட்டுச் சொன்னது உங்களையும் உள்ளதைச் சொல்ல ஊக்கிவிட்டது. உள்ளதை உள்ளபடிச் சொன்னால் உங்களை அம்பலப்படுத்திக் கொள்வ தாகும் என்று முதலில் நினைத்தீர்கள் போலும் ! அது அப்படி இல்லை. இது மாதிரியான (நாத்திக) ஐயப்பாடு பலருக்கும் ஏற்படுகிறது. இது பகவானை அடையும் வழியில் ஒரு நிலையே. ஒரு சமயம் ஒரு புத்தகத்தைப் படித்ததன் விளைவாக எனக்கு நாத்திக பாவனை ஏற்பட்டது.

ஒரு பிரம்மசாரி : அதன் ஆசிரியர் ஐரோப்பி யரா?

சுவாமி துரியானந்தர் : ஆமாம். அப்பப்பா, அப் போது நான் உற்ற பயங்கர வேதனை உண்டே! எது வுமே எனக்கு அமைதி தராது. இந்த பாவம் ஓரிரண்டு நாள்தான் இருந்தது. அந்த நூல் ஒரே லோகாயதக் கருத்துக்கள் நிறைந்ததாகும். கடும் போராட்டத்துக்குப் பின் அதன் தொந்தரவிலிருந்து விடுபட்டேன்.

ஏ கூட இம்மாதிரி நிலை வழியாகச் செல்ல வேண்டியிருந்தது. அவர் முழுக்க முழுக்க வேதாந்த

—சுவாமி துரியானந்தர்

வாதி என்பது உங்களுக்குத் தெரியுமே. 'ஆத்மாவைக் கொலையாளியாக எண்ணுபவன், கொலை செய்யப்படுபவனாக எண்ணுபவன் ஆகியவரில் இருவருமே உண்மையறிந்தவரல்ல. அது கொல்வதுமில்லை; கொல்லப்படுவதுமில்லை' என்று கீதையில் சொல்லியிருக்கிறது. இந்தக் கருத்து ஏ-யின் உள்ளத்தில் ஆழப் பதிந்திருந்தது. ஒரு நாள் குருமகராஜ் அவரைக் கூப்பிட்டனுப்பி, 'உன்னால் ஒரு மனிதனைக் கொல்ல முடியுமா?' என்று கேட்டார். 'ஏன் ஐயா முடியாது? இதை எளிதே செய்வேன்' என்று ஏ- பதில் சொன்னார்.

'பாவ உணர்வு உன் மனச்சாட்சியைக் குத்தாதா?'

'ஏனோ? யாரை யார் கொல்வது?'

'சரி, சரி. இப்படியே முன்னேறு. இதுவும் ஒரு நிலை. ஓர் அறை வழியாக இன்னோர் அறைக்குள் நுழைவது போன்ற (இடை) நிலை. ஆனால் இங்கேயே நீ நின்றுவிடக் கூடாது. அப்படிச் செய்தால் அழிவடைவாய். இம்மாதிரி மனோபாவத்தோடு நீ கிருகஸ்தனாக இருக்க முடியாது என்பதை எச்சரிக்கை கொள்வாய்' என்றார் குருதேவர்.

ஈச்வரனை சாட்சாத்கரிப்பது மிகவும் கடினமாகும். லவலேச ஆசையும் (அவனை அடையும்) வழியை அடைத்துவிடும். 'ஒரு நூலில் வெகு நுண்ணிய ஒரு பிசிறு வெளிவந்தால்கூட அது ஊசியின் காதுக்குள் போவதில்லை' என்று குருமகராஜ் அடிக்கடி சொல்வார். சுவாமிஜி (விவேகானந்தர்) ஒருமுறை அவரிடம், அவர்களுக்கு (சுவாமிஜியின் உறவினருக்கு) அத்தியாவசியமான ஜீவனோபாயம் கிடைக்க வேண்டுமென்று அம்பிகையிடம் தயவு செய்து பிரார்த்தியுங்கள்' என்று கேட்டுக்கொண்டார். குருமகராஜ் அவரையே அம்பிகையிடம் வேண்டிக்கொள்ளச் சொல்லி ஆலயத்துக்கு அனுப்பினார். ஆனால் ஆலயத்துக்குள் சென்றவுடன் சுவாமிஜியால் விவேக வைராக்கியங்களைத் தவிர வேறெதற்காகவும் வேண்டிக்கொள்ள முடியவில்லை. எப்படி முடியும்? உள்ளூற அவருக்குப் பாசப் பற்றுதல் இல்லையே! இதை அவர் குருமகராஜிடம் சொன்னவுடன், அவர் எங்களிடம், 'இவன் எப்பேர்ப்பட்ட மகாத்மா பார்த்தீர்களா? ஜகன்மாதாவிடம் விவேகத்தையும் வைராக்கியத்தையும் தவிர வேறு எதையுமே இவனால் கேட்க முடியவில்லை' என்று கூறினார். ★

நன்றி



ஒரு சமயம் உலகப் புகழ்பெற்ற 'அகராதி ஜான்சன்' (Dictionary Johnson) ஒரு வாசகசாலையில் அமர்ந்து ஏதோ புத்தகம் படித்துக்கொண்டிருந்தார். அப்பொழுது அந்தப் பகுதிக்கு வந்த இங்கிலாந்துப் பேரரசி, வாசகசாலையில் ஜான்சன் இருப்பதைக் கேள்வியுற்று, உடனே நேராக வாசகசாலைக்கே சென்று ஜான்சனைச் சந்தித்து உரையாடினார். ஜான்சனின் மேதாவிலாசத்தை இளவரசியார் பலவாறு புகழ்ந்தார். இளவரசி புறப்படும் சமயம், அவருக்குப் புன்னகையுடன் விடை கொடுத்தார் ஜான்சன். அவர் ஏதும் பேசாமல் மௌனமாக இருந்ததைக் கண்ட நண்பர்கள், "இளவரசியார் உங்களைப் பலவாறு புகழ்ந்தபோது நீங்கள் ஏன் பதிலுக்கு 'நன்றி' கூடத் தெரிவிக்கவில்லை" என்று கேட்டனர். அதற்கு ஜான்சன், "இளவரசியார் என் மீதுள்ள மதிப்புக் காரணமாகப் பலவாறு புகழ்ந்தார்கள். அதற்கு நான் 'நன்றி' கூறினால், அவர் கூற்றை ஒப்புக்கொண்டது போலாகும். அந்த அளவிற்கு நான் ஒன்றும் பெரிய மேதை அல்ல" என்றார் அடக்கத்துடன்.

—க. ஒப்பிலி அப்பன்



அயோத்தி யாத்திரை

20-4-79 ஆம் நாள் மாலை சரியாக 4-30 மணி ஆயிற்று. ஒரு சைக்கிள் ரிக்ஷாவில் கார்த்தி கேயனும் நானும் அயோத்தியிலுள்ள கோவில்களைத் தரிசிப்பதற்காக நகரத்தார் சத்திரத்திலிருந்து புறப்பட்டோம்.

அந்த ரிக்ஷாக்காரர் ஒவ்வோர் இடத்திற்கும் எங்களை அழைத்துச் சென்றார். நாங்கள் ஆங்காங்குள்ள கோயில்களுக்குச் சென்று மீண்டும் திரும்பும் வரையிலும், பொறுமையுடன் அவர் வெளியே காத்திருந்து ஒவ்வோர் இடத்திற்கும் எங்களை அழைத்துச் சென்றார்.

முதலில் ரிக்ஷாக்காரர் 'துளசி ராமாயண மந்திர்' என்னும் இடத்திற்கு எங்களை அழைத்துச் சென்றார். அங்கே கட்டிட வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. அதில் சீதாராமன் சந்நிதியுடன் துளசி ராமாயணம் முழுவதையும் (காசியில் உள்ள துளசி மானஸ் மந்திர் போல) சலவைக் கல்லில் அமைப்பதாக இருக்கிறார்கள். நாங்கள் சென்றபோது கட்டிட வேலைகளில் பெரும்பகுதி முடிந்திருந்தது. அடுத்த வருஷத்தில் கட்டிடம் முழுவதையும் கட்டி முடித்துவிடுவார்கள் என்று தோன்றியது.

துளசி ராமாயண மந்திரிலிருந்து 'கீதா பவன்' என்ற இடத்திற்குச் சென்றோம். ஸ்ரீமத் பகவத் கீதை முழுவதையும் அங்குச் சலவைக் கற்களில் பொறித்திருக்கிறார்கள்.

அடுத்து, 'விபீஷண குண்டம்' என்ற பெரிய குளத்திற்குச் சென்றோம்: காலையில் நான் சென்றிருந்த இடம்தான் அது. மயிலாப்பூர் கபாலீச்வரர் குளத்தில் நான்கில் ஒரு பங்கு இருக்கும் என்று விபீஷண குண்டத்தைச் சொல்லலாம். அந்தக் குளத்திற்கு நான்கு பக்கங்களிலும் நேர்த்தியான படிக்கட்டுகள் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால் போதுமான கவனிப்பு இல்லை என்பதைப் பார்த்தவுடனேயே தெரிந்துகொள்கிறோம். குளத்தின் கரையில் ஒரு ஸ்தூபி விபீஷணரின் நினைவாக அமைக்கப்பட்டிருக்கிறது.

வழியில் இராமானுஜர் சம்பிரதாயத்தைச் சேர்ந்தவர்கள் கட்டியுள்ள ஒரு கோயிலுக்குச் சென்றோம். அதைக் கோயில் என்று சொல்வதா மடம் என்று சொல்வதா என்பது எனக்குத் தெரியவில்லை. அங்கு ராமர் சந்நிதிக்கு முன்னால் பல தேவ தேவியரின் திருவுருவப் படங்கள் தொங்குகின்றன. அங்கிருந்த ஆண்டாள் படத்தைச் சுட்டிக்காட்டி, "இதே படத்தின் ஒரு பிரதியைச் சட்டம் போட்டு மயிலாப்பூர் ராமகிருஷ்ண மடத்தில் மாட்டியிருக்கிறார்கள்" என்று கார்த்திகேயனிடம் கூறினேன். அங்கிருந்த சாது ஒருவர் துளசிதளத்துடன் தீர்த்தப் பிரசாதம் கொடுத்தார். அங்கேயே இரண்டு மூன்று சந்நியாசிகளும் வாழ்ந்து வருகிறார்கள். அங்குள்ள சந்நிதியில் இராமர் சீதை இலக்குமணர் அருள் பாலிக்கிறார்கள். அந்த மடத்துப் பெரியவர்களின் வண்ணப் படங்களும் சுவர்களில் அலங்கரித்திருப்பதைப் பார்க்கிறோம்.

அங்கிருந்து 'தசரத் மந்திரு'க்குக் கிளம்பினோம். வழியில் பாபாஜிகள் உள்ள ஒரு மடத்தில் நாம சங்கீர்த்தனம் அமர்க்களப்பட்டுக் கொண்டிருந்தது.

நாங்கள் 'தசரத் மந்திரு'க்கு சென்றபோது சந்நிதியில் திரை தொங்கவிடப்பட்டிருந்தது. உள்ளே பூஜை நடந்துகொண்டிருந்தது. சந்நிதியை வலம்வரும்போது ஸ்ரீஆஞ்சனேயருக்கும் அங்கு ஒரு சந்நிதி இருப்பதைப் பார்த்தேன். சற்றுநேரம் காத்திருந்த பிறகு முக்கியச் சந்நிதியில் பூஜை முடிந்து திரைகளை விலக்கினார்கள். ஸ்ரீராமர், சீதை, அநுமார் ஆகியவர்களுடன் மற்றும் பல விக்கிரகங்கள் சந்நிதியில் உள்ளன. 'தசரத் மந்திர்' என்று வழங்கப்படும் இந்த இடத்தில் தசரத மன்னர் ஸ்ரீராமபிரானைப் புத்திரனாகப் பெறுவதற்குப் புத்திரகாமேஷ்டி யாகம் செய்தார். தசரத மன்னர் இந்த இடத்தில் வேள்வி இயற்றிய பிறகு ராமர் அவதரித்தார் என்று இன்னும் பல விவரங்களுடன் கோவில் பூசாரி விளக்கிக் கூறினார்.

தசரத் மந்திரிலிருந்து 'ஸ்ரீராம் ஜன்மபூமி' என்னும் இடத்திற்குச் சென்றோம்.

ராமசரித மானஸ் பவன், ஸ்ரீராம் ஜன்ம பூமி, ராஜா தசரதர் அரண்மனை ஆகிய மூன்று இடங்களும் அடுத்தடுத்து மிகவும் அருகிலேயே அமைந்துள்ளன. அதைக் கண்டதும் கார்த்திகேயனிடம், ''இந்த மூன்று இடங்களையும் போலவே மயிலை ராமகிருஷ்ண மடத்தில் மடம், அலுவலகம், மருத்துவமனை, நூலகம், ஆகியவை அடுத்தடுத்து அமைந்திருக்கின்றன என்று கூறியபடியே ராம சரித மானஸ் என்னும் மண்டபத்தினுள் நுழைந்தேன். அங்கே சலவைக் கல்லில் ராமசரித மானஸ் முழுவதையும் பொறிப்பதாக இருக்கிறார்கள். கட்டிட வேலைகளில் பெரும்பகுதி முடிந்திருந்தது.



'ஸ்ரீராம் ஜன்மபூமி' என்பதுதான் ராமர் பிறந்த இடம். அதில் ஒரு பகுதி முஸ்லிம்களின் மசூதியாகவும், மறுபகுதி ராமர் கோவிலாகவும் இருக்கிறது. இந்துக்களுக்கு உரிய அந்த இடத்தில் முஸ்லிம்கள் மசூதி எழுப்பியிருக்கிறார்கள். பாபர் காலத்திலிருந்து பிரிட்டிஷ் ஆட்சி முடிய உள்ள காலங்களில் 76 தடவை இந்துக்கள் அந்த இடத்தைத் தங்களுக்கு உரிய இடமாக ஆக்கிக் கொள்ள முஸ்லிம்களுடன் போராடினார்களாம். அவற்றுள் 'புண்ணியவான் ஔரங்கசீப்' காலத்தில் மட்டும் முப்பது தடவை முஸ்லிம்களுடன் இந்துக்கள் சண்டையிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதாம்.

இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இங்கே சச்சரவு நேருவதைத் தவிர்க்க, அரசாங்கம் எப்போதும் இந்த இடத்தில் துப்பாக்கி ஏந்திய போலீஸ்காரர்களை வைத்திருக்கிறது. என்னைப் போல ஸ்ரீராம் ஜன்மபூமியைத் தரிசிக்கச் செல்பவர்களுக்கு, அங்கே சந்நிதியில் ராமர் தரிசனம் கிடைப்பதற்கு முன்பாகவே துப்பாக்கி ஏந்திய போலீஸ்காரர்களின் தரிசனம் கிடைத்துவிடும்.

ஸ்ரீராமபிரான் பிறந்த இடத்தை இரும்புக் கம்பிகளுக்கிடையில் இருந்துதான் தரிசிக்க முடிகிறது. அதுதான் இப்போது மசூதியின் ஒரு பகுதியாக மசூதிக்குள் இருக்கிறதே! அங்கே சந்நிதியில் இருந்த விக்கிரகங்களை வெளியில் ஒரு சந்நிதி அமைத்து அதில் வைத்து வழிபட்டு வருகிறார்கள். ஸ்ரீராமர், சீதை, லட்சுமணன், அனுமன் ஆகியோர் தாம் அங்குள்ள மூர்த்திகள்.

இந்துக்கள் ஸ்ரீராம் ஜன்மபூமியைத் திரும்பப் பெற வழக்கு மன்றத்தில் வழக்குத் தொடுத்திருக்கிறார்கள். வழக்கு இப்போது நடந்துகொண்டிருக்கிறதாம்.

அடுத்து 'ராஜா தசரதரின் அரண்மனை' என்ற இடத்திற்குச் சென்றோம். அதில் இரண்டு சந்நிதிகள் உள்ளன. ராமர், லட்சுமணன், சத்துருக்கினன், பரதன் ஆகியோர் தம் மனைவியருடன் உள்ள சந்நிதி ஒன்று. மற்றொரு சந்நிதியில் தசரதர் தம் மனைவிமார்களுடன் இருக்கிறார். இதே சந்நிதியில் புரியிலுள்ள ஜகந்நாதர், சுபத்ரா, பலபத்திரருக்கும் விக்கிரகங்கள் உள்ளன. இரண்டு சந்நிதிகளிலும் உள்ள எல்லா விக்கிரகங்களுமே சிறியவை. அவற்றைப் பார்க்கும்போது பொம்மைக் கொலு வைக்கப்பட்டிருப்பதைப் போலவே தோன்றியது.

தசரத மன்னரின் அரண்மனை இருந்ததாகச் சொல்லப்படும் அந்த இடத்திலிருந்து அரை பர்லாங் தூரத்திலுள்ள 'கைகேயி கோப் பவன்' என்ற இடத்திற்குச் சென்றோம். அங்கே கைகேயிக்கு அரண்மனை இருந்ததாம். கூனியின் சூழ்ச்சிக்குப் பிறகு கைகேயி அங்கேதான் கோபித்துக் கொண்டிருந்தாளாம். அங்கே சந்நிதி போன்று உள்ள இடத்தில் கைகேயியின் பொம்மை தலைவிரி கோலத்துடன் கறுப்புப் புடைவை அணிந்து கோபம் கொண்ட நிலையில் படுத்திருக்கிறது. அதற்கு அருகில் தசரதர் இருக்கிறார். அவரை ஒட்டி அமைச்சரையும் வசிஷ்டரையும் பார்க்கிறோம். இவர்களை எல்லாம் பார்த்துக்கொண்டு மூலையில் கூனியின் பொம்மை இருக்கிறது. ஒரு கோடியில் ராமரும் லட்சுமணரும் இருக்கிறார்கள்.

அடுத்துப் பாட்னா அரசரால் சமீப காலத்தில் கட்டப்பட்ட 'அம்மாவாம் மந்திர்' என்ற கோவிலுக்குச் சென்றோம். அந்தக் கோவிலில் பல மூர்த்திகளுக்கும் சந்நிதிகள் உள்ளன. பொதுவாக இந்தச் சந்நிதிகள் அனைத்தும் பிர்லாவால் கட்டப்பட்ட கோவில்களில் உள்ள சந்நிதிகளைப் போன்று காணப்படுகின்றன. அங்குள்ள சந்நிதிகளின் மொத்த எண்ணிக்கை 13. அவற்றிலுள்ள மூர்த்திகளாவன :—1. ராதையும் கிருஷ்ணரும்,

2. லட்சுமியும் நாராயணனும், 3. சங்கடவிமோசன் ஸ்ரீஹனுமான். இந்தச் சந்நிதியில் அனுமனுக்கு மூன்று சிலைகள் உள்ளன. சஞ்சீவி மலையை ஏந்திய நிலையில் உள்ள அனுமனின் சிலை பெரியது. அந்தச் சிலைக்கு இருமருங்கிலும் அனுமனின் இரண்டு சிலைகளைக் காண்கிறோம். ஓர் அனுமனின் சிலையின் மார்பில் ராமர் சீதையுடன் உள்ளார். மற்றோர் அனுமனின் சிலை தியான நிலையில் அமைந்துள்ளது. இந்த இரண்டு சிலைகளுக்கும் முறையே பக்திருப அனுமான், ஞானரூப அனுமான் என்ற பெயர்கள் வழங்கப்பெறுகின்றன, 4. நவதுர்க்கை, 5. ஆதிசேஷன் மீது பள்ளி கொண்ட நிலையில் மகாவிஷ்ணு, 6. இங்கே சிவனும் பார்வதியும் நடு நாயகமாக வீற்றிருக்கிறார்கள். வலப் புறத்தில் மாதா அன்னபூர்ணேசுவரியிடம் பெருமான் பிக்ஷை கேட்கும் நிலையில் பளிங்குச் சிலைகளைக் காண்கிறோம். இடப் புறத்தில் மார்க்கண்டேயர் சிவலிங்கத்தைக் கட்டியணைத்துக்கொண்டிருக்கிறார், 7. கணபதி, 8. துர்க்கை, 9. அர்த்தநாரீசுவரர், பஞ்சமுக மகாதேவர் (சிவபெருமான் ஐந்து முகங்களுடன் உள்ள நிலை) ஆகிய இருவரும் இந்தச் சந்நிதியில் உள்ளனர். 10. சப்தரிஷிகளுக்கும் ஒரு சந்நிதி. அவர்களைத் தவிர இதில் நமது ஆசார்ய சங்கரரும் இருக்கிறார், 11. காசி விச்வநாதர், 12. ராமரும் சீதையும் இந்தச் சந்நிதியில் அமர்ந்த நிலையில் இருக்கிறார்கள், 13. சரயு மாதா (சரயு நதி) வுக்கும் ஒரு சந்நிதி. இங்குச் சந்நிதியிலேயே இந்தக் கோவிலை நிர்மாணித்த பாட்னா அரசரின் குருவையும் பளிங்குச் சிலையில் காண்கிறோம்.

அம்மாவாம் மந்திரிலிருந்து 'ரத்தின சிம்மாசன்' என்று வழங்கப்படும் பெரிய ஒரு கட்டிடம் அமைந்துள்ள இடத்திற்குச் சென்றோம். கட்டிடத்தில் நுழைவதற்கும் முன்பே வெளியில் குரங்குகள் பல அங்கும் இங்கும் ஓடிக் கொண்டிருந்தன. அவற்றைக் கண்டபோது பிருந்தாவனத்திலுள்ள ராசலீலை நடந்த இடமாகிய 'நிதுவனம்' என் நினைவுக்கு வந்தது. அங்கும் இது போலவேதான் ஏராளமான குரங்குகள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன.

'ரத்தின சிம்மாசன்' என்று சொல்லப்படும் இந்த இடத்தில்தான் ராமருக்குப் பட்டாபிஷேம் நடைபெற்றதாம். சந்நிதியில் ஸ்ரீராமரையும் சீதையையும் பார்க்கிறோம். புகழ்பெற்ற ராமர் பட்டாபிஷேகப் படமும் அங்குள்ள சுவரை அலங்கரிக்கிறது.

ரத்தின சிம்மாசனத்திலிருந்து சற்றுத் தூரத்திலேயே அமைந்துள்ள மற்றோர் இடம் 'கனக் பவன்.' அயோத்தியாவிலேயே மிகப் பெரிய இடம் மிகப் பெரிய கட்டிடம், மிகப் பெரிய கோவில் என்று கனக் பவனைத்தான் சொல்ல வேண்டும்.

கனக் பவன் என்பது ஒரு பெரிய கோவில். அதன் காம்பவுண்டுக்குள் நுழைந்ததுமே 'ஜானகி பாக்' என்னும் பூங்காவை இடப் புறத்தில் பார்க்கிறோம். கனக் பவன் இப்போதுள்ள இடத்தில்தான் ராமரின் புகழ் பெற்ற அரண்மனை இருந்ததாம். வனவாசம் முடிந்து வந்தபிறகு ராமர் வாழ்ந்த இடம் இது. இங்கிருந்த அரண்மனையிலிருந்தே அவரது ஆட்சி நடைபெற்றது. கோவிலின் உச்சியில் அனுமன் உருவம் பதித்த கொடி பறந்துகொண்டிருந்ததைக் கண்டோம். அந்தக் காட்சி பேலூர் ஸ்ரீராமகிருஷ்ணர் ஆலயத்தின் உச்சியில் விழாக் காலங்களில் பறக்கும் கொடியை நினைவுபடுத்தியது. கோவிலின் உள்ளே உள்ள சுவர்களில் சுயம்வரக் காட்சி போன்ற இராமாயண நிகழ்ச்சிகள் சிலவற்றைப் பெரிய அளவில் வண்ண ஓவியங்களாகக் காண்கிறோம். கர்ப்பக்கிருகத்தின முகப்பு வாயிலில் பித்தளையில் வார்க்கப்பட்ட தசாவதாரக் காட்சிகளை வெகு நேர்த்தியாக அமைத்திருக்கிறார்கள். கர்ப்பக் கிருகத்திலுள்ள இராமர், சீதை விக்கிரகங்கள் மனதைப் பரவசப்படுத்துகின்றன. அயோத்தியிலுள்ள கோயில்களிலேயே மனதைப் பரவசப் படுத்தும் நிலையில் காண்கிற விக்கிரகங்கள் என்று இவற்றைத்தான் சொல்ல முடியும்; சொல்ல வேண்டும். சாந்நித்தியம் மிக்க இந்த ஓர் இடத்தைப் பார்ப்பதற்காகவே அயோத்திக்குச் செல்லும் சிரமத்தை மேற்கொள்ளலாம்.

நாங்கள் அங்குச் சென்றபோது சுமார் பதினைந்து பேர் வாத்தியக் கருவிகளுடன் கர்ப்பக்கிருகத்தின் முன்னால் ராமபஜனை செய்து கொண்டிருந்தார்கள் கோயிலின் நீண்ட தாழ்வாரத்தில் துளசிமாடத்தின் அருகில் ஒரு சிறிய மண்டபம் உள்ளது. அதில் சலவைக்கல்லில் திருவடிகளைக் காண்கிறோம். ராமர் பாதம் எனப்படும் அதைப் பிரதட்சிணம் செய்து வணங்கிவிட்டுக் கோயிலேயே சிறிதுநேரம் அமர்ந்துவிட்டு, ஜானகி நந்தவனத்திற்குச் சென்றோம். அந்தப் பூங்காவில் நடுவிலுள்ள மண்டபத்தில் ராமரும் சீதையும் உள்ள திருவுருவப் படத்தின் முன்னால் ஒரு பண்டிதர் கீதைப் பிரவசனம் செய்து கொண்டிருந்தார். சுமார் நாற்பது பேர் பக்திசிரத்தையுடன் அந்தப் பிரவசனத்தைச் செவிமடுத்துக்கொண்டிருந்தார்கள்.

ஜானகி பாக்கைத் தவிரவும் கோவில் பிராகாரத்தைச் சுற்றியுள்ள தோட்டத்திற்குச் சென்றோம். அங்கு ரோஜா, மல்லிகை, வாழை, பல வகையான மலர்கள் நல்ல கவனிப்புடன் செழித்து வளர்ந்துள்ளன. மொத்தமாகப் பார்த்தால் சுமார் பதினைந்து ஏக்கர் நிலத்தில் கனக் பவன் அமைந்துள்ளது. கோவிலிலிருந்து வெளியில் வரும்போது ஒரு கிணற்றைக் கண்டோம். ஜானகி கூப் எனப்படும் அந்தக் கிணற்றிலிருந்து தான் கனக பவனைச் சேர்ந்த தோட்டங்களுக்கு நீர் பாய்ச்சப்படுகிறது.

கனக் பவனிலிருந்து 'ஸ்ரீமத் வால்மீகி பவன்' என்ற இடத்திற்குக் கிளம்பினோம். வழியில் 'ஸ்ரீஅனுமான் கடி'க்குச் சென்றோம். உடன் வந்த கார்த்திக், ''ஸ்ரீராமர் தமது மறைவிற்கு முன்பு அனுமனுக்கு இந்த இடத்தில்தான் பட்டம் கட்டி அயோத்தியை அனுமனிடம் ஒப்படைத்தார்; அப்போது முதல் அயோத்தி அனுமனின் மேற்பார்வையில் இருந்து வருவதாக ஐதிகம். யாத்திரிகர்கள் முதலில் அனுமன் கடிக்கு வந்து இங்கே தரிசனத்தை முடித்துக்கொண்ட பிறகுதான் பிற இடங்களைத் தரிசிக்கச் செல்ல வேண்டும் என்பர். அயோத்தியில் இந்தக் கோவிலுக்கு உள்ள மதிப்பு வேறு எந்தக் கோவிலுக்கும் இல்லை'' என்றார். ''அந்த விவரம் தெரியாமலேயே நான் காலையில் அனுமன் கடிக்கு முதலில் சென்றது நல்லதாயிற்று. ராமர் இங்கு அனுமனுக்குப் பட்டம் கட்டினாரோ இல்லையோ, இந்தக் கோவிலில் குரங்குகள் ஏராளமாக இருக்கின்றன'' என்று நான் கூறினேன்.

''காசி, பிருந்தாவனம், மதுரா, சித்திரகூடம் ஆகிய ஸ்தலங்களுக்குச் செல்லும் யாத்திரிகர்களில் சிலர், அந்த ஊரையே பரிக்கிரமம் (வலம் வருதல்) செய்கிறார்கள். அதுபோல் அயோத்தியையும் பக்தர்கள் பிரதட்சிணம் செய்வதுண்டா?'' என்று கார்த்திகேயனிடம் விசாரித்தேன். அதற்குப் பதிலாக அவர், ''கார்த்திகை மாதத்தில் வரும் நவமியன்று சுமார் மூவாயிரம் பேர் பரிக்கிரமம் செய்கிறார்கள். அவ்விதம் அன்றைய தினம் அயோத்தியை வலம் வருவதுதான் விசேஷமாகக் கருதப்படுகிறது. ஏனைய நாட்களில் அபூர்வமாகச் சிலர் பரிக்கிரமம் மேற்கொள்வதும் உண்டு'' என்றார்.

''பிருந்தாவனத்தை நான் பரிக்கிரமம் செய்திருக்கிறேன். அதன் சுற்றளவே எட்டு மைல்தான். இங்கு அயோத்தியின் சுற்றளவு எவ்வளவு?'' என்று கேட்டேன். ''ராமரின் வாழ்க்கையுடன் சம்பந்தப்பட்ட சுற்றுப்புற எல்லா இடங்களையும் சேர்த்து இங்கே பரிக்கிரமம் செய்பவர்கள் 24 மைல் நடக்க வேண்டும்'' என்றார் கார்த்திக்.

பேசிக்கொண்டே இருவரும் ஸ்ரீமத் வால்மீகி ராமாயண பவனைச் சென்றடைந்தோம். அங்குள்ள கோவிலில் ராமருக்கும் ஆஞ்சனேயருக்கும் தனித் தனியே சந்நிதிகள் உள்ளன. அந்த இரண்டு சந்நிதிகளுக்கும் சென்று தரிசனம் செய்தோம். கோவில் சுவர்களில் வைணவப் பெரியோர்களின் படங்களையும், இராமாயணக் காட்சிகள் சிலவற்றையும் வரைந்து வைத்திருக்கிறார்கள். பண்டைய அந்தக் கோவிலின் எதிரில் ஒரு பெரிய மண்டபம் புதிதாகக் கட்டப்பட்டு வருகிறது. அதுவே வால்மீகி பவனம் ஆகும். கோவிலையும் புதிதாகக் கட்டப்பட்டு வரும் வால்மீகி பவனம் கட்டிடத்தையும் 'ஸ்ரீமனிராம் சாவ்னி ஸேவா டிரஸ்ட்' என்னும் அமைப்பு நடத்தி வருகிறது. இங்கு நாள்தோறும் சுமார் ஐந்நூறு சன்னியாசிகளுக்கு அன்னதானம் செய்யப்படுகிறது. விரும்பினால் சன்னியாசிகள் அங்கேயே சில காலமோ, சில வருஷமோ, வாழ்நாள் முழுவதுமோ தங்கிக் கொள்ளலாம். நான் சென்றிருந்தபோது அங்கேயே தங்கியுள்ள சுமார் ஐம்பது சன்னியாசிகளைக் கண்டேன். சன்னியாசிகள் தங்கும் அறைகளையும் வராந்தாக்களையும் சென்று பார்த்தேன். இங்கே தங்கியுள்ள சன்னியாசிகளில் பெரும்பாலோர் வைணவர்களாகிய பாபாஜிகள் ஆவர். தசநாமி சன்னியாசிகளை மிகவும் குறைவாகவே அங்கே பார்க்க முடிகிறது.

கோவிலிலிருந்து சாலையின் நேர் எதிரில் அமைந்துள்ள ஸ்ரீமத் வால்மீகி ராமாயண பவனுக்குக் கார்த்திகேயனும் நானும் சென்றோம். அங்கே சுமார் ஆயிரம் பேர்கள் அமரத்தக்க பெரிய ஹால் உள்ளது. அதன் உட்புறச் சுவர்களில் வால்மீகி ராமாயணம் முழுவதையும் சலவைக் கற்களில் பதிக்கும் வேலை நடைபெற்று வருகிறது.

உடன் வந்த கார்த்திக்கிடம், ''இந்த பவனத்தின் மஹந்த் எங்கு இருக்கிறார்? அவரைச் சந்தித்துப் பேச முடியுமா?'' என்று கேட்டேன். கார்த்திக் அங்கே கோவிலைச் சேர்ந்த காரியாலயத்தில் விசாரித்தபோது மஹந்த் தில்லி சென்றிருப்பதாகத் தெரிய வந்தது. ஆகவே மஹந்துக்கு அடுத்த படியாக அங்கு நிர்வாகத்தைக் கவனித்து வருபவரைச் சந்தித்தோம். அவர் ஆங்கிலம் தெரிந்த அங்குள்ள கிருபாளு ராம்தாஸ் என்னும் பாபாஜி

ஒருவரின் துணையுடன், கோவிலைச் சேர்ந்த ஹாலில் எங்களை அமரச் செய்து, எங்களுடன் உரையாடினார். அவருடன் உரையாடியதிலிருந்து நான் தெரிந்துகொண்ட கருத்துக்களின் சாரம் இதுதான்:

"இந்த ராமர் கோயில் சுமார் இருநூறு ஆண்டுகளுக்கும் மேலாக அங்கு இருந்து வருகிறது. ஆனால் ஸ்ரீ மனிராம் தாஸ் சாவ்னி ஸேவா டிரஸ்ட் என்ற பெயரில் இப்போது கோவிலை நிர்வகித்து வரும் இந்த டிரஸ்ட் சமீப காலத்தில் ஏற்படுத்தப் பட்டதே ஆகும். இதன் மஹந்த் (தலைவர்) நிருத்திய கோபால் தாஸ்ஜி ஒரு சன்னியாசி ஆவார். அவருக்குத் துணையாக, டிரஸ்டின் செக்ரடரியாக அனந்தராம் தாஸ்ஜி என்பவர் இருக்கிறார். ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த அவர் ஆங்கிலம், தமிழ், தெலுங்கு ஆகிய மூன்று மொழிகளிலும் சரளமாகப் பேசக் கூடியவர். அவரும் மஹந்தும் தற்சமயம் தில்லிக்குச் சென்றிருக்கிறார்கள். அனந்தராம் தாஸ்ஜி தங்களைப் பார்த்திருந்தால் மிகவும் சந்தோஷப்பட்டிருப்பார்.

"அரசாங்க அதிகாரிகள் வால்மீகி பவனைக் கட்ட முயலும் இந்த டிரஸ்டிற்கு வருமான வரியிலிருந்து விலக்கு அளிக்க மறுத்து விட்டார்கள். அந்த அதிகாரிகள் முஸ்லிம்கள். ஆகவேதான் அவ்விதம் தொந்தரவு செய்கிறார்கள். மத நிறுவனமாகிய எங்கள் டிரஸ்டிற்கு வருமான வரிச் சலுகை கோரிக் கோர்ட்டில் கேஸ் போட்டிருக்கிறோம். அந்தக் கேஸ் சம்பந்தமாகவே தற்சமயம் மஹந்துவும் செக்ரடரியும் தில்லி சென்றிருக்கிறார்கள்.

"இந்த வால்மீகி ராமாயண பவனத்தின் கட்டிட வேலைகள் பத்து ஆண்டுகளுக்கு முன்னால் துவக்கப் பட்டன. போதுமான பணம் வந்திருந்தால் எப்போதோ இந்தப் பவனம் கட்டி முடிக்கப் பட்டிருக்கும். பணம் வசூல் ஆக ஆகக் கட்டிட வேலையும் படிப்படியாக நடந்து வருகிறது. அது எப்போது, எப்படி முடியும் என்பதை நிச்சயமாகச் சொல்வதற்கில்லை. தேவையான பணம் வருமானால் விரைவிலேயே பவனம் கட்டி முடிக்கப்படும். எப்போது முடியும் என்பது பணம் வருவதைப் பொறுத்தே அமையும்.

"இங்கு வரும் யாத்திரிகர்களும் வெளியூர் அன்பர்களும் தரும் நன்கொடையைக் கொண்டு இந்த நிறுவனம் நடத்தப்படுகிறது. வசூலாகும் நன்கொடையை முதலாவதாக இங்கு வரும் சாதுக்களுக்கு உணவிடுவதற்காகச் செலவிடுகிறோம். அந்தச் செலவு போக உள்ள பணம் பவனம் கட்டுவதற்குச் செலவிடப்படுகிறது.

"தற்சமயம் சுமார் முந்நூறு சாதுக்கள் இங்கே தங்கியுள்ளனர். அவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு நாளும் கூடவோ குறையவோ செய்யும். சராசரி ஐந்நூறு சன்னியாசிகளுக்கு ஒவ்வொரு நாளும் உணவிடுகிறோம். இந்த மாதத்தில் ராம நவமியின் போது (5-4-79) பாபாஜிகள், தசநாமி சன்னியாசிகள் உட்படச் சுமார் இரண்டாயிரம் பேர்களுக்கு இங்கு அன்னதானம் நடைபெற்றது."

* * *

என்னுடன் ஆங்கிலத்தில் பேசிய அன்பரின் பெயர் கிருபாளு ராம்தாஸ் என்பதாகும். அவர், ஸ்ரீராமகிருஷ்ண-விவேகானந்த நூல்களைப் படித்தவர். பிருந்தாவனத்தில் இருந்தபோது, அங்குள்ள ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரின் கோவிலுக்கு ஒவ்வொரு நாளும் செல்வதைத் தாம் வழக்கமாகக் கொண்டிருந்ததாக அவர் கூறினார். பிருந்தாவனத்திலுள்ள ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரின் கோவிலில் சாந்நித்தியம் திகழ்கிறது என்று அவர் கூறியபோது, அங்குள்ள கர்ப்பக்கிருகத்தில் பரமஹம்சதேவரின் அஸ்தி வைக்கப்பட்டுள்ளது என்று நான் தெரிவித்தேன். ராமகிருஷ்ண மிஷனைப் பற்றிக் கிருபாளு ராம்தாஸ் நன்கு அறிந்தவர் என்பது அவரது பேச்சிலிருந்து நன்கு தெரிந்தது.

பிறகு வால்மீகி பவனிலுள்ள அன்பர்களிடம் விடை பெற்றுக்கொண்டு கார்த்திகேயனும் நானும் நகரத்தார் சத்திரத்திற்குக் கிளம்பினோம். வழியில் பிர்லா மந்திருக்குச் செல்லும் எண்ணம் எனக்குத் தோன்றியது. கார்த்திகேயனுக்குச் சத்திரத்தில் வேலை இருந்ததனால், அவரைச் சைக்கிள் ரிக்ஷாவில் சத்திரத்திற்கு அனுப்பிவிட்டு நான் மட்டும் பிர்லா மந்திருக்கு நடந்து சென்றேன்.

[தொடரும்]

பகடை உருட்டும் ஓசையைக் கேட்கும்போதெல்லாம் நான் குடும்பம் முழுவதற்கும் சாவுமணி அடிக்கும் ஓசையைக் கேட்கிறேன். —ஜெரால்டு

அருள்நெறிக் கதை :

மயூரத்வஜனின் வீரம்

'நரேந்திரன்'

மகாராஜா யுதிஷ்டிரர் அச்வமேத யாகம் செய்யத் தீர்மானித்து யாகக் குதிரையை அனுப்பி வைத்தார். குதிரைக்குக் காவலாக ஸ்ரீகிருஷ்ணனும் அர்ஜுனனும் சென்றனர்.

அதே சமயத்தில் ரத்தினபுரியின் மன்னன் மயூரத்வஜரும் அச்வமேத யாகம் புரியும் எண்ணத்தோடு குதிரையை அனுப்பி, காவலுக்குத் தன் மகனுன தாம்ரத்வஜனையும் புறப்படச் சொன்னுன்.

மணிபூரில் இரு தரப்பினரும் சந்தித்துக் கொண்டனர். போர் மூண்டது. இறைவனின் திருவுளப்படி தாம்ரத்வஜன் அர்ஜுனனைத் தோற்கடித்துவிட்டு இரு குதிரைகளுடன் தன் தந்தையின் இருப்பிடத்தை அடைந்தான். மகனின் வீரச் செயலைக் கண்டு பாராட்டுவதற்குப் பதிலாக மயூரத்வஜனின் மனதில் வருத்தம் மேலிட்டது. மயூரத்வஜன் கண்ணபிரானின் சிறந்த பக்தன். எனவே பகவானைத் தோற்கடித்த விஷயத்தில் அவருக்கு மகிழ்ச்சி உண்டாகவில்லை.

போர் செய்த இடத்தில் மூர்ச்சித்து விழுந்து கிடந்த அர்ஜுனன் சிறிது நேரத்தில் கண் விழித்துப் பார்த்தான். தன் குதிரையைக் காணுததால் கோபத்துடன் எழுந்தான். ஒன்றுமறியாத குழந்தை போல நடிக்கும் கண்ணபிரான் தன் பக்தனுன அர்ஜுனனை மகிழ்விக்கத் திருவுள்ளம் கொண்டான்.

கண்ணன் அந்தணன் வேடம் பூண்டான். அர்ஜுனனைத் தன் சீடனுக்கிக் கொண்டு மயூரத்வஜனின் அரண்மனையை அடைந்தான். மயூரத்வஜன், வந்த இருவரின் பேரழகு மிக்க தோற்றப் பொலிவைக் கண்டு அதிசயித்தான். அவன், மிக்க மகிழ்ச்சியுடன் அவர்கள் இருவரையும் வரவேற்று வணங்குவதற்குள், வந்தவர்கள் மயூரத்வஜனைத் தடுத்து ஆசிகூறி வாழ்த்திஞர்கள். 'அவர்களின் பெருந்தன்மையைக் கண்டு உள்ளம் நெகிழ்ந்த மன்னன் வந்தவர்களின் உள்ளக்கிடக்கையை அறிய விரும்பினுன்.

மயூரத்வஜன் தாங்கள் வந்த காரணத்தைக் கேட்கவே கண்ணபிரான் மன்னனிடம், "அரசே! என் மகனை ஒரு சிங்கம் பிடித்துக்கொண்டு விட்டது. அதனிடம் என்னுடைய ஒரே மகனை விட்டுவிடும்படி எவ்வளவோ கொஞ்சிப் பார்த்தேன். என் மகனுக்குப் பதிலாக என்னையே வேண்டுமானுலும் எடுத்துக்கொள் என்று வேண்டினேன். அதற்கும் அந்தச் சிங்கம் உடன்படவில்லை. நீண்ட நேரம் நான் வேண்டிக்கொண்ட பிறகு, ஒரு நிபந்தனையுடன் அது ஒருவிதமாக என் மகனை விடுவதற்கு ஒப்புக்கொண்டது. 'மயூரத்வஜ மன்னன் தன் முழு விருப்பத்துடன் தன் உடலின் வலப் பக்கத்தைத் தன் மனைவி ஒரு புறத்திலும், மகன் மறு புறத்திலுமாக நின்றுகொண்டு இரண்டாக அறுத்துக் கொடுத்து, அதை நீ எடுத்துக் கொண்டு வந்து கொடுத்தால் நான் உன் மகனை விட்டுவிடுகிறேன்' என்பதே சிங்கம் இப்போது கூறியுள்ள நிபந்தனை" என்று கூறிஞன்.

மயூரத்வஜன் மிக்க மகிழ்ச்சியுடன் அந்தணரின் மகனை மீட்பதற்காகத் தன் உடலைத் தர முன் வந்தான். மன்னனின் மனைவியோ, கணவனின் உடலில் மனைவி பாதியாகையால் (அர்த்தாங்கினி) தன் உடலைத் தருவதாகக் கூறினுள்.

ஆனுல் கண்ணபிரானே தான் விரும்புவது மன்னனின் உடலின் வலப் பாகத்தையே என்று கூறி, மனைவி இடப் பாகத்திற்கு உரியவளே என்று அவள் கோரிக்கையை மறுத்து விட்டான்.

தாம்ரத்வஜன், "நான் என் தந்தைக்குச் சமமானவன். ஆகவே என் உடலை எடுத்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லிக் கண்ணபிரானிடம் வேண்டினுன். ஆனுல் கண்ணபிரான் அந்த யோசனையையும் ஏற்றுக்கொள்ளவில்லை.

முடிவில் மயூரத்வஜன், "கோவிந்தா, மாதவா, முகுந்தா!" என்று பகவானைத் துதித்தபடியே இரண்டு தூண்களுக்கிடையில் வந்து அமர்ந்து கொண்டான். மயூரத்வஜனின் மனைவியும் மகனும் மன்னனின் உடலை அறுக்கத் தொடங்கினர். தலை அறுபட்டு முடிந்தவுடன் மன்னனின் இடது கண்ணிலிருந்து நீர் வழியத் தொடங்கியது. அதைப்பார்த்தவுடனே அந்தணர், "வருத்தத்துடன் அளிக்கப்படும் பொருள் எனக்கு வேண்டாம்" என்று கூவினுர்.

ஆனுல் மயூரத்வஜனே அந்தணரைப் பார்த்து, "சுவாமி! கண்ணீர் வழிவதற்குக் காரணம் வருத்தமல்ல. உடலை அறுப்பதால் ஏற்படும் வலியினுல் கண்ணீர் வரவில்லை. என் இடப் பக்க உடலின்

வருத்தம் என்னவென்றால், ஒரே சமயத்தில் ஒன்றாகவே பிறந்து வளர்ந்த போதிலும் வலப் பக்க உடலுடன் கூடத் தானும் அந்தணருக்கு உதவ முடியவில்லையே என்பதுதான். அது காரணமாகவே இடக் கண் நீர் வடிக்கிறது'' என்றான்.

மன்னன் கூறியதைக் கேட்டதும் மாதவன் மிக்க மகிழ்ச்சி அடைந்தான். அவன் அந்தணர் வடிவம் நீங்கிச் சங்கு சக்கரங்களுடன் நீலமேகசியாமளனாகக் காட்சியளித்துத் தாமரைக் கையால் மயூரத்வஜனின் உடலைத் தொட்டான். அதன் பயனாக முன்பை விடவும் அதிக இளமையும் ஒளியும் பொருந்திய உடல் கிடைக்கப்பெற்ற மயூரத்வஜன் மாயவனைப் பலவாறு போற்றித் துதித்தான்.

கண்ணபிரான் தன் திருவடியில் விழுந்து வணங்கித் துதித்த மயூரத்வஜனை எழுப்பி ஆசீர்வதித்து விரும்பிய வரம் கேட்கும்படி பணித்தான். மன்னன், என்றென்றும் தான் இறையன்பு கொண்டவனாகத் திகழ அருள்பாலிக்கும்படியும், இனி இத்தகைய சோதனையை வேறு எந்த அடியாருக்கும் செய்ய வேண்டாம் என்றும் பிரார்த்தித்தான்.

கண்ணபிரான் மயூரத்வஜன் விரும்பிய வரங்களை மனமுவந்து வழங்கினான். பிறகு அவன், மன்னனின் விருப்பப்படி அந்த அரண்மனையில் மூன்று நாள் விருந்தினனாகத் தங்கிவிட்டுக் குதிரையையும் அழைத்துக்கொண்டு அர்ஜுனனுடன் அங்கிருந்து மேலே பயணத்தைத் தொடர்ந்தான். ✲

குருவும் சீடரும்

காசிப்பூரில் ஸ்ரீ ராமகிருஷ்ணர் கடும் நோய் வாய்ப்பட்டிருந்தார். அவருடைய சீடர்களாகிய இளைஞர்களில் பெரும்பாலோர் அவருடனேயே தங்கி குருதேவருக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்துகொண்டிருந்தார்கள். ஒரு சிலர் ஸ்ரீ பரமஹம்ச தேவரைக் காண வருவதும் வீட்டிற்குச் செல்வதுமாக இருந்தார்கள்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் நோய்வாய்ப்பட்டபோது, அரிய சேவை செய்தவர் சசிபூஷணர்.

அவர் ஒரு சமயம் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய கழிவுக் கலயம் ஒன்றைச் சுத்தப்படுத்திக்கொண்டு வருவதற்காக வெளியே சென்றிருந்தார். அது குளிர்காலம். கலயத்தைச் சுத்தப்படுத்திய பிறகு சசி, குருதேவர் இருந்த இடத்திற்கு வந்தார். அப்போது அவருடைய கண்ணுக்கு ஒரு காட்சித் தட்டுப்பட்டது. அதைப் பார்த்தவுடனே சசியின் நெஞ்சம் துடிதுடித்தது.

படுக்கையை விட்டு எழுந்திருக்கவும் சக்தி இல்லாமல், கடும் நோயால் வருந்திப் படுத்த படுக்கையாக இருந்த ஸ்ரீ ராமகிருஷ்ணர், கோல் ஊன்றித் தட்டுத்தடுமாறி நடந்துகொண்டிருந்தார். அவர் செல்லும் திசையை நோக்கிய சசிபூஷணருக்கு, போர்வை ஒன்று எடுக்கத்தான் குருதேவர் அவ்வளவு கஷ்டப்பட்டுச் சென்றுகொண்டிருக்கிறார் என்பது புரிந்துவிட்டது.

'குருதேவருக்குப் போர்வை தேவைப்பட்டிருக்கிறது. அவருக்கு ஏதாவது தேவையா என்று கேட்டறிந்த பிறகு நாம் கலயத்தை எடுத்துச் சென்றிருந்தால், குருதேவர் இப்போது இப்படி வருந்த நேரிட்டிருக்காதே' என்று சசி நினைத்தார். இவ்வளவும் குருதேவரைப் பார்த்த ஒரு கணத்தில் அவரது உள்ளத்தில் தோன்றியது.

மறுகணம் அவர் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் ஓடோடிச் சென்றார்.

''தேவரீர் போர்வை ஒன்று கொடுத்துவிட்டுப் போ என்று சொல்லியிருந்தால், நான் கொடுத்துவிட்டுப் போயிருக்க மாட்டேனா? நானும் என் கவனக் குறைவால் தங்களுக்கு என்ன வேண்டும் என்று கேட்காமல் போய்விட்டேனே'' என்று வருத்தத்துடன் தெரிவித்துக்கொண்டார் சசி.

குருதேவர் சொன்னார்: ''குழந்தாய், குளிர்காலமாக இருக்கிறதே! நீ போதிய போர்வை இல்லாமல் வெளியே சென்றாய் அல்லவா? அப்போது குளிர் என்னைத் தாக்கியதைப் போல உணர்ந்தேன். உனக்குப் போர்வை எடுத்துத் தருவதற்காகத்தான் நான் எழுந்தேன்.''

ஸ்ரீ ராமகிருஷ்ணர் தம் சீடர்களிடம் கொண்டிருந்த அன்பு எத்தகையது என்பதை இந்த நிகழ்ச்சி தெரிவிக்கிறது அல்லவா? இதைப் போலவேதான் தம்முடைய சீடர்கள் ஒவ்வொருவரிடமும் ஸ்ரீராமகிருஷ்ணர் தனிப்பட்ட அன்பு கொண்டிருந்தார்.

- விவேகானந்ததாசன்

ஸத்குரு

சுவாமி அமரானந்தர்

ஏகம் என்பது ஒன்று என்ற பொருள் கொண்டது. உள்ளது ஒரே பொருள் என்று தெளிவது பேரறிவாகும். 'ஒன்ருகக் காண்பது ஞானம், பலவாகக் காண்பது அஞ்ஞானம்' என்கிருர் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர்.

உலகம் பலவாருகத் தென்பட்டாலும் அது அந்த ஏகமான மெய்ப்பொருளின் தோற்றமேயாகும். உள்ள ஒரே பொருளை மக்கள் அவரவர் மனப்பாங்குக்கு ஏற்பப் பொருள்படுத்துகிருர்கள் பூங்கா அழகாக இருக்கிறது. அது சும்மா இருக்கும் சோம்பேறிக்குப் படுத்து உறங்க நிழல் தரும் இடமாகக் காண்கிறது. உல்லாச புருஷன் ஒருவன் அதன் அழகையும் அங்கு வீசும் மெல்லிய பூங்காற்றையும் அனுபவிக்கிருன். கலைஞன் அதைக் கண்டு அதன் அழகை வைத்துக் கட்டுரை புனைகிருன். கவிஞன் கவிபாடுகிருன். பக்தன் அதிலுள்ள மலர்களை ஆண்டவனுக்குப் படைத்துப் பரவசமடைகிருன். ஞானியோ அங்குள்ள புல் செடி கொடி மரங்களெல்லாம் ஒரே தாவர வர்க்கம் என்று ஒன்ருகக் காண்கிருன். மேலும், அது பரம்பொருளின் புறத்தோற்றம் என்றும் உணருகிருன்.

புல் முதல் பிரம்மா வரையில் உள்ள ஜீவாத்மாக்களும் பரமாத்மனும் ஒன்று என்பது தத்வமஸி மகாவாக்கியத்தின் மூலம் உணர்த்தப்பட்டது. ஒன்றென உணரும் ஞானகுரு எப்போதும் ஏகமாகவே இருக்கிருர்.

நித்யம் என்பது சாச்வதமானது, அழிவில்லாதமது என்று பொருள்படுகிறது. ஏகமாயுள்ள ஒரு பொருள் அழிவில்லாததாகவும் இருக்கிறது. மகாப் பிரளயத்தில் உலகங்களெல்லாம் அழிந்து பரப்பிரம்மத்தில் மறைந்தபோதும், பரப்பிரம்மம் அவற்றை உள்ளடக்கித் 'தான் அழிவில்லாமல் இருக்கிறது. அந்தப் பேரறிவான பெரும் பொருள் தன்னில் தானய், இமைப்பொழுதும் மாருமல், பிரக்ஞையோடு இருக்கிறது. இதை யோக நித்திரை என்றும் சொல்லலாம். பிரளயத்தில் எங்கும் நீர் பெருக்கெடுத்துப் பிரபஞ்சமெல்லாம் அதில் மறைந்தபோதும், மகாவிஷ்ணு ஆலிலை மேல் பள்ளிகொண்டு, அந்த நீரின்மேல் மிதந்துகொண்டு யோக நித்திரை செய்கிருர் என்பதும் இந்தத் தத்துவத்தை விளக்குவதேயாகும்.

எல்லாம் மறைந்த பிறகும் எஞ்சுவது நித்தியமான பரம்பொருள் ஒன்றேயாகும். சாதாரண நித்திரையிலும் ஒருவாறு இதை உணரலாம். அயர்ந்த தூக்கத்தில் அனைத்தும் மறைந்துவிடுகிறது. ஜீவாத்மன் சுகபுருஷனுக, தன்னில் தானய், நுண்ணிய நிலையில் தன் சுபாவமான ஆனந்தத்தை அனுபவிக்கிருன். அப்போதும் அந்த ஆத்மா மறைந்து போவதில்லை. எழுந்தவுடன் அதன் நினைவாக, 'ஆனந்தமாகத் தூங்கினேன்' என்கிருன். தூக்கத்தில் ஒன்றும் தெரியவில்லை என்று அறியாமையினுல் மூடப்பட்டிருக்கிருன். யோக நித்திரையில் அறியாமை அனைத்தும் நீங்கி, அறிவின் உச்ச நிலையில் இருக்கிருன்.

'ஜீவாத்மனுக்கும் அழிவில்லை' என்பதை 'என்று நீ அன்று நான் உன்னடிமையல்லவோ' என்பதன் மூலம் தாயுமானவர் உணர்த்துகிருர். பிரளயத்திலும் ஜீவபோதம் அழிந்து போவதில்லை. அதாவது மறைந்த நிலையில் அவ்யக்தமாக இருக்கிறது. பொருள்களும் ஒன்று இன்னென்ருக மாறுபடுகிறதே தவிர அழிந்து போவதில்லை. எனவே, உள்ள ஒரு பொருள் பலவாகத் தென்பட்டாலும் மறைந்திருப்பதாகக் காணப்பட்டாலும், அது என்றும் மாருமல் அழியாமல் நித்தியமாக, சாச்வதமாக இருக்கிறது. இதை உணர்த்தும் குரு எப்போதும் நித்யமான தெளிந்த ஞானியாக இருக்கிருர்.

விமலம் என்ற சொல்லுக்கு மலமற்றது என்பது பொருள். மலம் என்பது கழிக்கப்பட வேண்டிய அழுக்குப் பொருள் ஆகும். உள்ள ஒரு பொருள் ஒப்பற்ற தனிப் பொருளாகவும், பூரணப் பொருளாகவும், நித்தியமாகவும் இருக்கும்போது கழிவுப் பொருள் என்பது ஏது ?

மனிதனுடைய மலம் கழிக்கப்படும்போது அது பன்றிக்கு விருப்பமான உணவு ஆகிவிடுகிறது. பன்றியின் மலம் பயிர்களுக்கு நல்ல எருவாகி, அதன் தானியங்கள் மீண்டும் மனிதனுக்கு ஆகாரமாகின்றன. பசுவின் கழிவுப் பொருளான

சாணம் புனிதப் பொருளாகக் கருதப்பட்டு விடு மெழுகவும், சுட்டு விபூதியாக்கி அணிந்துகொள்ளவும் உபயோகப்படுகிறது. எனவே எந்தப் பொருளை யார் கழிவு என்று சொல்ல முடியும்? விவகார நிலையில் மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது அவை கழிவுப்பொருள்களாகத் தென்படுகின்றன. கழிக்க வேண்டியவையாகவும் இருக்கின்றன.

சைவ சித்தாந்தப்படி ஆணவம் கன்மம் மாயை என்பவை மும்மலங்கள் ஆகும். இந்த மூன்று மலங்களும் செம்பொருளாகிய சிவம் என்பதைக் காணவிடாமல் மறைத்துக்கொண்டிருக்கின்றன. சித்தத்தில் உள்ள இந்த மலங்கள் அறும்போது அவன் சிவம் ஆகிவிடுகிறான்.

தான் அல்லாத ஒன்றைத் தான் என்று கருதுவது ஆணவம். விவேகத்தினால் அதை விலக்கிவிடலாம். மெய்ப்பொருளின் கருணைப்பிரவாக அருளை நாடும்போது கன்மம் ஒரு கோடி முன்னே செய்திருந்தாலும் ஒரு கல்லை விசினால் எல்லாக் காகங்களும் பறந்தோடுவதைப் போலக் கன்மங்கள் மறைகின்றன. மாயையின் மயக்கம் நீங்கும் போது 'நீயே நான், நானே நீ' என்ற ஞானம் உண்டாகிறது. ஸத்குரு மலங்களிலிருந்து விடுபட்டுத் தெளிந்த பிரம்மஞானியாக ஆகியிருக்கிறார்.

அசலம் என்பது சலியாதது, அசையாதது என்று பொருள்படுகிறது. மலைகளுக்கு இந்தப் பெயர் வழக்கத்தில் இருக்கிறது. அருணாசலம், பொதிகாசலம், விந்தியாசலம், ஹிமாசலம் என்பவை இதை விளக்குகின்றன. இவை அசையாதவை போலத் தென்பட்டாலும் உண்மையில் அசையாதவை அல்ல. வெப்பமும் குளிர்ச்சியும் இவற்றைச் சிறிது சிறிதாகக் கரையச் செய்கின்றன. பூகம்பங்கள் இவற்றைத் தகர்க்கின்றன. மெய்ப்பொருள் ஒன்றே ஆடாத அசையாத செம்பொருள் ஆகும். எனவே, 'அருள் நிதி தர வரும் ஆனந்த மலையே!' என்று அது போற்றப்படுகிறது.

ஆகாயம் ஏனைய பூதங்களையெல்லாம் தாங்கிக்கொண்டிருந்தாலும் அது களங்கமடைவதில்லை. ஆகாயத்தில் இடிமின்னல் போன்றவை ஏற்பட்டாலும், குண்டுகள் வெடித்து விமானங்கள் சண்டை செய்தாலும் அவை அதைப் பாதிப்பதில்லை. சிதாகாசமான பரம்பொருள் மற்ற அனைத்தையும் தாங்கிக்கொண்டிருந்தாலும் அது களங்கமடைவதில்லை.

கண்ணாடி போலத் தூய்மையடைந்த ஞானியின் உள்ளத்திலும் பிரபஞ்சத்தின் எந்தச் செயலும் பதிவை உண்டாக்குவதில்லை. 'சத்துவம் நிறைந்தவனும், பேரறிஞனும், ஐயத்தை அகற்றியவனும் ஆகிய தியாகியானவன் துன்பவினையை வெறுக்கமாட்டான், இன்ப வினையை விரும்பமாட்டான்' என்று கீதா வாக்கியம் இதை விளக்குகிறது. விருப்பு வெறுப்பு இன்றி இருக்கும் குருவின் உள்ளம் என்றுமே சலனமடைவதில்லை.

ஸர்வதிஸாக்ஷிபூதம் இது எல்லாவற்றிற்கும் சாட்சியாக இருக்கிறது. பிரஜ்ஞானம், அதாவது பேரறிவு ஒன்றே எல்லாவற்றிற்கும் சாட்சியாக இருக்க முடியும். இதை மனித வாழ்க்கையின் நடைமுறையை வைத்தே புரிந்துகொள்ளலாம்.

ஜாக்கிரத் அவஸ்தை அதாவது விழிப்புநிலையில் ஐந்து புற இந்திரியங்களின் வாயிலாகப் பிரபஞ்சத்தைப் பொருள் படுத்துகிறோம். நான் என்னும் ஒரு பொருள் எதிரே தெரிகிற ஒரு மரத்தைக் கண்ணால் பார்த்து, மரமாகத் தெரிந்து கொண்டதற்குச் சாட்சியாக இருக்கிறது. அடுத்து ஸ்வப்னம் அதாவது கனவு நிலை வருகிறது. இங்கே புற இந்திரியங்கள் அடங்கி, அக இந்திரியங்கள் ஐந்தும் விழிப்புநிலையைப் போன்று அகத்திலே பணியாற்றுகின்றன. கனவிலும் ஜீவன் நடமாடுகிறான், கண்கள் பார்க்கின்றன, காதுகள் கேட்கின்றன, மற்றப் புலன்களும் வேலை செய்கின்றன. இதையும் அந்த நான் என்னும் பொருள் சாட்சியாக இருந்து பார்த்துக்கொண்டிருந்து. எழுந்தவுடன் கனவை நினைவூட்டுகிறது. இனி, சுழுப்தி அதாவது அயர்ந்த தூக்க நிலையில் புலன்கள் அனைத்தும் அவற்றின் கர்த்தாவான மனதுடன் சேர்ந்து ஒடுங்கிவிடுகின்றன.

ஆழ்ந்த தூக்கத்தில் இருக்கும்போது கருவிகரணங்கள் ஓய்ந்த சமாதிநிலை போன்று ஆகிவிடுகிறது, 'நித்ரா ஸமாதிஸ்திதி:' என்பது சங்கர பகவத்பாதரின் வாக்கியம். தூங்கி எழுந்து, நான் 'நன்றாகத் தூங்கினேன்' என்று சொல்வதற்கு அந்த நானே சாட்சியாக இருக்கிறது. தூக்கத்தில் நான் என்பது சாட்சியாக இருப்பினும் அது நுண்ணிய நிலையில் இருக்கிறது. அறியாமையால் மறைக்கப்பட்டிருக்கிறது. நல்ல தூக்கத்தில் ஒன்றும் தெரியவில்லை என்று சொல்லுவதும் அநுபவமாக இருக்கிறது.

சமாதிநிலையில் அந்த நான் முற்றிலும் பிரஜ்ஞை வடிவாக இருந்து அனைத்தையும் சாட்சியாகக்

காண்கிறது. அந்தராத்மா சகல ஜனமனசாக்ஷி பூதமாக இருக்கிறது. அந்தராத்மாவுக்குத் தெரியாமல் யாரும் எந்தக் காரியமும் செய்ய இயலாது. யாரும் காணுதபோது தவறு செய்ய முயற்சி செய்யலாம். ஆனுல் யாரும் காணுமல் தீயில் கையை வைத்தால் அது சுடாமல் இருக்காது. தீ உடனே சுடுகிறது. தீய கருமங்கள் நின்று சுடும். மனச்சாட்சிக்குப் புறம்பாக நடந்து கொள்ளாத பேரறிஞர்கள் ஸர்வதீஸாக்ஷி பூதமாக இருக்கிருர்கள்.

பாவாதீதம் – பாவ என்ற சொல் எண்ணம் அல்லது எண்ணங்களின் கூட்டமாகிய மனதைக் குறிக்கிறது. அதீதம் என்பது அப்பாற்பட்டது என்று முன்பே பார்த்தோம். பாவாதீதம் என்பது மனதிற்கு அப்பாற்பட்டது. அதுவே மனதற்ற பரிசுத்த நிலையாகும்.

பாழாய்ப் போன மனம் அடங்க மாட்டேன் என்கிறதே என்பது எல்லாச் சாதகர்களுடைய அனுபவமாகும். பல பிறவிகளில் விஷயசுகம் அனுபவித்த புலன்கள் அந்தப் பழக்கத்தினுலே புறத்தே போய் அனுபவிக்க முயலுகின்றன.

திருட்டுத்தனம் வாய்ந்த மாடு மாற்ருன் தோட்டத்தில் புல் மேய விரும்பி அங்குப் புகுந்துவிடுகிறது. தன் கட்டுத் துறையில் நல்ல புல் இருப்பதை அது கவனிப்பதில்லை. அதைப் பலமாகக் கட்டுத் துறையில் கட்டி வைத்து அங்கே நல்ல தீவனம் இருப்பதைக் காட்டிக் கொடுத்தால் அந்த மாடு அந்தத் திருட்டுப் பழக்கத்தை நாளடைவில் விட்டுவிடும். அது போலவே மனம் என்னும் மாட்டுக்குத் தன் அகத்திலேயே பேரானந்தம் இருப்பது தெரிவதில்லை. புறத்தில் ஓடவே முயலுகிறது. அதை அடக்கி, அகத்தில் இருக்கும் பேரின்பத்தைக் காட்டிக் கொடுத்தால் நாளடைவில் அது சரிப்பட்டுவிடும். இவ்விதம் மனதைக் கட்டி மனதற்ற பரிசுத்த நிலையாகப் பூரணத்தில் நிலைத்தவர்களே ஸத்குருக்களாக வந்தமைகிருர்கள்.

த்ரிகுணரஹிதம் என்பதற்கு மூன்று குணங்களிலிருந்துய வடுபட்டது என்பது பொருள். சகிதம் என்பது கூடியிருத்தல். ரஹிதம் அதன் எதிர்மறைச் சொல்.

பிரகிருதியை அதாவது பிரபஞ்சத்தைத் தொகுத்துப் பார்த்தால் அது முற்றிலும் முக்குணமாக இருப்பது தென்படும். ஜீவாத்மாக்கள் யாவும் சத்துவம் ரஜஸ் தமஸ் என்ற முக்குணங்களில் கட்டுண்டு தங்கள் வாழ்க்கையை நடத்துகின்றனர். சத்துவ குணம் மேலிட்டிருக்கும்போது அதன் வாழ்க்கை அமைதியாகவும், உண்மை பேசுவதாகவும், அறிவு மிகுந்ததாகவும், நிதானமுள்ளதாகவும், எந்தக் காரியத்தையும் குற்றமின்றிச் செய்வதாகவும், பிறருக்கு உபகாரமாகவும், மெய்ப்பொருள் நாட்டம் உடையதாகவும் இருக்கிறது.

ரஜோகுண வசப்பட்ட ஜீவன் ஓடியாடித் திரிந்து கருமங்கள் செய்வதில் ஆர்வமுள்ளவனுகவும், ஆசை மிகுதியால் உந்தப்பட்ட அமைதியற்றவனுகவும் வாழ்கிருன். தமோ குணமுள்ளவனே காரியங்கள் செய்வதில் பிரியமும் முயற்சியும் இல்லாதவனுக, அடிக்கடி தவறுகள் செய்பவனுக, பிறருக்குத் தன்னுல் துன்பம் ஏற்படுவதைப் பொருள் படுத்தாதவனுக, மற்றவர்களுடைய ஏவலுக்கு ஆட்பட்டவனுக, தன் சுதந்திரமின்றித் தன் வாழ்க்கையை நஷ்டப்படுத்திக் கொள்ளுகிருன்.

சத்துவகுணம் சிறந்ததாக இருப்பினும் மூன்று குணங்களில் கட்டுண்டு கிடப்பது பந்தமேயாகும். குணங்களைக் கடந்து குணுதீதன் ஆவதே வாழ்க்கையின் இலட்சியம். இதை ஒரு கதையின் மூலம் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் விளக்குகிருர் :

ஒருவன் காட்டுவழியாகப் போய்க்கொண்டிருந்தான். வழியில் மூன்று திருடர்கள் அவனை மடக்கிப் பிடித்துக் கொண்டனர். அவனிடம் இருந்த பொருள்களை அவர்கள் பறித்துக் கொண்டார்கள். பிறகு முதல் திருடன், 'இவனை உயிருடன் வைத்திருப்பதில் என்ன லாபம்?' என்று சொல்லித் தன் கத்தியை உருவி அவனை வெட்டப்போனுன். அப்போது இரண்டாவது திருடன், 'இவனைக் கொல்வதால் லாபம் என்ன? கைகால்களைக் கட்டி ஒரு பக்கத்தில் போட்டுவிட்டுப் போகலாம்' என்ருன். உடனே அவர்கள் அப்படியே செய்து சாலையின் ஓரத்தில் அவனைப் போட்டுவிட்டுச் சென்றனர். அவர்கள் சிறிது தூரம் சென்றதும் மூன்ருவது திருடன் திரும்பி அவனிடம் வந்து, 'அப்பா! உனக்கு வலிக்கிறதா? நான் உன் கட்டுகளை அவிழ்த்து உன்னை விடுதலை செய்கிறேன், இரு' என்று சொல்லிக் கட்டுகளை அவிழ்த்துவிட்டு, 'என்னுடன் வா, வழியைக் காட்டுகிறேன்' என்று வெகுதூரம் அழைத்துப்போய், 'அதோ பார், உன் வீடு தெரிகிறது. இந்த வழியே சென்ருல் சீக்கிரம் வீடு போய்ச் சேருவாய்' என்ருன். இதைக் கேட்டதும் வழிப்போக்கன் நன்றியறிதலுடன், 'அப்பா, நீ எனக்குப் பெரிய உபகாரம் செய்திருக்கிருய்.

[தொடர்ச்சி 267-ம் பக்கம் பார்க்க]

காலைமுதல் இரவுவரை

வாகீசகலாநிதி கி. வா. ஜகந்நாதன்

இறைவனிடம் ஈடுபட்டவர்களுக்கு எதைப் பார்த்தாலும் அவனுடைய நினைவு எழும். வேப்பம் பழத்தைக் கண்டு சிவலிங்கத்தையும், தவளையின் ஒலியைக் கேட்டு ஹரஹர என்ற முழக்கத்தையும் நினைத்து உருகினான் வரகுண பாண்டியன். உவர் மண்ணால் வெளுத்த மேனியை உடைய வண்ணானைக் கண்டு முழுநீறு பூசிய முனிவனாக வணங்கினார், சேரமான் பெருமாள் நாயனார்.

காதல் மிகுந்தவர்கள் எப்போதும் தம் காதலரை எண்ணிக் கொண்டிருப்பார்கள். எதைப் பார்த்தாலும் அவருடைய நினைவே எழும். இப்படி உள்ள மனநிலையை, நோக்குவ எல்லாம் அவையே போறல்' என்ற மெய்ப்பாடாகச் சொல்வர் புலவர். காதலும் பக்தியும் பல திறங்களில் பொதுவான அநுபவங்களை உடையன. அதனால்தான் பக்தர்கள் ஆண்டவனைக் காதலனாக வைத்துத் தம்மைக் காதலியாக்கிக் கொண்டு தெய்விகக் காதற்பாடல்களைப் பாடியிருக்கிறார்கள்.

காரைக்காலம்மையார் இறைவனிடம் முறுகிய பக்தி பூண்டு எப்போதும் அவனுடைய திருவுருவத்தையும் அருட் குணங்களையும் எண்ணி இன்புறுபவர். கவிபாடும் புலமையுடையவராதலின் இறைவனைப் பற்றி எண்ணும் எண்ணங்களெல்லாம் கவி வடிவில் அமைகின்றன. இறைவனோடு நெருங்கிப் பேசும் உரிமை அவருக்கு உண்டு. 'ஏன் சுவாமி, இப்படியெல்லாம் செய்கிறீர்?' என்று உரிமையோடு கேட்பார். அவனுடைய அருளை எண்ணி எண்ணி உருகுவார்.

இப்போது அம்மையார் காலத்தைப் பற்றிய சிந்தனையில் ஈடுபடுகிறார். எல்லையில்லாத காலத்தைத் துண்டு துண்டாக வெட்டி அளவு காட்டிப் பெயர் வைத்திருக்கிறார்கள். மன்வந்தரம், சதுர்யுகம், யுகம், வருஷம், மாதம், வாரம், நாள், நாழிகை, விநாடி என்றெல்லாம் காலத்தின் பெரிய சிறிய கூறுபாடுகளை நாம் அறிவோம். ஒவ்வொரு நாளும் நமக்குத் தெளிவாகத் தெரியும் காலப்பகுதி. விடிந்து, பகலாகி மாலையாகி இருள் வந்து நாள் முடிவு பெறுகிறது. ஒரு நாளில் தெளிவாகக் காலை நேரம் தெரிகிறது. கடும்பகலாகிய நடுப்பகலும் தெரிகிறது. பிறகு மாலை வருகிறது. தொடர்ந்து இரவு வருகிறது. இதனோடு அந்த நாள் முடிகிறது.

சோமவாரம் சிவபெருமானுக்கு உரியது. ஆகையால் திங்களன்று அவன் நினைவு எழ நியாயம் உண்டு. திருவாதிரை நட்சத்திரம் இறைவன் திருநடனம் புரிந்த நாள். அப்போதும் அவன் நினைவு உண்டாகலாம். சிவராத்திரி வந்தால் சொல்லவே வேண்டாம்; அந்தப் பெயரே சிவபெருமானை நினைப்பூட்டிக் கொண்டிருக்கிறது.

ஆனால் எந்த விதமான சிறப்பும் இல்லாத சாமானிய நாளில் சிவபெருமானை நினைக்க வழி உண்டா? எல்லா நாட்களுக்கும் சிவபெருமானோடு தொடர்புடைய புராணக் கதைகள் உண்டா? அப்படி இல்லை. ஆனாலும் எந்த நாளானாலும் சிவபெருமானை எண்ணுவதற்கு வகை உண்டு; மனம் இருந்தால் வழி உண்டு.



காரைக்கால் அம்மையார் நமக்கு வழி சொல்லித் தருகிறார்.

இருள் போய் விடிந்துவிட்டது. சூரியோதயம் ஆகிவிட்டது. இந்த நாள் தொடங்கி விட்டது. கீழ்வானத்தில் இன்னும் சூரியன் முழுமையாக வெளி வரவில்லை. ஆனாலும் அவன் ஆழ்கடலிலிருந்து எட்டிப் பார்ப்பது போலப் பாதி வடிவுடன் தோன்றுகிறான். அப்போது கீழ்வானம் முழுவதும் செம்மை ஒளி. கீழ்த் திசையாகிய உமையென்னும் கன்னி இலேசான செம்பொடியை முகம் முழுதும்

பூசிக்கொண்டு நடுவே பளிச்சென்று சிவப்புக் குங்குமத்தை இட்டுக் கொண்டிருக்கிறாளோ!

காலைச் சிவப்பிலே ஒளியும் ஊக்கமும் மலர்ச்சியும் நம்பிக்கையும் தோன்றுகின்றன. அந்த உதயச் சிவப்பிலே இறைவனைக் காண்கிறார் அம்மையார். இறைவன் செம்மேனி அம்மான் அல்லவா? அவன் திருமேனி காலையில் சூரியோதயத்தில் வானில் செந்நிறம் படர்ந்திருக்கும் காட்சியைப் போலத் தோன்றுகிறதாம்.

காலையே போன்று இலங்கும் மேனி

விடிந்த பிறகு எழுந்து கீழ்வானத்தைப் பார்த்துக் கும்பிடலாம் போல் இருக்கிறது. அங்கே எம் பெருமானுடைய திருமேனியைக் காணும் கண்ணும் கருத்தும் இருந்தால் உடனே கும்பிடத்தானே தோன்றும்?

காலைநேரம் போய்ப் பகல் வருகிறது. கதிரவன் மெல்ல மெல்ல வானத்தில் ஏறுகிறான். அவன் மேலே ஏற ஏறச் செவ்வண்ண ஒளி போய் எங்கும் ஒரே வெள்ளொளி பரவுகிறது. கடும்பகலாகிய நண்பகல் வேளையில் எங்கே பார்த்தாலும் கதிரவனுடைய கதிர்கள் வெண்ணிறமாக ஒளிவீசுகின்றன.

அந்தக் கடும்பகலில் சிவபெருமானைக் காண்கிறார் அம்மையார். இறைவன் செம்மேனியனாக இருந்தும், திருமேனி முழுதும் திருநீற்றைப் பூசியிருக்கிறான். அதனால் பால்வண்ண மேனிப் பிரானாகக் காட்சி தருகிறான். ஒரே வெள்ளை. முழு நீறுபூசிய முதல்வன் இப்போது வெண்ணிற மேனிப் பிரானாகத் தோன்றுகிறான். காலையில் தோன்றிய செம்மேனி மேல் திருநீறு பூசி வெண்ணிறம் கப்பிக் கொண்டது போல இந்த நண்பகல் வெயில் எங்கும் வெண்ணிறத்தைப் பூசியிருக்கிறது. ஆகவே கடும் பகல் வெண்ணீற்றை நினைக்கச் செய்கிறது.

கடும்பகலின் வேலையே போன்று இலங்கும் வெண்ணீறு

என்று பாடுகிறார் அம்மையார்.

இதோ அந்தி மாலை வந்துவிட்டது. இப்போது மேல்வானம் ஒரே குங்குமச் சிவப்பாகச் சிவந்திருக்கிறது. அந்தி மாலைக்கு அடையாளம் செக்கர் வானம். அந்த நேரத்தில் இறைவனுடைய செஞ்சடை நினைவுக்கு வருகிறது அம்மையாருக்கு.

மாலையில் தாங்கு உருவே போலும் சடைக்கற்றை

அந்திமாலை கடந்து, இருள் வந்து விட்டது. எங்கும் இருள் படர்ந்து கவிகின்றது. கருமை அடர்ந்த இருள் இரவிலே உலகத்தைப் போர்த்து மூடியிருக்கிறது. காலைச் செம்மையில் இறைவன் திருமேனியின் வண்ணத்தையும், நண்பகல் வெண்மையில் இறைவன் திருமேனியில் பூசிய வெண்ணீற்றின் வெண்மையையும், அந்திச் செவ்வானத்தில் இறைவன் சடைக்கற்றையையும் நினைத்த அம்மையார், இரவிருளைக் காணும்போது எதை நினைக்கிறார்?

இறைவனுடைய திருக்கழுத்தில் ஆலகால நஞ்சு இருக்கிறது. அது ஒரே கறுப்பு. இந்த இரவின் இருள் அந்தத் திருக்கழுத்தை நினைப்பூட்டுகிறது.

மற்று அவற்கு
வீங்கு இருளே போலும் மிடறு.

காலை, கடும்பகல், மாலை, இரவு என்ற நான்கு வேளைகளிலும் இறைவனை நினைக்கும் வழியைக் காரைக்காலம்மையார் நமக்குச் சொல்லிக் கொடுத்து விட்டார். காலைச் செவ்வண்ண மேனிச் சிவ பெருமானே என்றும், நண்பகல் வெண்மையை யுடைய நீறு பூசும் நின்மலனே என்றும், அந்திச் செவ்வானச் சடையுடைய அப்பனே என்றும், இரவிருளனைய நீலகண்டப் பெருமானே என்றும் நான்கு வேளையிலும் முறையே இறைவனைப் போற்றி வழிபடலாம். காரைக்கால் அம்மையார் பாடல் இந்த உபாயத்தை நமக்குக் கற்பிக்கிறது.

காலையே போன்றிலங்கும் மேனி கடும்பகலின்
வேலையே போன்றிலங்கும் வெண்ணீறு,—மாலையின்
தாங்குருவே போலும் சடைக்கற்றை, மற்று அவற்கு
வீங்கிருளே போலும் மிடறு.

[சிவபெருமானாகிய அவனுக்கு உதய வேளையாகிய காலை நேரத்தைப் போலச் சிவப்பாகத் திருமேனி விளங்கும்; கடும்பகலாகிய நண்பகல் வேளையைப் போல அவன் திருமேனியில் அணிந்த வெண்மையான திருநீறு விளங்கும்; மாலைநேரத்தில் வானம் தாங்கும் சிவப்பு உருவம் போல அவன் சடையின் தொகுதி தோன்றும்; மிக்க இருளைப் போல அவனுடைய நீலகண்டம் தோன்றும்.

அவற்கு என்பதை ஒவ்வொரு வாக்கியத்திலும் கூட்டிப் பொருள் செய்ய வேண்டும். அவன் என்பது சிவபெருமானைச் சுட்டியது; உலகறி சுட்டு. கடும் பகல்–நடுப்பகல். வேலை-வேளை. கடும் பகலின் வேலை-கடும்பகலாகிய வேளை; இன்: வேண்டா வழிச் சாரியை. மாலையின் உரு, தாங்கு உரு, மற்று; அசை. வீங்கு–மிக்க.]

இது அற்புதத் திருவந்தாதியில் வரும் 65-ஆவது பாடல். ★

கல்வியும் சமுதாயமும்

சுவாமி விவேகானந்தர்



1

புதிய இந்தியா ஒரு புறம் சொல்கிறது : “ மேலை நாட்டுக் கருத்துக்கள், மொழி, உணவு, உடை, நடை முறைகள் ஆகியவைகளை நாம் பின்பற்றினால்தான், மேலை நாட்டினரைப் போன்று நாமும் உறுதியும் ஆற்றலும் உடையவர்களாவோம்.”

மறுபுறம் பழைய இந்தியா சொல்கிறது : “ முட்டாள்கள் ! மற்றவர்களுடைய கருத்துக்களைக் குருட்டுத்தனமாகப் பின்பற்றுவதால் ஒருநாளும் அவை ஒருவனுக்குச் சொந்தமாகிவிடா. உழைத்துப் பெற்றாலன்றி எதுவும் உனக்குச் சொந்தமாகி விடாது. புலியின் தோலைப் போர்த்திக்கொண்ட பசு, புலியாகிவிடுமா ? ”

புதிய இந்தியா ஒரு புறம் சொல்கிறது : “ மேலை நாடுகள் செய்வது நிச்சயம் சரியாகத்தான் இருக்கும். இல்லாவிட்டால் அவை எப்படி இவ்வளவு பெருமை உடையவையாக ஆகியிருக்க முடியும் ? ”

மறுபுறம் பழைய இந்தியா சொல்கிறது : “ மின்னலின் ஒளி மிக நன்றாகத்தான் பிரகாசிக்கும். ஆனால் அது ஒரு கணம்தான். குழந்தைகளே ! உங்களின் கண்களை அது கூசச் செய்வதைக் கவனியுங்கள். எச்சரிக்கையாக இருங்கள் ! ”

2

மேலை நாடுகளிலுள்ள சமுதாய வாழ்க்கை முறை கணீரென்று சிரிப்பதைப் போன்றதாகும். ஆனால் அதன் அடியில் அழுகையும் புலம்பலும் மறைந்திருக்கின்றன. அதன் முடிவும் தேம்பியழுவதாகவே அமையப்போகிறது. மேற்புறத்தில் மட்டுமே வேடிக்கையும் விளையாட்டும் அங்குக் காணப்படுகின்றன. ஆனால் உண்மையில் அளவில்லாத துயரமே அதில் நிறைந்திருக்கிறது.

மாறாக இந்த நாட்டிலோ வெளிப்படையாக இருளும் துயரமும் காணப்படுகின்றன. ஆனால் அவைகளின் அடியில் கவலையின்மையும் மகிழ்ச்சியும் மறைந்திருக்கின்றன.

3

மக்களிடையே உண்மையான சமத்துவம் என்பது எப்போதுமே இருந்ததில்லை; இனி இருக்கப் போவதும் இல்லை. இங்கு நாம் அனைவரும் சமமானவர்களாக எப்படி இருக்க முடியும் ? அப்படிப்பட்ட சாத்தியமே இல்லாத ஒரு சமத்துவம் மரணத்தையே குறிப்பிடுகிறது. ஒரு மனிதனுக்கும் மற்றொரு மனிதனுக்கும் இடையில் வேறுபாட்டை எது உண்டாக்குகிறது? இந்த வேறுபாடு பெரும்பாலும் அறிவாற்றல் காரணமாக ஏற்படுகிறது. நாம் யாவரும் ஒரே அளவிலான அறிவாற்றலுடன்தான் பிறந்திருக்கிறோம் என்று தற்காலத்தில் பைத்தியக்காரனைத் தவிர வேறு எவரும் சொல்லமாட்டார்கள்.

4

வாழ்க்கையில் எனக்குள்ள ஒரே பேராவல் இதுதான்: ஒவ்வொருவரின் இருப்பிடத்துக்கும் உயர்ந்த கருத்துக்களைக் கொண்டு செல்லக் கூடிய ஓர் இயக்கத்தை ஏற்படுத்தி அதை நடத்தி வைக்க வேண்டும். அதன் பிறகு ஆண்களும் பெண்களும் தங்கள் விதியைத் தாங்களே நிர்ணயித்துக் கொள்ளட்டும். வாழ்க்கையின் மிக முக்கியமான பிரச்னை குறித்து நம் முன்னோர்களும் மற்ற நாட்டவர்களும் கொண்டிருந்த கருத்துக்களை அவர்கள் தெரிந்து கொள்ளட்டும். குறிப்பாக, இப்போது மற்ற நாட்டவர்கள் என்ன செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதை அவர்கள் பார்த்து அதன் பிறகு அவர்கள் ஒரு முடிவுக்கு வரட்டும்.

இரசாயனப் பொருள்களை ஒன்றுசேர்த்து வைப்பதுதான் நமது வேலையாகும். இயற்கையின் நியதியை யொட்டி அவை தாமாகவே படிகங்களாக மாறுதலடைந்துவிடும். கடுமையாக உழை. உறுதியாக இரு. பாமர மக்களின் மதத்துக்கு ஊறு விளைவிக்காமல் அவர்களை முன்னேற்றமடையச் செய்வதே உன் இலட்சியமாக இருக்கட்டும்.

5

'மக்கட்பேருலோ, செல்வத்தாலோ அல்ல. தியாகத்தால் மட்டுமே அமரநிலை அடையப்படுகிறது' என்ற இந்த அறைகூவலை உபநிஷதங்கள் காலம் முதல் உலகிற்கு நாம் விடுத்து வந்திருக்கிறோம். வாழையடி வாழையாக, இனத்திற்குப் பின் இனமாக, பல இனங்கள் இந்த அறைகூவலை ஏற்றுக்கொண்டன. ஆசைகளை அடிப்படையாகக் கொண்டு, இந்த வாழ்க்கைப் புதிரைத் தீர்க்க தங்களால் ஆனவரையிலும் . அவை முயற்சி செய்தன. ஆனால் அவை எல்லாம் தோல்வியையே அடைந்திருக்கின்றன.

பழைய இனங்கள் எல்லாம் பொன்னாசை, அதிகாரவெறி ஆகியவைகளின் விளைவாகிய கொடுமை, துன்பம் முதலியவைகளின் சுமை தாங்க முடியாமல் அழிந்தே போயிருக்கின்றன. புதிய இனங்களோ அதே சுமைகளால் தள்ளாடி விழும் நிலையில் இருக்கின்றன.

இந்த நிலையில் வெற்றி பெறப்போவது அமைதியா? போரா? பொறுமையா? பொறுமையின்மையா?; நன்மையா? தீமையா?; தோள்வலிமையா? அறிவு வலிமையா?; இலௌகிகமா? ஆன்மிகமா?-வாழ்க்கைப் போராட்டத்தில் தப்பிப் பிழைக்கப் போவது எது என்ற கேள்விகளுக்குப் புதிய இனங்கள் இனிமேல்தான் பதிலைத் தீர்மானிக்க வேண்டிய நிலையில் இருக்கின்றன.

ஆனால் நீண்ட நெடுங்காலத்திற்கு முன்பே நாம் நம்முடைய பிரச்னையைத் தீர்த்திருக்கிறோம். தீராத இந்தப் பிரச்னைக்கு நாம் அளித்த விடை, உலக ஆசை இல்லாமலிருத்தல் அதாவது தியாகம் என்பதுதான்.

நாம் மூடநம்பிக்கையிலிருந்து விடுபட்டவர்கள் தாம் என்றாலும், முன்பு கூறியது மதவாழ்க்கையைச் சேர்ந்த மூடநம்பிக்கையாக இருந்தது. பின்னால் குறிப்பிட்ட இது, விஞ்ஞானரீதியான மூடநம்பிக்கையாக இருக்கிறது. மதத்தைச் சேர்ந்த மூடநம்பிக்கைகளின் மூலமாகத்தான் உயிரோட்டம் தரக்கூடிய ஆன்மிகக் கருத்துக்கள் வெளிவந்திருக்கின்றன. விஞ்ஞான ரீதியான இன்றைய இந்த மூடநம்பிக்கையின் மூலமாகவே காமமும் பேராசையும் விளைந்திருக்கின்றன. முதலில் கூறிய மூடநம்பிக்கை கடவுள் வழிபாடாக இருந்தது. பின்னால் கூறிய இதுவோ அருவருக்கத் தக்க செல்வம், புகழ், அதிகாரம் ஆகியவற்றின் வழிபாடாக இருக்கிறது. இதுதான் இந்த இரண்டு மூடநம்பிக்கைகளுக்கும் உள்ள வேறுபாடு.

6

மக்கள் உன்னைப் புகழ்ந்தாலும் சரி, இகழ்ந்தாலும் சரி; அதிர்ஷ்ட தேவதை உனக்கு அருள் புரியட்டும்! அல்லது புரியாமல் போகட்டும், உன் உடல் இன்றைக்கே வீழ்ந்து போகட்டும்—நீ மட்டும் உண்மை என்னும் பாதையிலிருந்து அணுவளவேனும் பிறழ்ந்து செல்லாமல் இருப்பதில் கவனமாக இரு.

அமைதியாகிய துறைமுகத்தை ஒருவன் அடைவதற்குள் எத்தனை எத்தனை பெரும் புயல்களையும் அலைகளையும் சமாளித்து வரவேண்டியிருக்கிறது!

மனிதன் எந்த அளவுக்கு உயர்ந்தவனாகிறானோ அந்த அளவுக்குத் தக்கபடி, அவன் கடுமையான சோதனைகளையும் கடந்து சென்றாக வேண்டும். *

[265ஆம் பக்கத் தொடர்ச்சி]

உனக்கு ஏதேனும் சம்மானம் செய்ய வேண்டும். நீ என்னுடன் என் வீட்டுக்கு வரக்கூடாதா?' என்று கேட்டான். அதற்குத் திருடன், 'நான்வரக்கூடாது. வந்தால் போலீஸார் வந்து பிடித்துக்கொள்வார்கள்' என்று சொல்லித் தன் வழியே போய்விட்டான்.

இந்த உலகம்தான் அந்தக் காடு. சத்துவம் ரஜஸ் தமஸ் ஆகிய மேற்கூறிய மூன்று குணங்களும் மூன்று திருடர்கள். ஜீவன்தான் காட்டு வழியே போன பிரயாணி. ஆத்மஞானம் அவனிடம் இருந்த பொருள். தமோகுணமும் ரஜோகுணமும் உலக பந்தங்களாகிய சங்கிலியால் அவனைக் கட்டுகின்றன. உலக பந்தங்களிலிருந்து சத்துவகுணம் அவனைக் காப்பாற்றுகிறது. சத்துவ குணத்தைச் சரணடையும் ஜீவன் தமோ ரஜோ குணங்களின் பயன்களாகிய காமக் குரோதாதி மாயையிலிருந்து விடுதலையடைகிறான். உலகப் பந்தங்களிலிருந்து ஜீவனைக் கரையேற்றுவது சத்துவகுணம்தான். என்றாலும் அதுவும் ஒரு திருடனே. பரமபதத்துக்குச் செல்லும் வழிவரையில் ஒருவனை அது அழைத்துச் சென்று, 'அதோ உன் வீட்டைப் பார்' என்று சொல்லி மறைந்து விடுகிறது. சத்துவ குணமும் பரமபதத்தின் அருகில் செல்லாது. இந்த மூன்று குணங்களையும் கடந்து திரிகுண ரஹிதர்களாக இருப்பவர்கள்தாம் ஆசாரிய புருஷர்களாக விளங்குவதற்கு உரிய தகுதியைப் பெற்றிருக்கிறார்கள்.

இத்தகைய பேரியல்புகள் வாய்க்கப்பெற்றவர்களாக மனித உடலில் பிரம்மஞானிகள் ஆங்காங்கே இலைமறைகாய்கள் போல வாழ்ந்து வருகிறார்கள். அவர்களே விடுதலை விரும்பும் முமுட்சுக்களுக்கு ஸத்குரு ஆகிறார்கள். அவர்கள் வணக்கத்துக்கு உரியவர்கள் ஆகின்றனர்.

ஸத்குரு தன்னின் சகல இயல்பும்
தத்பொரு ளதனின் தகுதி யாகுமே

[முற்றும்]

சுமேரியரின் கடவுளரும் கோட்பாடுகளும்

'வால்மீகி'

சுமேரியர் எனப்படும் மக்கள் மிகமிகப் புராதனமான நாகரிகமும் சமய வழிபாடுகளும் உடைய மக்கள். எகிப்தியரையும் இந்தியரையும் போலவே இவர்களுடைய நாகரிகமும் சுமார் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது. மத்தியக் கிழக்கில் உள்ள மெஸபடோமியாவிலிருந்து அனடோலயா வரையிலும் இந்த மக்கள் வியாபித்து வாழ்ந்தார்கள் என்று கூறலாம். இயற்கையை ஆதாரமாகக் கொண்ட இவர்களது கடவுளர்களும், சமயக்கோட்பாடுகளும் படிப்படியான நாகரிக முதிர்ச்சியை அனுசரித்துப் பல மாறுதல்களை அவ்வப்போது அடைந்திருக்கின்றன.

இந்து ஆலயங்களில் பூஜா காலங்களிலே பிரபஞ்ச சிருஷ்டியை வர்ணிக்கும் புருஷசூக்தம், ஸ்ரீ சூக்தம் முதலியவை ஓதப்படுவதைப் போல, புராதன சுமேரியர்களின் சமயச் சடங்குகளிலும் இது மாதிரியான சில சூக்தங்கள் ஓதப்பட்டு வந்தன. அவைகளைக் கொண்டு பிரபஞ்ச உற்பத்தியைப் பற்றிச் சுமேரியர் என்ன கருத்துக் கொண்டிருந்தார்கள் என்பதை ஓரளவிற்கு நாம் ஊகிக்கலாம். சொர்க்கம், பூமி, பாதாளம் ஆகிய மூன்று உலகங்களையும் இணைத்தபடி அமரத்துவம் வாய்ந்த புனித விருக்ஷம் ஒன்று இருக்கிறது என்ற நம்பிக்கை பல நாட்டுப் புராதன மக்களிடையிலும் நிலவி வந்திருப்பதைப் போல் சுமேரியர்களும் நம்பியிருக்கிறார்கள். இந்த நம்பிக்கையின் அறிகுறியாக அவர்களது ஆலயங்களின் முன்னால் வானளாவி உயர்ந்த ஒரு மரம் அல்லது கம்பை அவர்கள் நட்டு வைப்பது வழக்கம். இந்து சமயக் கோவில்களில் தென்படும் த்வஜஸ்தம்பம் (அதாவது கொடியேற்றம் செய்யும் கொடிமரம்) போல இது புராதனச் சுமேரியர்களின் கோவில் ஒவ்வொன்றிலும் கண்டிப்பாக இருக்கும். இந்துக்களின் மும்மூர்த்திகளைச் சுற்றி எல்லா இந்துக் கடவுளர்களும் அமைந்திருப்பதைப் போலவே சுமேரியர் வழிபட்ட எல்லாக் கடவுளர்களுக்கும் மேலாக மும்மூர்த்திகள் என்று கருதக்கூடிய மூன்று முக்கியக் கடவுளர் இருந்தார்கள்.

மும்மூர்த்திகள்

இம மூவரில் ஒருவர் விண்ணின் கடவுளான அன் (AN), இரண்டாவது கடவுள் வாயுதேவனைப் போல் காற்றின் கடவுள் என்லில் (ENLIL), மூன்றாவது கடவுள் பெண்தெய்வமான நின்ஹுர்ஷாக் (NIN-HURSOK) என்பவர்களாவர். இவர்களுக்கிடையில் நிலத்தின் கடவுளாகிய என்கி (ENKI) என்பவரும் இடையிடையே தோன்றுகிறார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் பிரபஞ்ச உற்பத்திக் காலத்தில் தேவர்களும் அசுரர்களுமாகச் சேர்ந்து திருப்பாற்கடலைக் கடைந்ததாகக் கூறும் இந்து சமயக் கதையொன்றை நாம் நினைவில் கொள்ள வேண்டும். திருமால் ஆமையாக நின்று அடியிலே தாங்க, மந்தரமலையை மத்தாகவும், வாசுகி என்ற பாம்பைக் கயிறாகவும் கொண்டு தேவர்களும் அசுரர்களும் திருப்பாற்கடலைக் கடைந்தபோது திருமகளும், ஐராவதமும், கௌஸ்துப மணியும், ஆலகால விஷமும் இன்னும் எத்தனையோ பொருள்களும், அப்ஸர ஸ்திரீகளும் திருப்பாற்கடலிலிருந்து வெளிப்பட்டதாக இந்தக் கதை கூறுகிறது. அதாவது பிரபஞ்ச உற்பத்தியின்போது சில பொருள்களும் தேவதைகளும் செல்வத்தின் அதிதேவதையான மகாலட்சுமியும்கூடச் சமுத்திரத்திலிருந்து உற்பத்தியானார்கள் என்பதுதான் திருப்பாற்கடலைக் கடைந்த கதையின் தத்துவம்.

இதே போலச் சுமேரியர் சமுத்திரத்தை நம்மு (NAMMU) என்ற தாய்க்கடவுளாகக் கருதி இந்தக் கடவுளையே நிலக் கடவுள் என்கி (ENKI) உட்பட எல்லாக் கடவுளர்களுடைய தெய்வத் தாயாக நினைத்து வந்திருக்கிறார்கள். இந்தக் கடவுளர்களின் நிலக்கடவுளர் என்கியும் விண்ணின் கடவுள் அன் என்பவரும் ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தைகளாகக் கருதப்பட்டு வந்திருக்கின்றனர். இந்த இரட்டைக் குழந்தைகளை வானம் வேறு, பூமி வேறு என்று இரண்டாகப் பிரிக்கப் பிறந்த கடவுள்தான் காற்றுக் கடவுளான என்லில் கடவுள். ஒரு காலத்தில் விண்ணும் மண்ணும் ஒட்டிக்கொண்டிருந்து

பிறகுதான் பிரிக்கப்பட்டன என்ற கருத்து, பல நாடுகளிலும் நிலவி வந்திருப்பது இங்குக் குறிப்பிடத் தகுந்தது.

விண்ணும் மண்ணும் பிறந்து, பிரிந்து, இடையிலே வாயுமண்டலம் ஏற்பட்ட பிறகுதான் எல்லாம் தோன்ற ஆரம்பித்தன என்ற பொதுவான கருத்தை மேற்படி கூற்று பிரதிபலிப்பதாக இருக்கிறது.

அரசன் எவ்வழியோ குடிகளும் அவ்வழி

விண்ணும் பூமியும் ஏற்பட்டதும் பூமிக்கு அடியிலே பாதாளத்தைத் தோற்றுவித்து, அதற்கு எரிஷ்கிகால் என்ற ஒரு பெண்கடவுளையும் தோற்றுவித்தார்கள். இதன்பிறகு இந்த மூன்று உலகங்களையும் இணைக்கும் புனித விருக்ஷம் உண்டாயிற்று. விண் கடவுள், நிலக் கடவுள் ஆகிய இருவரும் ஆண்கள் பாதாளக் கடவுளான எரிஷ்கிகால் பெண்கடவுள். எல்லாக் கடவுளருக்கும் தாய் என்று கருதப்படும் 'நம்மு' என்ற ஒரு பெண்தெய்வம் உண்டென்றும் மேலே கூறினேம். இந்தக் கடைசியான பெண் கடவுளுக்கு நன்கு, நின்ஹஸாக், நின்மா, அருரு என்று பல பெயர்கள் உண்டு. பல கடவுளர்களும் பிறந்தது இந்தப் பெண் கடவுளருக்குத்தான். கடைசியாகப் படைக்கப்பட்டவர்கள் மனிதர்கள். **கடவுளர்களுக்குப் பணிபுரியும் ஒரே ஒரு காரணத்துக்காக மட்டுமே மனிதர்கள் படைக்கப் பட்டதாகச்** சுமேரியப் பழங்கதைகள் கூறுகின்றன. இந்து சமயத்திலும் வேறு சில சமயங்களிலும் காணப்படுவதைப் போன்ற பிரளய அழிவும், வைவஸ்வத மனுவைப் போல ஒரே ஒரு தம்பதிகள் மட்டும் பிரளயத்திலிருந்து தப்பி அவர்களைக் கொண்டு திரும்பவும் சிருஷ்டி ஆரம்பித்த வரலாறும் சுமேரியரிடையே உண்டு. என்றாலும் சுமேரிய சமயவரலாறுகள் எல்லாவற்றிலும் ஒரு விஷயம் முக்கியமாக வலியுறுத்தப்படுகிறது. மனிதஜாதியின் முதல் இலட்சியமும் முக்கிய இலட்சியமும் கடவுளருக்குப் பணிபுரிவதைத் தவிர வேறு எதுவுமில்லை என்பதை எல்லா வரலாறுகளும் குறிப்பாக எடுத்துக் கூறுகின்றன.

பாபிலோனியா

அரசியலுக்கும் சமயத்துக்கும் இடையில் எப்போதுமே நெருங்கிய தொடர்பு உண்டு. அரசன் எவ்வழியோ குடிகள் அவ்வழி என்பார்கள். இந்தியாவை எடுத்துக்கொண்டால் அசோகர் காலத்தில் இந்து சமயம் சற்றே க்ஷீண தசையடைந்து பௌத்தம் பரவியது. அசோகனுக்குப் பிறகு வந்த மன்னர்கள் பௌத்த சமயத்துக்கு அசோகன் அளித்த அளவுக்கு ஆதரவு அளிக்காமையினுல் பௌத்த சமயம் நலியத் தொடங்கி இந்து சமயம் மீண்டும் தலைதூக்கியது. மொகலாயர்களின் ஆட்சிக் காலத்தில் இஸ்லாமிய சமயத்திற்கு மட்டுமே நாட்டில் செல்வாக்கு இருந்தது. அக்பர் போன்ற சமய சமரசவாதிகள் அரியாசனத்தை அலங்கரித்தபோது இந்து சமயம் இழந்தமதிப்பைத் திரும்பப் பெற்றது. ஐரோப்பியர்களின் வருகை தன்னுடன் கிறிஸ்தவ சமயத்தையும் இந்தியாவிற்குக் கொண்டு வந்தது. இப்படிச் சமயத்தின் ஏற்றத் தாழ்வுகள் ஆட்சிப்பீடத்தை அனுசரித்து இருந்து வந்திருப்பதை இந்தியாவில் மட்டுமின்றி உலகின் எல்லா நாடுகளிலுமே நாம் காணக்கூடியதாயிருக்கிறது.

கி.மு. 1900ஆம் ஆண்டளவில் பாபிலோனியாவில் சுமேரியர்களின் ஆதிக்கம் குன்றி வேறு இரண்டு செமிட்டிக் வம்சத்தார்களின் ஆதிக்கம் ஏற்படவே சமயக் கோட்பாடுகளிலும் மாற்றங்கள் ஏற்படலாயின. செமிடிக் சந்ததியினர் சுமேரியர்களின் பழைய சமயக் கடவுளர்களை அறவே ஒழித்து விடாமல் தங்களுடைய சமயக் கோட்பாடுகளில் அந்தக் கடவுளருக்கும் இடமளித்துப் புதிய தத்துவங்களைப் பரப்பலாயினர். அவர்கள் தங்களது கடவுள் மார்டுக் (MARDUK) என்பவரைப் பெருங் கடவுளாக்கி அவரது பெருமையை மேலும் வலியுறுத்தும் வகையில் சுமேரியர்களின் கடவுளர்களைப் பாவித்தார்கள்.

செமிடிக் சிருஷ்டி தத்துவம்

இவர்களுடைய நம்பிக்கையின்படி ஆரம்பத்தில் நன்னீர் உப்புநீர் ஆகிய இரண்டு மட்டுமே இருந்தன. அவற்றில் சகல ஜீவராசிகளின் வித்துகளும் இருந்தன. அவற்றிலிருந்து கடவுளர் ஆண் பெண் ஜோடிகளாக ஒரு ஜோடிக்குப் பின் மற்ருெரு ஜோடியாகப் பிறந்தார்கள். இவர்களிலே அனு என்ற பெண்ணின் கடவுளும் அவரது பிள்ளை என்கியா என்ற கடவுளும் முக்கியமானவர்கள். ஆரம்பத்தில் குறிப்பிட்ட நன்னீர் 'அப்ஸு' என்ற கடவுளாகவும், உப்புநீர் டியாமட் (TEAMET) என்ற கடவுளாகவும் வர்ணிக்கப்பட்டனர். அப்ஸு என்ற நன்னீரிலிருந்துதான் எல்லாக் கடவுளருக்கும் பெரிய கடவுளான மர்டுக் தோன்றினுர்.

உப்புநீர்க் கடவுளுக்கும் நன்னீர்க் கடவுளுக்குமிடையில் பல போராட்டங்கள் நடந்தன. உப்புநீரிலிருந்து தோன்றிய அசுரர்களோடு நன்னீரி

விருந்து தோன்றிய கடவுளர் பல்லாண்டுக் காலம் கடும் போர் செய்தார்கள். தேவாசுர யுத்தத்தில் தேவர்களின் சேனைக்கு முருகன் தலைமை தாங்கியதைப் போல, செமிடிக் கடவுளரின் படைக்கு மர்டுக் என்ற கடவுள் தலைமை வகித்து அசுரர்களை ஒழித்து வீராதிவீரராக விளங்கிக் கடவுளர்களில் முதற் கடவுளானார். அசுரர்கள் எல்லோரும் சிறைப் படுத்தப்பட்டார்கள். உவர்நீர்க் கடவுளாகிய டியாமட் கொல்லப்பட்டாள். அவள் இரண்டாகப் பிளக்கப்பட்டு, ஒரு பாகம் உயரக் கொண்டுபோய் ஆகாயமாகக் கவிழ்த்து வைக்கப்பட்டது. மற்றப் பாகம் பூமியாகியது. அவளுடைய தலை மலைகளாயின. கண்ணிலிருந்து டைகிரிஸ், ஈப்ரேட்ஸ் என்ற இரண்டு நதிகள் தோன்றி நீர்ப் பெருக்கெடுத்து ஓடின. அவளுடைய மார்பிலிருந்து செழுமையான காடுகளைக் கொண்ட இரு பெரிய குன்றுகள் வளர்ந்தன.

இதன் பிறகு மனித சிருஷ்டியைப் பற்றிப் பேசப் படுகிறது. டியாமட் என்ற உவர்நீர்க் கடவுள் பல அசுரர்களைத் தோற்றுவித்ததோடு பல கடவுளர்களும் அவளுக்குப் பிறந்தனர். அந்தக் கடவுளரில் ஒருவரான கிங்கூ (KINGU) என்பவர் கொல்லப் பட்டு அவருடைய இரத்தத்திலிருந்து மனிதஜாதி சிருஷ்டிக்கப்பட்டதாம். இத்தனை காலமும் சுறுசுறுப்பாகக் கடமையாற்றிய கடவுளர் ஓய்வுபெறவும் அவர்களுக்குப் பணிபுரியவுமே மனிதஜாதி தோற்றுவிக்கப்பட்டதென்று மனித சிருஷ்டிக்கு ஒரு காரணமும் கூறப்பட்டிருக்கிறது.

முக்கியக் கடவுளாகிய மர்டுக் உயிர் கொடுக்கும் சூரியனாகப் பல இடங்களில் வர்ணிக்கப்படுகிறார். இயற்கையிலே அதிகச் சக்தி வாய்ந்த சூரியன் எல்லா நாடுகளிலும் ஆதிமுதற் கடவுளாக இருந்திருப்பதைப் போல, செமிடிக் வகுப்பினரும் தங்கள் முக்கியக் கடவுளைச் சூரியனாகக் கருதி வந்திருக்கிறார்கள். ☆

புதிய புத்தகங்கள்

புத்தர்பிரான் அருளிய தம்மபதம்

[மொழிபெயர்ப்பும் குறிப்பும்: அ. லெ. நடராஜன், வெளியிட்டோர்: கஸ்தூர்பா காந்தி கன்யா குருகுலம், மகராஜபுரம், வேதாரண்யம். விலை: ரூ. 7]

சுவாமி விவேகானந்தர் கூறியது போல யாகம், பலி, சாதி முதலிய புறச் சடங்குகளே அதர்மமாக இந்து சமயத்தில் மலிந்தபோது, அவற்றை அழித்து ஞானத்தைப் பெருக்கும் இந்துசமயத்தின் 'சண்டைக்காரப் பிள்ளையாக (Rebellous child)' புத்தர் தோன்றினார். புத்த சமயம் என்ற வழியைக் கண்டுபிடித்து எல்லோரும் புத்தராகித் துன்பங்களிலிருந்து விடுபடும்படி அவர் போதித்தார். அவருடைய உடல்மறைவிற்குப் பின் இன்றும் அவருடைய நுண் உடம்பாக உலகில் அவர் உபதேசங்கள் நிற்கின்றன.

ஸ்ரீராமகிருஷ்ணர், 'பகவான், பக்தன், பாகவதம்' என்று கூறுவதையே புத்தர் 'புத்தம், தம்மம், சங்கம்' என்று கூறி அவற்றை மனிதன் சரணடைய வேண்டும் என்று கூறினார். 'தம்மம்' என்பது புத்தரின் உபதேசங்கள். அவை பாலி மொழியில் 'தம்மபதம்' என்ற பெயரோடு தொகுக்கப்பட்டு உலகின் பலவேறு மொழிகளிலும் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன. தமிழில் 'புத்தர்பிரான் அருளிய தம்மபதம்' என்ற பெயரில் திரு அ. லெ. நடராஜன் இப்போது மொழிபெயர்த்திருக்கிறார்.

புத்தசமயக் கருத்துக்கள் தமிழுக்குப் புதியன அல்ல. மணிமேகலையும் மற்றும் பல பௌத்த நூல்களும் தமிழில் உள்ளன. ஆனால் பாலி மொழியில் அமைந்த புத்தரின் தம்மபதத்தையும் அதன் விளக்கத்தையும் படிக்கும்போது புத்தரின் இதயத்தை அங்கே காண்கிறோம்.

மனிதகுலத்திடம் பெருங்கருணை கொண்டு புத்தர் கூறும் தம்மபத உபதேசங்கள் கீதையின் உபதேசங்கள் போல் நெஞ்சைத் தொடுகின்றன. குறளின் கருத்துக்கள் போல் சுருக்கமாகவும் நேராகவும் மனதில் பாய்கின்றன. தமிழில் ஏற்கனவே தம்மபதத்திற்கு மூன்று நான்கு மொழிபெயர்ப்புகள் வெளிவந்துள்ளன. ஆனால் அவை இப்போது விற்பனைக்குக் கிடைப்பதாகத் தெரியவில்லை. அந்த நிலையில் இந்த நூல் வெளியிடப்பட்டுள்ளது.

—ஏ. சுப்பிரமணியம்

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், சென்னை - 600 004

1979 ஆகஸ்ட் மாத நிகழ்ச்சிகள்

ஸ்ரீகிருஷ்ண ஜயந்தி :

14-8-79 செவ்வாய் : கோகுலாஷ்டமி—விசேஷ பூஜை (மாலை வழிபாட்டிற்குப் பிறகு)

19-8-79 ஞாயிறு : ஸ்ரீகிருஷ்ண ஜயந்தி பொதுக்கூட்டம்

தலைவர் : சுவாமி தபஸ்யானந்தர்

பேசுபவர் : டாக்டர் என். வீழிநாதன்

சத்சங்கம் : ஞாயிறுதோறும் மாலை 4 மணி முதல் 6-30 மணி வரை

4 மணி முதல் 4-30 மணி வரை
1. ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம பாராயணம் (12-8-79)
2. ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம பாராயணம் (5-8-79 & 26-8-79)

மாலை 4-30 மணி முதல் 5-30 மணி வரை சொற்பொழிவு (தமிழ்)

5-8-79	1.	ஸ்ரீமத் பாகவதம் திரு. 'அண்ணு' சுப்பிரமணியம்
12-8-79	2.	ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமம்—திரு வி. ஆர். கல்யாணசுந்தர சாஸ்திரிகள்
26-8-79	3.	ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம்—திரு வி. எஸ். வி. குருசுவாமி சாஸ்திரிகள்

மாலை 5-35 மணி முதல் 6-30 மணி வரை சுவாமி கபீரானந்தர் அவர்கள் ஸ்ரீமத் பகவத்கீதை என்னும் தலைப்பில் ஆகஸ்ட் 5, 12, 26 ஆகிய தேதிகளில் ஆங்கிலத்தில் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள்.

வாரநாட்களில் நடைபெறும் சொற்பொழிவுகள் (மாலை 5-45 மணிக்கு)

1. திங்கள்	ஸ்ரீ ராமகிருஷ்ண கதாமிர்தம்—சுவாமி அமிர்தானந்தர்
2. செவ்வாய்	நாரத பக்தி சூத்திரம் — சுவாமி கபீரானந்தர்
3. புதன்	கட உபநிஷதம் — சுவாமி அமலாத்மானந்தர்
4. வியாழன்	மகாபாரதம் — திரு 'அண்ணு' சுப்பிரமணியம்
5. வெள்ளி	ஸ்ரீ ராமகிருஷ்ணரின் உபதேசங்கள்—சுவாமி கமலாத்மானந்தர்

சிறப்புச் சொற்பொழிவுகள்: சனிக்கிழமைகளில் மாலை 5-45 மணிக்கு

11-8-79	ஸ்ரீமத் பாகவதம்—P. ராமகிருஷ்ணன்
18-8-79	இராமாயணம்—டாக்டர் என். வீழிநாதன்

விசேஷ தினங்கள் :

26-8-79 ஞாயிறு : அந்தர்யோகம் (சாதனை தினம்)

5-8-79 மாலை 7 மணிக்கு ஸ்ரீ சாரதா நாம சங்கீர்த்தனம்

4-8-79 & 18-8-79 ஆகிய ஏகாதசி தினங்களில் மாலை வழிபாட்டிற்குப் பிறகு ஸ்ரீராமநாம சங்கீர்த்தனம் நடைபெறும்.

12-8-79 மாலை 7 மணிக்கு	ராமகிருஷ்ண நாம சங்கீர்த்தனம்
19-8-79 மாலை 7 மணிக்கு	சியாம நாம சங்கீர்த்தனம்
26-8-79 மாலை 7 மணிக்கு	சிவநாம சங்கீர்த்தனம்
8-8-79 புதன்	சுவாமி நிரஞ்ஜனானந்த ஜயந்தி
21-8-79 செவ்வாய்	சுவாமி அத்வைதானந்த ஜயந்தி

வேறு சில நிகழ்ச்சிகள்:

மாலை 6-15 மணிக்கு சுவாமி ராகவேசானந்தர் அவர்கள் 3, 10, 17, 24, 31 ஆகிய தேதிகளில் ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாம பாராயணமும், பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் என்னும் தலைப்பில் சொற்பொழிவும் நிகழ்த்துவார். இடம் : இல. 18, 9-வது லேன், சாஸ்திரி நகர்

அனைவரையும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

தொலைபேசி : 71231

தலைவர்,

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், சென்னை-600 004

காந்தியடிகளின் பொன்மொழிகள்



❋ கடவுள் தம் பக்தர்களை மேலும் மேலும் சோதனை செய்துகொண்டே இருக்கிறார். ஆனால் அவர் பொறுமையின் எல்லையை மீறி ஒருபோதும் சோதனை செய்வது கிடையாது. தம் பக்தர்களைத் தாம் சோதிக்கும்போது, அந்தச் சோதனையைத் தாங்கக் கூடிய சக்தியையும் கடவுள் அவர்களுக்குக் கொடுக்கிறார்.

❋ வணக்கம் அல்லது பிரார்த்தனை உதடுகளால் நிறைவேற்றக் கூடிய காரியம் அல்ல; அது உள்ளத்தினால் நிறைவேற்றக் கூடிய காரியம் ஆகும். அதனால்தான் ஊமைகளும் திக்குவாய் உள்ளவர்களும், அறியாமையும் மூடத்தனம் உள்ளவர்களும்கூட பிறரைப் போலவே பிரார்த்தனை செய்யமுடியும். உள்ளம் நஞ்சாகவும் நாக்கு தேனாகவும் உள்ளவர்கள் செய்யக்கூடிய பிரார்த்தனை கடவுளின் செவிகளைத் தீண்டாது.

❋ ஒரு குடும்பத்தில் தப்புப் பண்ணும் குழந்தையைத் தகப்பன் அடிக்கும் போது, குழந்தை பழிக்குப் பழி வாங்க வேண்டும் என்று நினைப்பதில்லை. மகன் தந்தைக்குக் கீழ்ப்படியவே செய்கிறான். ஏன்? அடிபட்டதனால் அன்று; அடியின் பின்னணியில் உள்ள அன்பு காரணமாகத்தான். சமுதாயம் எப்படி ஆளப்பட வேண்டும் என்பதற்கு இதுவே உதாரணமாக இருக்கவேண்டும் என்பது என் அபிப்பிராயம். குடும்பத்துக்கு எது உண்மையோ அதுவே சமுதாயத்துக்கும் உண்மையாக இருக்கவேண்டும். சமுதாயம் என்பது பெரிய குடும்பமே ஒழிய வேறில்லை.

அசோகா பாக்குத்தூள் கம்பெனி பிரைவேட் லிமிடெட்
''அசோகா பாக்டரி'' தபால் பெட்டி நெ. 3702
11/234, டாக்டர் நஞ்ஜப்பா ரோடு
கோயமுத்தூர்-641 018